



மாலை 1. மணி 9.

# ஒரு தேசிய மாதப் பத்திரிகை.

ரா. நாராயணஸ்வாமி,
ஆசிரியர்.

பிரசுராலயம்:
உத்தமபாளையம்,
மதுரை ஜில்லா.

N29-1-9
198516

OFFICE OF THE REGISTRAR OF ... No. 22 OCT 1929

# போஷகர்கள்.

(தொடர்ச்சி.)

11. ஸ்ரீமான் T. V. K. காமராஜ பாண்டிய நாயக்கர் அவர்கள், ஜமீன்தார் & முனிசிபல் சேர்மன், போடிநாயக்கனூர்.

12. ,, உ. ம. சே. முகியித்தீன் பிள்ளை ராவுத்தர் அவர்கள், மானேஜர், T. C. P. A. ஏலச்சரக்கு விற்பனைக் கம்பெனி, Ltd., கோம்பை.

13. ,, ந. ராமராஜ் அவர்கள், மிராஸ்தார், தேவாரம்.


குறிப்பு:— போஷக சந்தா குறைந்தது ரூபாய் 100.

---

## விளம்பர விகிதம்.

| | | | |
|---|---|---|---|
| பக்கம் 1-க்கு | மாதம் 1-க்கு | ரூ. | 10—0—0 |
| ,, ½-க்கு | ,, | ,, | 5—8—0 |
| ,, ¼-க்கு | ,, | ,, | 3—0—0 |

¼ பக்கத்திற்குக் குறைந்த விளம்பரங்களை அனுமதிப்பதில்லை. விளம்பரத்திற்கு எப்பொழுதும் முன் பணம் அனுப்பவேண்டும். நீண்ட காலம் விளம்பரஞ் செய்வோர் மானேஜருக்கு எழுதித் தெரிந்துகொள்ளவும்.



OFFICE OF THE REGISTRAR
No.
22 OCT 1929
MADRAS

## படங்களுடன் வெளிவந்துலாவும் தேசீய மாஸிகை.

## பொருள் அடக்கம்.

தொடர் நிர். பக்க


1. இந்தியாவின் நிலை—ஆசிரியர், "பாரதி." ... 577
2. ஸ்வாமி விவேகாநந்தர் கடிதம் ... ... 583
3. பரீந்திர குமார கோஷ்—ஸ்ரீமாந் N. வேங்கடரமணன் [அவர்கள் ... 588
4. நூல் நிலைய இயக்கம்—ஸ்ரீமாந் S. K. வேம்பு அவர்கள் 595
5. வில்லியம் டெல்—திரு M. பொன்னுச்சாமி அவர்கள் 597
6. ஓர் கொலைஞனது காதலின் முடிவு—ஸ்ரீமாந் K. S. [மஹாதேவன் அவர்கள் ... 603
7. பர்மிய மாதர்கள்—ஸ்ரீமாந் கு. கோ. கிருஷ்ணன் அவர்கள் [B. Sc. (Hons) ... 612
8. கற்பகம்—ஸ்ரீமாந் E. V. சுப்ரமண்யன் அவர்கள் ... 621
9. இன்சூரன்ஸ்—திரு R. M. துரைச்சாமிபிள்ளை அவர்கள் 627
10. யதீந்திரரின் வெற்றி—ஸ்ரீமாந் தாமஸ் பாலையா அவர்கள் 632
11. இந்தியர் வாழ்வைப் பற்றி நான் ஏன் இங்கிலீஷில் எழுது [கிறேன்—(மொழிபெயர்ப்பு) ... 637
12. யதீந்திரரது தந்தையின் பிராயச்சித்தம் ... 644
13. ஆசிரியர் குறிப்புகள்: ... 645
    1. தமிழ் மாகாண மகாநாடு
    2. யதீந்திர நாத் தாஸரின் அரும் பெரும் தியாகம்
    3. சாரதாவின் பால்ய விவாகத் தடை மசோதா
    4. துறவி ஊ விஜயாவின் வீரம்
    5. சிறையில் தேச பக்தர்களது வாட்டம்
    6. பாலகுருவப்ப செட்டியாரவர்களின் மறைவு
    7. ஆர். பி. சேதுப் பிள்ளையவர்களுக்கு ஆசிரிய பதவி
    8. "மாடென் ரெவியூ"ப் பத்திராதிபருக்கு அபராதம்


### படம்.


1. ஸ்வாமி விவேகாநந்தர்.



ஸ்வாமி விவேகாநந்தா.

பாரதி

ஒரு மாதப் பத்திரிகை.

எல்லாரும் ஓர்குலம் எல்லாரும் ஓர்இனம்
எல்லாரும் இந்தியா மக்கள்
எல்லாரும் ஓர்நிறை எல்லாரும் ஓர்விலை
எல்லாரும் இந்நாட்டு மன்னர்.
(பாரதி.)

ஆசிரியர் : ரா. நாராயணஸ்வாமி.

| மாலை | உத்தமபாளையம் | மணி |
|---|---|---|
| 1 | 1929-ஞு செப்டெம்பர்மீ | 9 |

22 OCT 1929
MADRAS
198516

# இந்தியாவின் நிலை.

ரா. நாராயணஸ்வாமி,
ஆசிரியர், "பாரதி."

இந்தியா பண்டைத் தேசம். இந்தியாவை ஒரு கண்டம் என்றே சொல்லல் வேண்டும். ஏனெனில் இது எல்லா வகைகளிலும் அவ்வளவு சிறப்பு வாய்ந்தது.

நமது தாயகத்தின் புராதனப் பெருமைகளை அடிக்கடி "பாரதி"யில் எழுதி எழுதி அலுத்து விட்டோமாகையால் இனி இதில் அதிகமாக ஒன்றும் எழுதப் போவதில்லை. நமது தாய் நாடு பல விஷயங்களில் உச்சம் பெற்

திருப்பினும், உள் நாட்டுக் குழப்பங்களுக்கும், மதப்பிரிவு-துவேஷங்களுக்கும், அன்னியர் படையெடுப்புகளுக்கும் மத்தியகால இந்தியா இலக்காயிற்று. அன்னிய நாட்டினர் இங்கு வருகைக்கும் இவைகளே காரணங்களாயின.

புராதன காலம் போகட்டும்; மத்திய காலம் மறையட்டும்; இப்பொழுது நமது தேசத்தின் நிலையைச் சற்றுக் கவனிப்போம். மகமதியர்கள் இந்தியாவின்மீது படையெடுத்து வந்து இந்தியாவின் சில பாகங்களை ஜெயித்தார்களென்றாலும், அவர்கள் இந்நாட்டிலேயே தங்கிவிட்டதால் இந்நாட்டின் பொருள் இங்கேயே தங்கலாயிற்று. அவர்களும் தங்கள் ஜனன தேசத்தை மறந்து இந்தியாவை அபிமானித்து இந்தியாவையே தாயகமாகக் கொண்டு இன்று வரையில் வாழ்ந்து வருகிறார்கள். ஐரோப்பிய வியாபாரிகள் இங்கு வந்து வேரூன்றிய காலம் முதல் இந்நிமிஷம் வரை நாட்டின் செல்வத்தையெல்லாம் வடிகட்டிக்கொண்டு போகிறார்கள். வியாபாரம் செய்து சம்பாதித்துக் கொண்டுபோக வந்த ஐரோப்பியர்களில் ஆங்கிலேய வியாபாரிகள், தேசமிருந்த பலவீன நிலைமையைக் கண்டு, உள் நாட்டுச் சிற்றரசர்களோடு சேர்ந்து யுத்தம் செய்து, அப்படியும் இப்படியுமாய்த் திரிந்து இந்தியாவைப் பிடித்துக் கடைசியில் அடிமைப்படுத்தி விட்டார்கள்.

பிறகு நாட்டில் அநேக பஞ்சங்கள் உண்டாகி, எத்தனையோ ஜனங்கள் மாண்டார்கள். நாட்டை வறுமை வாட்ட ஆரம்பித்தது. அது இன்னும் நின்றபாடில்லை. நாட்டின் கலைகளும் கைத்தொழில்களும் அழிந்தன. ஜனங்களுள் கல்வி பரவவில்லை. இந்திய மக்கள் சுதந்திரமின்றித் திண்டாடினார்கள். இதைக்கண்ட தேசாபிமானிகளில் சிலர் காங்கிரஸ் சபை ஏற்படுத்தி, நாட்டின் விடுதலைக்காக வேலை செய்தார்கள். இது மெல்லென அநேக நன்மைகளை உண்டாக்கிக்கொண்டே வந்தது. காங்கிரஸில் ஒற்றுமையிருந்தபடியால் அது பலத்துடன் வேலை செய்தது. இச்சபை, இந்திய மக்களுக்குச் சுயராஜ்ய தாகத்தை உண்டாக்கிற்று. ஒத்துழையாமைக் காலத்தில் சுமார் 25,000 பேர்கள் சிறைக்குச் சென்றார்கள், அப்பொ



ழுது காங்கிரஸ் எவ்வளவு ஒற்றுமை! காங்கிரஸுக்கு எவ்வளவு மரியாதை! ஒத்துழையாமைக் காலத்தில் காங்கிரஸ் இந்தியாவின் மா பெருஞ் சபையாக விளங்கிற்று.

சமீப காலத்திலிருந்து வேற்றுமை அதிலும் நுழைந்துவிட்டது. இந்தியாவின் துக்கங்களும் துன்பங்களும் நாளுக்கு நாள் பெருகிக் கொண்டே வருகின்றன. சுயராஜ்யக் கட்சி, கிலாபத் சபை, மிதவாதக் கட்சி, ஜஸ்டிஸ், சுய மரியாதை, இந்து மகாசபை ஆகிய பல கட்சிகள் பிரிந்து வேலை செய்ய ஆரம்பித்தன. தேசத்தில் காட்டுத்தீப் போன்று பரவிக் கொண்டிருந்த தேசியம் தற்போது நாட்டில் வேற்றுமையினால் பலங் குன்றிவிட்டது. ஹிந்து முஸ்லீம் பிணக்குகளும் மதச் சண்டைகளும் பல் வேறு கட்சிகளும் பல அபிப்பிராய பேதங்களும் அடிக்கடி தோன்றிக்கொண்டேயிருக்கின்றன. நேரு யாதாஸ்தின் விவாதம் ஒருபக்கம்; பூரண சுயேச்சைக் கிளர்ச்சி இன்னொரு பக்கம். இதுவன்றி பிறப்பால் உயர்வு தாழ்வை அநியாயமாய் இடைக்காலத்தில் ஏற்படுத்தியிருப்பதை அநேகர் போற்றி அதை இன்றும் வளர்க்கிறார்கள். உயர்ந்த ஜாதியார் என்போர் ஜாதி இறுமாப்புக்கொண்டு தாழ்ந்த ஜாதியார்களுக்குச் செய்துவரும் இன்னல்களைச் சொல்லி முடியாது. இதற்குத் தாழ்ந்த வகுப்பார்கள் உயர்ந்த ஜாதியார்களின் மீது கண்டனங்கள் செய்துவருகிறார்கள். பழைய காலத்தில் அல்ல, இடையில் பாழும் ஜாதிப் பிரிவினை எப்படியோ ஏற்பட்டுவிட்டது. அதைப் பற்றி இப்பொழுது பேச்சில்லை. காலத்துக்குத் தக்கபடி அநாவசியமான கெட்ட பழக்கங்களை மாற்ற வேண்டும்.

நமது நாட்டிலுள்ள செல்வமெல்லாம் அயல்நாட்டிற்குப் போய்விட்டபடியால், போகிறபடியால், நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் உண்டாகி ஜனங்களை வதைக்கின்றது. படித்தவர்களிடையிலும் இத்திண்டாட்டம் ஆரம்பித்திருக்கிறது. பொதுவாகச் சொல்லுமிடத்து, பசிநோய் நமது நாட்டில் வெகு வேகமாய்ப் பரவிக்கொண்டு வருகிறது. கலாசாலைகளில் உயர்தர அடிமைக் கல்வி மாணவர்களுக்குப் புகட்டப் பெறுவதால், மாணவர்களுக்குச்

சுதந்திரமும், தன்னம்பிக்கையும், முயற்சியில் வல்லமையும் உண்டாகவில்லை. நாளுக்குநாள் ஜாதிகள் பெருத்துக்கொண்டு போகின்றன. "தாங்கள்தான் உயர்ந்த ஜாதி" என்று கர்வம் கொள்ளுகிறார்கள். சரி இப்படி ஒவ்வொருவரும் சொன்னால், யார் பெரிய குலம்? வைதீகக் கொடுமைகள் விருத்தியாகித் தேசாபிவிருத்தியைத் தடுக்கின்றன. பால்ய விவாகங்கள் பெருகி, விதவைகள் அதிகரித்து வருகின்றார்கள். பெண்ணுக்கேற்ற கணவன் கிடைக்காமலும் கணவனுக்கேற்ற பெண் கிடைக்காமலும் விவாகச் சிக்கல்கள் அதிகரித்துக்கொண்டு போவதால், சமீபத்தில் கல்யாணத்தில் சங்கடங்கள் உண்டாகப் போகின்றன. சுகாதாரம் கெட்டு நோய்கள் விருத்தியாகிக்கொண்டிருக்கின்றன.

மாதர்களுக்குச் சாதாரண சுதந்திரங்கூட மறுக்கப்படுகிறது. ஆகையால் பெண்கல்வி முதலியவைகள் தீவிரமாய்ப் பரவமுடியவில்லை. பொதுவாகக் கவனிக்குமிடத்துப் பெண்களது முன்னேற்றத்திற்கு வழி அடைக்கப்பட்டிருக்கிறது.

நாட்டில் கூட்டு வியாபாரக் கம்பெனிகள் போதியபடி விருத்தியாகவில்லை. இந்திய வியாபாரம் முன்னேற்றமடைய முடியவில்லை. சர்க்காரும் பிரபுக்களும் முன்வந்து உற்சாகிக்காததால், கைத்தொழிற்சாலைகள் கணக்கற்றுத் திறக்கப்படவில்லை. விவசாயிகளுக்கும் வியாபாரிகளுக்கும் வேண்டும் தருணங்களில் பணம் கொடுத்து உதவ, நாட்டுச் செல்வக் குறைவால் அநேகம் பாங்குகள் நம்மால் ஏற்படுத்த முடியவில்லை. இந்தியாவில் அடிமைத்தனம் பெருகிக்கொண்டு வருவதால், கூட்டுறவுக் குறைவு, அவநம்பிக்கை தைரியமின்மை, பிறர்மீது குற்றங்காணல், பிறர்மீது குற்றஞ்சாட்டல் முதலிய தீயகுணங்கள் பெருத்துக்கொண்டே வருகின்றன. இந்தியர் அனைவரும் சகோதரர் என்ற நல்லுணர்ச்சி குன்றிக்கொண்டு வருகிறது. யைது சென்றவர்களிடம் ராஜதந்திர சமயோஜித புத்தியிருந்து, சொந்தக் காரியங்களைச் சாதித்துக்கொள்வதில் கெட்டிக்காரர்களா யிருக்கிறார்கள்.

மதுவிலக்குப் பிரச்சாரத்தைப் பற்றிச் சிலர் யோசித்துக்கொண்டிருந்தாலும், பேசிக்கொண்டிருந்தாலும், சர்க்கார் தண்ணீர்ப்பந்தல் சரியாய் நடக்கிறது. தீண்டாதவர்களை வைதீகப் பாம்புகள் தீண்டுகிறபடியால், அவர்களுக்குப் பழையபடியேதான். சில உண்மைக் காங்கிரஸ் வாதிகளும் ஆசார சீர்திருத்தக்காரர்களும் தீண்டாமையை ஒழிப்பதற்கு வேண்டிய வேலைகள் செய்தார்கள். அதுவும் ஆற்றில் கரைத்த புளியாகிவிட்டது.

வேறு நாடுகளில் வசிக்தும் நமது இந்தியர் கேவலமாய் நடத்தப்படுகிறார்கள் நமக்குச் சமீபத்திலிருக்கும் இலங்கையில் வாழ் இந்திய மக்களுக்குத் துன்பங்கள் உண்டாகப் போகின்றன. பர்மாவில் வாழும் இந்தியர்களுக்கும் அப்படியே. இவ்விரு நாட்டாரும் இந்தியர்களை அவர்கள் நாட்டிலிருந்து துரத்துவதற்கு இப்பொழுது ஆரம்பித்து விட்டார்கள். தென்னாப்பிரிக்கா, பீஜி முதலியவிடங்களில் வசிக்கும் இந்தியர்களுக் குண்டாயிருக்கும் கஷ்டங்களை விவரித்தால் உண்மை இந்தியனுக்குக் கண்ணீர் வடியும்.

ஒத்துழையாமைக் காலத்திற்குப் பிறகு பல புதிய தலைவர்கள், பெரியவர்கள், போலித் தேசாபிமானிகள், படே படே பேர்வழிகள் தோன்றியிருக்கிறார்கள். மூலை முடுக்குகளிலிருந்த எத்தனை சாதாரண வக்கீல்கள், சாதாரண டாக்டர்கள், பெயர் தெரியாத மனிதர்கள் இப்பொழுது பிரபலஸ்தர்களாகிப் பணம் எராளமாய்ச் சம்பாதிக்கிறார்கள்? இவர்கள் சம்பாதிக்கின்றதன்றியும், பொது ஜனங்களை என் எமாற்றுகிறார்கள்? எத்தனையோ உண்மையுள்ளவர்கள் தேசாபிமான ஆவேசத்தால் தாக்கப்பட்டு நாட்டு வேலையில் வெறிகொண்டு வீறுடனெழுந்து கிராமங் கிராமங்களாய் அலைந்து வேலை செய்ததாலல்லவோ தலைவர்கள் உண்டாயிருக்கிறார்கள். உண்மைத்தலைவர்கள் விஷயம் வேறு. அவர்களைப்பற்றி இங்கு ஒன்றும் சொல்வதற்கில்லை. எழைகளை—கிராமத்தார்களை—ஒடுக்கப்பட்டவர்களைப் பற்றிய பேச்சுக்கள், பெரும் பேச்சுக்கள்! தேசீயப் பிரச்சாரம் செய்து ஜனங்களுக்குப் போதித்துக்கொண்டே தன் மக்களுக்குச் சர்க்கார் உத்தியோகம் வாங்கிக் கொடுக்க வேலை செய்கிற

அநேகம் பேர்கள் இருக்கிறார்கள். தான்தோன்றிகளான, பல சுயநலத் தலைவர்கள் தங்களுக்குப் பொது விஷயங்களில் ஏதேனும் நன்மை கிடைப்பதாயிருந்தால் மட்டும், ஈடுபட்டு வேலை செய்வார்கள். தேசாபிமானம் என்ற போர்வையைப் போர்த்திக்கொண்டு இப்போலிகள் தப்பித்துக் கொள்கிறார்கள். தலைவர்களுக்குள் எவ்வளவு துவேஷம்! வீண் பிடிவாதம்! "மகன் செத்தாலும் சரியே; மருமகள் தாலி அறுக்கவேண்டும்" என்பது நமது அநேக தலைவர்களின் வீண் பிடிவாதத்திற்கு ஏற்ற பழமொழியாயிருக்கிறது. "கோட்டைக்குள் குத்தும் வெட்டும் என்றால் வெளியே இருக்கும் எதிரிகளை வெல்வதெப்படி?" அருத்தமற்ற, உபயோகமற்ற, அடிமையாகச் செய்கிற ஜாதிகள் எந் நாட்டில் நாட்டைக் கெடுத்துக்கொண்டு இப்படி இருக்கின்றன? அரசியல் கட்சிகள், பொதுவான தேசாபிவிருத்தியைத் தடுத்து இவ்வளவு வேற்றுமையுடன் எத்தேசத்தில் இப்படி வேலை செய்கின்றன? வேற்றுமை விருட்சம் எப்படியோ நம் நாட்டில் முளைத்துக் கன்றாகி மரமாகிப் பூத்துக் காய்த்துக் கனி கொடுக்க, அதை இந்தியர் உண்டு வேற்றுமையில் மயங்கிக் கிடக்கின்றார்கள். வேற்றுமைக் கனியைத் தின்று ஆனந்திக்கும் பரியந்தம் சுயராஜ்யமடைய இந்தியர்கள் செய்யும் வேலைகள் பயன்படாது முடியும்.


## வேண்டுகோள்

தெய்வீகத் தன்மையான, இன்ப மயமான சுயராஜ்யம் நமக்கு வேண்டும். சுய ராஜ்யம் இந்தியாவிற்குக் கிடைத்துவிட்டால், இந்தியாவின் துன்பங்கள் அனைத்தும் சூரியனைக் கண்ட பனிபோல் ஓடிவிடும். காலதேச வர்த்தமானத்திற் கொவ்வாக் கேடு கெட்ட பழக்க வழக்கங்களை ஒழிப்பதே—தேசாபிவிருத்தித் தடைகளை நாசம் செய்வதே தேச முன்னேற்றம். காலத்துக்குத் தக்கபடி நடக்க வேண்டும். அப்படிச் செய்வதுதான் நியாயம். ஒவ்வொரு தேச சரித்திரத்திலும் இவைகளைப் பரக்கக் காணலாம். தேசிய ஒற்றுமைக்காக இந்தியர் அனைவரும் சகோதரர் என்று எண்ணிப் பரஸ்பர அன்புடனிருக்க வேலை செய்யுங்கள். பற்பல உபயோகமற்ற



# ஸ்வாமி விவேகாநந்தரது கடிதம்.

அமெரிக்கா,
**19—7—1894.**



எனது தைரியமுள்ள பையன்காள்!

ஏற்பாட்டை முன்னுக்குக் கொண்டுவாருங்கள்! அன்பு, உண்மை, பொறுமை இவற்றைத் தவிர வேறொன்றும் அவசியமில்லை. வளர்ச்சி அதாவது, அன்பு இதைத்தவிர ஜீவிதம் என்றால் வேறு என்ன? ஆதலால் அன்பே ஜீவன், அதுவே ஜீவிய காலநியதி; ஸ்வய நன்மையெல்லாம் மரணமே. இது எங்கும் எப்பொழுதும் உண்மை. நன்மை செய்தலே ஜீவிதம்; பிறர்க்கு நன்மை செய்யா

---

கட்சிகளை விட்டொழியுங்கள். ஜாதி அகம்பாவத்தையும் பிறப்பால் உயர்வு தாழ்வு கருதும் மமதையையும் விட்டொழியுங்கள். நம்மில் வேறு வேறு கட்சிகள் உண்டாகாதபடி பார்த்துக் கொள்ளுங்கள். மேலும் மேலும் கட்சிகள் உண்டாகாதபடி நடந்து கொள்ளுங்கள். வேண்டாப் பழக்க வழக்கங்களை நிர்மூலப்படுத்துங்கள். இப்பொழுது இந்தியா அடிமைப்பட்டிருக்கிறது. ஆகையால் சுயராஜ்யத்திற்குத் தடையாயிருக்கிற அனைத்தையும் நாசப்படுத்துங்கள். தேச விடுதலை அடைந்து, சமூக விடுதலையடைந்து, பொருளாதார விடுதலை அடைந்து இந்தியா எவ்வழிகளிலும் மேன்மை பெறட்டும். சுயராஜ்யத்தைச் சீக்கிரத்தில் அடைந்து சுக வாழ்வைப் பெறுங்கள்.

இந்தியா சுதந்திரத்துடன் வாழ்க.
வந்தேமாதரம்.

மல் இருப்பதே மரண மெனப்படும். நீங்கள் பார்க்கின்ற மாநுட மிருகங்களில் நூற்றுக்குத் தொண்ணூறு பேர் மரித்தவர்களே, பிரேதங்களே. ஏனென்றால், எனது புத்திரர்களே! அன்பு செலுத்துகிறவனைத் தவிர, வேறு எவனும் ஜீவிக்கிறதில்லை. உணருங்கள்! எனது குழந்தைகளே! உணருங்கள்! எளியவர்கள், அறிவீனர்கள், தாழ்த்தப்பட் டிருப்போர்கள் இவர்களுக்காக இரங்குங்கள்! 'ஹிருதயம் நின்றுபோய் மூளை மயங்கி உங்களுக்குப் பைத்தியம் பிடித்து விடும்' என்று நீங்கள் உணரும் மட்டும் இரங்குங்கள்! பின்னர் சர்வேஸ்வரனுடைய சரணாரவிந்தங்களில் ஆத்மாவை ஐக்கியப்படுத்துங்கள்! அப்பொழுது வல்லமை, உதவி, அடக்கவொண்ணாத சக்தி இவையெல்லாம் உண்டாகும். யாது நேரிடினும் பின்வாங்காதிருத்தலே சென்ற பத்து வருஷங்களாக எனது கொள்கை. 'யாது நேரிடினும் பின்வாங்காதே' என்று இன்னும் நான் சொல்லுகிறேன். எங்கும் இருண்டிருக்கும்பொழுது 'யாது நேரிடினும் பின்வாங்காதே' என்று நான் சொல்லுவது வழக்கம் பிரகாசம் உண்டாகின்றபொழுதும் 'யாது நேரிடினும் பின் வாங்காதே' என்று நான் இன்னும் சொல்லுகிறேன். எனது குழந்தைகளே! பயப்படாதீர்கள்!...பொறுங்கள்! பணம் பெரிதல்ல; கீர்த்தி பெரிதல்ல; கல்வியும் பெரிதல்ல; அன்பே பெரிது. கஷ்ட நிஷ்டூரங்களினிடையே பின்வாங்காது பெரு முயற்சி செய்து நிற்கின்ற குணமே பெரிது.

இப்பொழுது நம்முன் இருக்கிற கேள்வி இது. ஸ்வதந்திரம் இன்றி வளர்ச்சியே யில்லை. நமது முன்னோர்கள் மதக்கொள்கைகளை ஸ்வதந்திரப்படுத்தினார்கள்; நாம் ஒரு அற்புதமான மதத்தையுடையவர்களா யிருக்கிறோம். ஆனால், அவர்கள் ஜனசமூகத்தின் கால்களில் பெரிய விலங்கை யிட்டார்கள். நமது ஜனசமூகம், சுருக்கத்தில் பயங்கரமாயும் ஆபாசமாயும் இருக்கின்றது. மேல் நாடுகளில் எப்பொழுதும் ஜனசமூகத்திற்கு ஸ்வதந்திரம் உண்டு; அவர்களைப் பாருங்கள்!



வளர்ச்சிக்கு வேண்டியது ஸ்வதந்திரம். மனிதனுக்கு நினைப்பதற்கும் பேசுவதற்கும் ஸ்வதந்திரம் வேண்டியதுபோலவே அவன் பிறரை இம்சிக்காதவரையில் அவனுக்கு ஆகாரம் உடை விவாகம் முதலிய எல்லா விஷயங்களிலும் ஸ்வதந்திரம் வேண்டும்.

'ஜடசம்பந்தமான நாகரீகம் கூடாது' என்று நாம் மூடத்தனமாகப் பேசுகிறோம். திராட்சப் பழம் புளிக்கும் என்ற நரிக்கதைபோல அந்த மூடத்தனத்தை யெல்லாம் நாம் ஒப்புக்கொண்டாலும், இந்தியா முழுதிலும் ஒரு லட்சம் பேர் உண்மையான ஆத்மஞானிகள் இருப்பதாக வைத்துக் கொள்ளுவோம். இப்பொழுது இவர்களுடைய ஆத்மஞானத்தின் பொருட்டு முப்பது கோடி ஜனங்கள் பாமரத்தனத்திலும் பட்டினியிலும் முழுகிக் கிடக்க வேண்டுமா? என் ஒருவன் பட்டினி கிடந்து பாதவிக்கவேண்டும்?...

ஜடசம்பந்தமான நாகரிகம்—ஆடம்பரங்கூட எளியவர்களுக்குத் தொழில் கொடுக்கும் பொருட்டு அவசியம் தான். ஆகாரம்! ஆகாரம்! இங்கு எனக்கு ஆகாரம் கொடுக்க முடியாத கடவுளால் மோட்சலோகத்தில் எனக்கு நித்தியாநந்தத்தைக் கொடுக்க முடியுமென்று நான் நம்பமாட்டேன்... இந்தியா தேசம் முன்னேற்றத்தில் வரவேண்டும். எளியவர்கள் போஷிக்கப்படவேண்டும். கல்வி பரப்பப்படவேண்டும். வைதீகக் கொடுமை நீக்கப்படவேண்டும். வைதீகக் கொடுமை கூடாது. ஜனசமூகத்தில் கொடுமை உதவாது. ஒவ்வொருவருக்கும் அதிக ஆகாரம், அநேக சந்தர்ப்பங்கள். * * * *

ஸ்வதந்திரத்தைக் கொடுப்பதற்குத் தயாராயில்லாத எவனும் ஸ்வதந்திரத்திற்கு அருகனல்லன். * *

அடிமைகள் அடிமைகளை யுண்டாக்குவதற்கு அதிகாரத்தை விரும்புகின்றனர். * * * *

இப்பொழுது நமது மதத்தை ஸ்தாபிதம் செய்தலினாலும், ஜனசமூகத்திற்கு ஸ்வதந்திரம் கொடுத்தலினாலும் மெல்ல மெல்ல மாறுதல்கள் உண்டாகவேண்டியிருக்கின்றன. பழைய மதத்திலிருந்து வைதீகக் கொடுமையை யெடுத்துவிட்டால் உலகில் உயர்ந்த மதம் உங்களுடையதே. நான் சொல்லுகிறது தெரிகிறதா?......

ஸ்ரீ சங்கரர், இராமாநுஜர், சைதந்யர் முதலான பூர்வீக மஹான்களால் விதிக்கப்பட்டுள்ளபடி, சர்வஜன முக்தி, சமபாவனை முதலிய பழைய நியாயங்களின்படி, ஜனசமூகத்தைச் சீர்திருத்த முயற்சி செய்யுங்கள்!

ஆத்திரங் கொள்ளுங்கள்! ஆத்திரத்தைப் பரப்புங்கள்! வேலை செய்யுங்கள்! தலைமை வகிக்கும்பொழுதே, வேலையாளாயிரு! ஸ்வய நன்மைபற்று இரு! தனிமையாய் ஒரு சிநேகிதன் இன்னொரு சிநேகிதன் மீது குற்றங்கூற, ஒருபொழுதும் கேட்காதே! அளவற்ற பொறுமையை வகித்துக்கொள்! ஜயம் நின்னுடையதே......நான் என் கடிதங்களை எப்பொழுதும் உனக்கே எழுதுகிறதினால், என்னுடைய மற்ற ஸ்நேகிதர்களைப் பார்க்கிலும் நீ எனக்கு வேண்டியவன் என்று காட்டிக்கொள்ள முயற்சி செய்யாதே! நீ ஒரு பொழுதும் அத்தகைய முட்டாளாயிருக்கமாட்டாயென்று எனக்குத் தெரியும். ஆனாலும் உன்னை எச்சரிக்க வேண்டியதைக் கட்டமையாக நான் நினைக்கிறேன். வேலைசெய்! வேலைசெய்! ஏனென்றால், பிறருடைய நன்மையின்பொருட்டு வேலை செய்தலே ஜீவிதம்.

முகஸ்துதி, வெளிவேஷம், போக்கிரித்தனம் இவையெல்லாம் இருக்கக்கூடாதென்று நான் விரும்புகிறேன். எப்பொழுதும் ஈஸ்வரனிடத்தில், எப்பொழுதும் பகல் வெளிச்சம்போல் பரந்த சத்தியத்தினிடத்தில் நான் சார்ந்திருக்கிறேன். பெயரையாவது கீர்த்தியையாவது அடைவதற்கு அல்லது நன்மை செய்வதற்குக்கூட வெளிவேஷம் போட்டு அழுக்குப் படிந்த மனச்சாட்சியுடன் நான் மரிக்காமலிருப்பேனாக! அயோக்கியத்தனம் அணுவளவேனும் தீய எண்ணம் சிறிதேனும் இருத்தல் கூடாது.



ஆஷாடபூதி வேஷம் கூடாது; அந்தரங்கப் பித்தலாட்டம் கூடாது; இரகஸ்யப் புரட்டு உதவாது; ஒன்றையும் மூலையில் செய்யக்கூடாது. இவைகள் மகாத்மாவினுடைய பிரத்தியேகப் பிரீதியன்று. எனது தீர புத்திரர்களே! மேலே செல்லுங்கள்! பணம் இருந்தாலும் சரியே, இல்லாவிட்டாலும் சரியே—மனுஷிய சகாயம் இருந்தாலும் சரியே, இல்லாவிட்டாலும் சரியே—உங்களிடத்தில் அன்பு இருக்கிறதா? உங்களிடம் கடவுள் இருக்கிறாரா? மேலே செல்லுங்கள்! முன் செல்லுங்கள்! உங்களை எதிர்க்க முடியாது.

ஆ! உண்மை! ஜாக்கிரதை! உண்மையல்லாத ஒவ்வொன்றையும்பற்றி ஜாக்கிரதை! உண்மையைப் பிடித்துக்கொள்! நாம் ஜெயிப்போம்; ஜயம் கிடைக்கச் சிறிது தாமதிக்கும்; ஆனால் கிடைப்பது நிச்சயந்தான். நீங்கள் ஒவ்வொருவருக்கும், முழு வேலையும் செய்ய வேண்டியவர்களைப் போலவே, வேலை செய்யுங்கள்! ஐயாயிரம் வருஷங்கள் உங்களையே அடிமைகளாய் வைத்துப் பார்த்துக் கொண்டிருக்கின்றன. இந்தியாவின் பிற்காலம் உங்களைப் பொறுத்ததாயிருக்கிறது. மேன்மேலும் வேலை செய்யுங்கள்! எனக்கு எப்பொழுது வரமுடியுமென்று தெரியாது. வேலை செய்வதற்கு இது ஒரு பெரிய பூமி. இந்தியாவில் அவர்கள், அதிகமானால், புகழ்வார்கள். ஆனால், அவர்கள் ஒன்றுக்கும் ஒரு பைசாவேனும் கொடார்கள். அவர்களே யாசகர்களாயிருக்கும்பொழுது, அவர்களுக்கு எங்கிருந்து (பணம்) கிடைக்கும்; இன்னும், சென்ற இரண்டாயிரம் வருஷங்களுக்கு மேலாகப் பொது நன்மை செய்யும்படியான தன்மையையும், ஜனசமூகம், பொது ஜனங்கள் என்றால் இன்னவை யென்பதையும் அவர்கள் இப்பொழுதுதான் அறிந்துகொண்டு வருகிறார்கள். ஆகையால், நான் அவர்களைக் குற்றம் கூறவில்லை. மற்றவை பின்னர்.

உங்களை ஆசீர்வதிக்கின்ற,

விவேகாநந்தர்.

# பரீந்திர குமார கோஷ்.

ஸ்ரீமாந் N. வேங்கடரமணன் அவர்கள்.

பாரத மாதாவின் அருந் தவச் செல்வர்களாகப் பிறந்த புத்திர ரத்தினங்கள் பலபேர் அறிவிலும், ஆண்மையிலும், தேசாபிமானத்திலும், தியாகத்திலும் தலை சிறந்தவர்களாக விருந்தும் சுதந்தரமற்ற நமது இந்தியாவில் அவர்களுடைய ஆற்றல்களனைத்தும் நாட்டின் நன்மைக்கு உபயோகப் படுத்துவதற்கும், அவர்களுடைய அரும் பெரும்புகழ் உலகில் வெளிப்பட்டுப் பிரகாசிப்பதற்கும் எற்ற சந்தர்ப்பம் வாய்க்கப் பெறுமலேயே காலச் சக்கிரத்தின் சுழற்சியின் கீழ்ப் பட்டு அவர்கள் மறைந்துகொண் டிருக்கின்றனர். அவர்களில் ஒரு சிலர் தங்கள் உள்ளத்தில் எழும் தேசாபிமானத்தின் வேகத்தைப் பொறுக்க மாட்டாதவர்களாகித் தங்கள் அறிவாற்றல்களோடு கூடிய ஊழியத்தை நேர்மையான முறையில் பகிரங்கமாகப் பயன் படுத்தாமல், இரகசியமாக ஹிம்சையோடு கூடிய அராஜகப் புரட்சி இயக்கங்களிற் செலவிட்டுக் கடைசியில் அரசாங்கத்தின் கோபத்திற் காளாகிச் சிறைக் கோட்டத்தில் மறைந் துறைந்து மடிகின்றனர். இத் தகையோர்களுக்குத் தகுந்த சந்தர்ப்பங்களும், சௌகரியங்களும், சாதனங்களும், ஆதரிப்புகளும் ஏற்பட்டிருக்குமாயின் இந்தியாவில் எத்தனையோ நெப்போலியன்களும், எத்தனையோ ஷேக்ஸ்பியர்களும், எத்தனையோ கொலம்பஸ்களும், எத்தனையோ ஆப்பிரகாம் லிங்கன்களும், எத்தனையோ ராக்பெல்லர்களும், எத்தனையோ ஹென்ரி போர்டுகளும் தோன்றி யிருப்பார்களென்பதை யாரே மறுக்க வல்லார்? எனவே பாரத பூமியில் பரீ

சுத்தமான தேசாபிமானமும், உற்சாகமும் படைத்த வாலிபர்கள் பலபேர் நேர்மையற்ற அராஜகக் கிளர்ச்சிகளில் சம்பந்தப்பட்டு, அரசாங்கத்தின் விருந்தினர்களாகி, வாணாள் முழுதும் பாரத ஜன சமூகத்திற்குப் புறம்பாகி நிற்பது பரிதபிக்கத் தக்கதாம்! அத்தகைய துர்ப் பாக்கியமான ஜீவியத்தைப் பெற்ற முக்கியஸ்தர்கள் சிலருள் பரீந்திர குமார கோஷூம் ஒருவர். இவர் அரவிந்த யோகியின் தம்பியாவர். இவரது வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கத்தினை "யங் லிபரேடர்" பத்திரிகையில் வெளிவந்துள்ளதன் படியே "பாரதி"யின் வாசகர்களுக்குத் தருகின்றோம்.

பரீந்திர குமார கோஷ்! இவரது நற்பெயரை நினைத்த மாத்திரத்திலேயே எவ்வித எண்ணங்கள் உதயமாகின்றன! புரட்சிக்காரர்களில் தலைசிறந்தவராகிய இவர், இந்தியாவில் அரசாங்கத்தின் மீது தோன்றிய வெறுப்பென்னும் அனலைக் கிளப்பிவிட்டு, வாலிப வீரர்களின் சக்திகளனைத்தையும் ஒருமுகப் படுத்தி, பின்னோக்கிப் பாராத தைரியத்தையும், வீரா வேசத்தையும் நாட்டில் எழுப்பி அரசாங்கத்தை எதிர்க்க முனைந்த வீரர் ஆவர். ஆறு வருட காலம் இந்திய தேசிய ஆகாயத்தில் மின்னற் கொடியென இவர் ஒளி வீசி நின்றார்!

## பிறப்பும் வளர்ப்பும்

பரீந்திரர் 1880-ம் ஆண்டில் இங்கிலாந்தில் பிறந்தார். ஆறு மாதக் குழந்தையாக இருக்கையில் இந்தியாவுக்குக் கொண்டு வரப்பட்டார். இவரது தந்தையார் டாக்டா கே. டி கோஷ் அவர்கள், கோல்னா என்ற இடத்தில் சிவில் சர்ஜனா யிருந்தார். ஆங்கிலேயர்களின் சமூக வாழ்க்கையிலும், அவர்களுடைய ஆசாரங்களிலும் அவருக்குப் பிரியமதிகம். பரீந்திரரின் 12-வது வயதில் அவரது தந்தையார் காலஞ் சென்றார். பிறகு இவர் தமது அன்னையைப் பெற்ற பாட்டனாராகிய பாபு ராஜ நாராயண வசு அவர்களின் வீட்டில் வளர்ந்தார். நாராயண வசு அவர்கள் ஒரு புரட்சிக்காரர். எனவே பரீந்திரருக்குச் சிறு வயதினின்றே புரட்சி இயக்கத்தின்

சம்பந்தமான தத்துவங்கள் பிடிபடுவதற்கு அவரது பாட்டனாரே காரணமாவர். சுதந்திரத்தில் விருப்பமும், பிரிட்டிஷாரின்மீது வெறுப்பும் இவருக்கு இயல்பான குணங்களாயின. இவர் பள்ளி மாணவரா யிருக்கையிலேயே கையெழுத்துப் பத்திரிகை யொன்றை நடத்தி வந்தார். கிரிக்கெட் போன்ற விளையாட்டுகளிலும், குஸ்தி போன்ற உடற் பயிற்சிகளிலும் பழகி வந்தார். (தேச சரித்திரத்தில்) சிவாஜியின் சேனைகள் செய்த யுத்தங்களைப்போல் மாணவர்களைக் கூட்டிக்கொண்டு மலைகளில் போலி யுத்த விளையாட்டுகளை நடத்திக் கொண்டிருந்தார். யுத்த வீரனுக்குரிய இலக்கணங்கள் அனைத்தும் இவருக்கு அமைந்திருந்தன. டக்கா, பாட்னா காலேஜ்களில் இவர் படித்த இரண்டு ஆண்டுகளிலும் தேசிய கீதங்கள் எழுதியும், எதிர் காலச் சுதந்திர இந்தியாவைப் பற்றிய கனவுகளைக் கண்டும் காலங் கடத்தினார்.

## புரட்சிக்கார ராதல்

படிப்பை முடித்துக் கொண்டவுடன் பரீந்திர குமாரர் முதலில் வர்த்தகம் ஆரம்பித்தார். ஸ்டேஷனரி சாமான்களின் கடையும், காப்பி ஹோட்டலும் வைத்து நடத்தினார். ஆயினும் விரைவில் பெரு நஷ்டமடைந்தார். கையில் ஒருபைசா இல்லை கடையில் உண்ண உணவுக்கும் வழியில்லாமற் போயிற்று. எனவே பரோடாவி லிருந்த தமது தமயனாராகிய அரவிந்த கோஷ் அவர்களிடம் போய்ச் சேர்ந்தார். அப்பொழுது அரவிந்தர் பரோடாக் கலாசாலையின் உப தலைவராக இருந்தார். அவ்விடம் சென்றவுடன் பரீந்திரருக்குத் தமது வாழ்க்கையின் நோக்கம் புலனாயிற்று. இரகசிய சங்கத்தைச் சேர்ந்த இருவருடன் இவருக்குச் சிநேகமுண்டாயிற்று. அவ் வங்கத்தினர்களின் தலைமையிடம் புனா. சின்னாட்களில் பரீந்திரர் புரட்சிக்காரராக மாறினார். ஒரு கையில் பகவத்கீதையும், மற்றொரு கையில் கத்தியுந் தாங்கி "ஆயுளுள்ளளவும் தாய் நாட்டுக்கே உழைக்கின்றேன்" என்று சபதஞ் செய்து இரகசிய சங்கத்தில் அங்கத்தினராகச் சேர்ந்தார்.



## வங்காளத்தில் புரட்சி இயக்கம்

1902-ம் ஆண்டில் இவர் இரகசிய சங்கத்தின் பிரதிநிதியாக வங்காளத்திற்குச் சென்றார். அங்கு விரைவில் இரண்டு இரகசிய சங்கங்களை ஸ்தாபித்தார். அச் சங்கங்களுக்குப் பல கிளை ஸ்தாபனங்கள் ஏற்பட்டன. சங்கத்திற்கு அங்கத்தினர்களைச் சேர்த்தல், வேவுகாரர்களைக் கொண்டு செய்திகளை யறிதல், பணம் வசூலித்தல், யுத்த ஆயுதங்களைச் சேகரித்தல், பிரசுரங்களை வெளியிடுதல் முதலிய காரியங்களைச் செய்வதற்குப் பல கிளைகள் ஸ்தாபிக்கப் பட்டிருந்தன. சங்க அங்கத்தினர்களுக்குக் குதிரைச் சவாரி செய்தல், 'சைக்கிள்' ஏறிச் செல்லுதல், நீந்துதல் முதலிய பல கருமங்கள் கற்பிக்கப்பட்டு வந்தன. ஆயினும் எதிர் பார்த்தபடி போதிய உதவி கிடைக்காமையால் பரீந்திரர் ஒரு வருடத்திற்குள் மீண்டும் பரோடாவுக்குத் திரும்பிச் சென்றார். பரோடாவில் இவருக்கு ஒரு யோகியினுடைய நட்பு கிடைத்தது. அந்த யோகியின் பெயர் விஷ்ணு பாஸ்கரர். அவரே இவருக்குக் குருவாயினர் அவரிடத்தில் உபதேசங்களைப் பெற்றும் பல உண்மைகளை யறிந்தார். வங்காள மாகாணம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு அதனால் தேசத்தில் பெருங் கிளர்ச்சி தோன்றலாகியது. அந்த நல்ல சந்தர்ப்பத்தில் பரீந்திர குமாரர் மீண்டும் கல்கத்தா சென்றார். வங்காளம் அச் சமயத்தில் அல்லோல கல்லோலமா யிருந்தது. அதுவே பரீந்திரருக்கு ஏற்றசமயமாயிற்று. உற்சாகம்வாய்ந்த வாலிபர்கள் பலரைக் கூட்டிப் பிரசித்தமான இரகசியப் புரட்சி இயக்கச் சங்கத்தைக் கல்கத்தா, டக்கா நகரங்களில் ஸ்தாபித்தார். அச் சங்கமானது விரைவில் தேசம் முழுவதும் பரவலாயிற்று. அதற்கு ஒரு காலத்தில் வங்காளத்தில் மாத்திரம் 500 கிளை ஸ்தாபனங்கள் ஏற்பட் டிருந்தன. பட்டணங்களிலும், கிராமங்களிலும் கூட அச் சங்கத்தின் கிளைகள் காணப்பட்டன. இதைப் போன்ற மற்றும் பல சங்கங்களும் தேசத்தில் தோன்றின. புரட்சி இயக்கத்திற் கனுகூலமான சந்தர்ப்பங்களை உண்டாக்க வேண்டியிருந்தது. அதற்குப் பொது மக்களிடையில் அனுகூலமான

அபிப்பிராயங்களைப் பிரபலப் படுத்தவேண்டும். ஆகவே பத்திரிகைப் பிரசுரங்கள், தேச பக்தியூட்டும் பாட்டுகள், கீதங்கள், துண்டுப் பிரசுரங்கள், இரகசியச் சங்கங்கள், சபைகள் முதலியவைகளின் மூலமாக அதி தீவிரமாகப் பிரசாரங்கள் நடைபெற்றன. இராஜாங்கத் துவேஷமும் பிரபல மாயிற்று. புரட்சி நடைபெற வேண்டுமானால் மக்களின் மனம் கொதிப்படைய வேண்டும். அவ்வாறு மனம் கொதிப்படைவதற் கேற்ற தேச கீதங்கள் வாலிபர்களின் உள்ளத்தினின்று பீறிட்டுக் கொண்டு வெளி வந்து கொண்டிருந்தன.

## அரவிந்தரின் கூட்டுறவு

அச் சமயத்தில் அரவிந்தரும் தமது சகோதரரோடு வந்து சேர்ந்தார். 1906-ம் ஆண்டில் பிரசித்தியான "யுகாந்தர்" (புதிய சகாப்தம்) என்ற பத்திரிகையின் பிரசாரத்திற்கு நாட்டில் அளவில்லாமலிருந்தது. துரைத்தனத்தாருக்கு அப் பத்திரிகையின் எழுத்துக்கள் அச்சம் விளைவித்தன. 1908-ம் ஆண்டில் அப்பத்திரிகை அரசாங்கத்தாரால் அடக்கிவிடப் பட்டது. அப் பத்திரிகை அக்கினி ஜ்வாலைகளைக் கக்கிக்கொண் டிருந்தது. ஆலிபூர் செஷன் ஜட்ஜி யவர்கள் அப் பத்திரிகையின் எழுத்துகளைப் பற்றி இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

"பிரிட்டிஷ் ஜாதியாரின் மீது இப்பத்திரிகையின் வியாசங்கள் தீவிரமான துவேஷத்தைக் கிளப்பத் தக்கன. ஒவ்வொரு வரியும், ஒவ்வொரு எழுத்தும் புரட்சியைக் கிளப்புவதாகும். அராஜகப் புரட்சியை எவ்வாறு நடத்துவ தென்பதைப் பற்றி விவரமாக அதில் கூறப்படுகின்றன. இப் புரட்சிக் கொள்கைகளை வாலிபர்களின் உள்ளங்களில் நிலை நாட்டுவதற்கு இப் பத்திரிகையின் அதிபர் எத்தனை வழிகளை—யுக்திகளை யறிவாரோ அவை யனைத்தும் இப் பத்திரிகையில் காணப்படுகின்றன" "யுகாந்தர்" என்ற ஒரு பத்திரிகையே யன்றி "சந்தியா" என்ற மற்றொரு வங்காளிப் பத்திரிகை கூட அப்படியே அரசாங்கத்தாரின் மீது அனலைக்



கக்கிக்கொண் டிருந்தது. அதன் எழுத்துக்களைக் கவனியுங்கள். "எனக்கு முழுச் சுதந்திரம் வேண்டும். பரங்கிகளின் அதிகாரம் அணுவளவாவது மீந்திருந்தாலும் இந்நாட்டுக்கு விடுதலை யென்பது கிடையாது. எங்களுக்கு முழுச் சுதந்திரத்தைச் சம்பாதித்துக் கொள்ள முடியாமற் போகுமானால், சுதேசியம், பகிஷ்காரம் என்பன வீண் வார்த்தைகளே யாகும். தயவு தாக்ஷண்யமாகப் பிரிட்டிஷார் எங்களுக்குக் கொடுக்கப் புகும் உரிமைகளை நாங்கள் உமிழ்ந்து விடுவோம். எங்கள் சுய பலத்தாலேயே எங்கள் விடுதலையை நாங்கள் காத்துக் கொள்ளுகின்றோம்."

ஒரு வங்காளத்தில் மட்டுமன்று. இமயம் முதல் கன்னியா குமரி வரையில் இந்தியா முழுவதிலும் இத்தகைய வீர முழக்கம் ஒலி செய்தது. அதே சமயத்தில் ருஷ்ய ஜப்பான் யுத்தத்தில் ஜப்பான் அடைந்த வெற்றிச் செய்தியானது இந்திய வாலிபர்களின் உள்ளத்தில் உற்சாகத்தை மிகுதிப் படுத்தியது. எரியும் நெருப்பில் நெய்யை வார்த்ததைப்போல் வாலிபர்களின் தேசாபிமானம் கொழுந்து விட்டெரிய ஆரம்பித்தது. இந்தியப் புரட்சிக்காரர்கள் உடனே முன்வந்து "இந்தியர்களே! ஜப்பானின் வழியைப் பின்பற்றுங்கள்" "பற்றுங்கள்" என்று கூக்குரலிட ஆரம்பித்தனர். வங்காளப் பிரிவினையால் கொதிப்படைந்திருந்த இத் தேசத்தில் அக் கூக்குரல்கள் உற்சாகத்தைக் கிளப்பி விட்டன. பரீந்திர குமார கோஷின் சார்பாக நாட்டில் ஆயிரக் கணக்கான வாலிபர்கள் நின்றனர்.

## வெடி குண்டுகளும் கொள்ளைகளும்

பொது மக்களின் தேசியக் கொள்கைகளுக்கு விரோதமாயிருப்பவர்களைக் கொன்று தேசத்தில் பயத்தை யுண்டாக்குவது புரட்சி இயக்கத்தின் காரியக் கிரமங்களில் ஒன்று. எனவே உல்லாசகரதத் என்பவர் பாம்ப் என்ற வெடி குண்டுகளைத் தயார் செய்வதற்குக் கற்றுக்கொண்டார். ஹேம சந்த்ர தாஸ் என்பவர் தமது

ஆஸ்தியில் ஒரு பங்கை விற்றுப் பாரிசுக்குச் சென்று வெடி குண்டுகளைச் செய்யும் முறைகளைக் கற்று வந்து, புரட்சிக்காரரோடு சேர்ந்தார். அப்பொழுது தேசீயக் கொள்கைகளுக்கு விரோதமாயிருந்த பலர் மீது வெடி குண்டுகள் எறியப்பட்டன. இரகசிய சங்கச் செலவுகளுக்குப் பணம் மென்மேலும் கிடைப்பது கஷ்டமாயிருந்தது. அதனால் தேசாபிமான மில்லாதவர்களாகக் காணப்பட்ட தனவந்தர்களின் வீடுகளிற் புகுந்து கொள்ளையிடத் தலைப்பட்டனர். அடிக்கடி போலீஸ் உடைகளை யணிந்து அவர்கள் தங்கள் காரியங்களை நிறைவேற்றி வந்தனர். மாணிக்டோலா என்ற ஒரு தோட்டத்தில் புரட்சிக்காரர்கள் வெடி குண்டு செய்யும் தொழிற்சாலை ஒன்றை ஸ்தாபித்தனர். ஆயினும் அந்த ரகசியம் போலீசாருக்கு எப்படியோ தெரிந்து விட்டது. பரீந்திர குமார், உல்லாசகர தத்தர் முதலியோர் துரைத்தனத்தாரால் அரெஸ்டு செய்யப்பட்டார்கள். விசாரணையில் அவர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. ஆயினும், ஹைகோர்ட்டார் அந்தத் தண்டனையைத் தீவாந்தர சிக்ஷையாக மாற்றினர். அக்கேஸ் நடந்து கொண்டிருக்கையில் அப்ரூவராக மாறி, புரட்சிக்காரர்களின் இரகசியச் செய்திகள் அனைத்தையும் போலீசாருக்குத் தெரிவிக்க நிச்சயித்துக் கொண்டிருந்த நரேஸ் கோஸ்வாமி என்பவர் புரட்சிக்காரர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

### வேதாந்தியாக மாறியது

பரீந்திர குமார கோஷ் அவர்கள், மேற் கூறியவாறு தீவாந்தர சிக்ஷையை யேற்றுப் பனிரெண்டு ஆண்டுகள் அதை யனுபவித்ததன் பிறகு 1920-ம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் விடுதலை செய்யப்பட்டார். என்றாலும் இப் பனிரெண்டு வருடங்களில் அவர் முற்றிலும் வேறாக மாறி விட்டார். அரசியல் விஷயங்களில் அவருக்கு அருவருப்புண்டாகி விட்டது. வேதாந்த தத்துவ சாஸ்திரக் கருத்துக்கள் அவரது உள்ளத்தைக் கவர்ந்து விட்டன. ஆகவே அவர் இன்று புதுச்சேரியில் தமது சகோதரராகிய அரவிந்தரின் ஆச்சிரமத்தில் தவமியற்றிக் கொண்டிருக்கிறார்.



# நூல் நிலைய இயக்கம்.

ஸ்ரீமான் **S. K.** வேம்பு அவர்கள்.

இன்று மக்களிடை நூல்நிலைய (புத்தகசாலை) இயக்கம் வெகுவாய்ப் பரவியிருக்கிறது. இவ் வியக்கத்தால் கற்றோரும் மற்றோரும் அடையும் பயனுக் களவில்லை. நூல் நிலையம், இவ் வியக்கத்தின் முக்கிய தத்துவம், இயக்கத் தலைவர்களின் கடன் இவைகளைப் பற்றிச் சுருக்கமாய் மேனாட்டு அறிஞரின் கருத்துக்களைத் தழுவிச் சில சொல்லுவாம்.

'சுவடிகளின் தொகுதியே உண்மையான பல் கலைக் கழகம்'' என்றார் கார்லைல். ஓர் சிறிய அறையிலுள்ள எல்லையில்லா நிதியே நூல் நிலையம். இந் நிதியைப் பயன்படுத்த வேண்டுவது நம் தனிப் பெருங்கடன். ஒரு வெள்ளிக் காசுக்காக மனிதன் ஓடி ஓடி உழல்கிறான். பண்டைய அறிஞர்களின் பொன் மொழிகளை ஓடித் தேடி உணர்கிறானா? "அம் மொழிகள் பல நூற்றாண்டுகளாகப் பெருகிய மதிப்புடன் மிளிருகின்றனவே" என்று அழுகிறார், தோரோ. கையில் கோலின்றியும், கடுமுகம் கடுசொல்லின்றியும் நமக்குக் கல்வி புகட்டும் போதகாசிரியர்களே கிரந்தங்கள். கல்வியைக் கற்க அவைகளிடம் போனால் அவைகள் தூங்கிக்கொண்டிருப்பதில்லை. ஆராய்ச்சி செய்தால், அவைகள் ஒன்றையும் ஒளிப்பதில்லை. திரிபாய்ப் பொருள் கொண்டுவிட்டால் அதற்காக அவைகள் கோபிப்பதில்லை. நம் அறியாமையை நோக்கிச் சிரிப்பதில்லை. இத் தன்மை வாய்ந்த நூற்கள் நிறைந்த நிலையத்தைப் பெற்றிருக்கும் நம் விலையில்லா உரிமையை என்னென்றியம்புவது!

காலஞ் சென்ற மேதாவிகளை யெல்லாம் தட்டி யெழுப்பி உரையாடும் வன்மை நமக்குண்டு. கண்ணகியைப் பற்றியும்,

சேரன் செங்குட்டுவனின் வட நாட்டுப் படையெடுப்பைப் பற்றியும் இளங்கோவடிகளிடம் வினவலாம். கம்பனைத் திறந்து காவிய இன்பத்தைப் பருகலாம். குடும்பப் பிணக்கா, அறநெறியில் ஐயமா, அரசியற் சிக்கலா—எந்த வழக்கையும் வள்ளுவன் என்னும் நீதிபதியிடம் கொண்டு போகலாம். நடுக்கண்ட நியாயம் கைமேல் கிடைக்கும். நூல் நிலையத்துள், பல காலத்தினரையும், பல நாட்டாரையும் காணலாம். சிலர் அரசிய லுலகில் தலைசிறந்தவர்கள். போர்க்களத்தில் பெரும் புகழ் படைத்தோர் சிலர். நுண்ணறிவால் கண்ணியம் வாய்ந்தோர் சிலர். பண்டைய செய்திகளையும், சான்றோரின் வாழ்க்கை வரலாறுகளையும் அடுக்கடுக்காய்ப் பிழையின்றிச் சிலர் கூறுவர். சிலர் இயற்கைத் தேவியின் நுணுக்கங்களைத் தெள்ளத் தெளியக் காண்பிப்பர். சீரான வாழ்வை நடாத்தும் வழியைப் புலப்படுத்துவர் சிலர். சிலர் அமைதியான மரணம் அடையும் மார்க்கத்தைக் காட்டுவர். சிலர் தங்களுடைய குதூகலத் தன்மையால் நமது கவலைகளை நீக்கி மகிழ்ச்சியை ஆக்குவார்கள். புண்பட்ட மனத்திற்கு ஆறுதல அளிப்பார் சிலர். 'ஐந்தையடக்கு,' 'தனக்கு மருத்துவன் தான்' என்று இன்னோர் அன்ன போதனைகளைச் செய்வார் சிலர். சுருங்கச்சொல்லுமிடத்துக் கலைத் துறைகளின் கதவுகளையெல்லாம் நமக்காகத் திறந்து விடுவார்கள். இவ்வளவு அருமை பெருமை வாய்ந்த நூல் நிலையங்களை நாடுதோறும் வீடுதோறும் போற்றி வளர்க்க வேண்டும். புதிதாகத் தமிழ் நாட்டில் இப்பொழுதுதான் இவ்வியக்கம் தோன்றியிருக்கிறது. நூல்நிலையத்துக்கான கிரந்தங்களைப் பொறுக்குவதில் பிரத்தியேகக் கவனம் செலுத்தப்பட வேண்டும். உயர் நூற்களைப் பொருள் செய்யும் வன்மை அறிவோர்களுக்கே யுண்டு. பொது மக்களுக்கு என்செய்வது? அல்லும் பகலும் தொல்லைப்பட்டு இல்லம் சேரும் மூளைகளுக்கு உயர் நூற்களைப் பொருள் செய்யும் வன்மை கிடையாது. சேயின் உடல் நலம் தெரிந்து பால் ஊட்டும் தாய்போல், மக்கள் மூளைத்திறனறிந்து நூல்களை வழங்க வேண்டும். அரிய கருத்துக்கள், உயர் கொள்கைகள் நிரம்பிய நூல்கள் தாய் மொழியில் இனிய எளிய நடையில் ஆக்கப்பட வேண்டும்.

# வில்லியம் டெல்

## சுவிட்ஜர்லாந்தின் சுதந்திர வீரன்.

திரு. எம். பொன்னுஸ்வாமி அவர்கள்.

சுவிட்ஜர்லாந்தென்பது ஐரோப்பாக் கண்டத்திலுள்ள ஓர் தேசமாகும். பச்சைப் பசேலெனப் பசுந்தாளாடை கட்டிய பல குன்றுகளும், வானுறவோங்கி நிற்கும் மரங்களின் வரிசையும், கானாறுகளின் நீர்ப் பெருக்கும், மலையருவிகளின் வளமும் அந்நாட்டை அலங்கரிக்கின்றன. வாவிகளும், தடாகங்களும் அந்நாட்டைச் சுற்றியிருக்கும். வனப்புமிக்க அவ் வாவிக் கரைகளில் மழலை பழகும்

ஆக்குவோரை ஊக்கவும் வேண்டும். அறிவுத் தெய்வம் வதியும் கோயிலின் பாதை யாவரும் முயற்சியின்றி நடக்கும்படி செப்பனிடப்பட வேண்டும். ஆகலால் பொது மக்களுக்கு அறிவைப் பரப்பும் நூல்களையே பெருக்க வேண்டும்.

. நூல் நிலைய இயக்கம், மிகுந்த ஜன நாயகம் வாய்ந்தது. குடியாட்சியிலுள்ள குற்றங் குறைகளை அறவே நீக்கவல்லது இவ் வியக்கமே. பல்கலைக்கழக மாணவனுக்கு வழங்கும் உயர் அறிவைப், பண்ணையில் வாடும் தொழிலாளிக்குக் கொடுக்க முயற்சிக்கும் இயக்கத்தைக் காட்டிலும் மிகுந்த ஜனநாயகம் வாய்ந்த இயக்கம் எது?

ஆகலால் இந்த நூல் நிலைய இயக்கத்தில் நாம் ஒவ்வொருவரும் ஈடுபட்டு, நாடுதோறும், வீடுதோறும், வீதிதோறும் கலையைப் பரப்புவோமாக.

---

கிளிகளொரு புறமாயும், நடை பழகும் மயிலினங்கள் ஒரு வரிசையாயும், இனிய ஓசையால் இசைத்துப் பாடும் குயிற்கூட்டங்களொரு மருங்காயும். மலர்களிலுள்ள தேனைக் குடித்து மதிமயங்கி ரீங்காரமிட்டுக்கொண்டுலவும் வண்டினங்கள் மற்றொரு பக்கமாயும் நிரப்பியிருக்கும் அதிசய அற்புதக் காட்சிகளை அங்கே காணலாம். இத்தகைய வனப்புவாய்ந்த அச் சுவிட்ஜர்லாந்து தேசத்தைப், பதினான்காம் நூற்றாண்டில் ஆஸ்ட்ரிய நாட்டாராண்டுவந்தனர். கொடுங்கோன்மை நிறைந்துள்ள அவ் வாஸ்ட்ரிய நாட்டுப் பிரதிநிதிகள் பலர், சுவிட்ஜர்லாந்து நாட்டில் அநீதச் சட்டங்களையும் அடக்கு முறைகளையுங் கையாண்டு மக்களை மிருகங்களினும் கீழாக அவமதித்து நடத்திவந்தனர் சுவிட்ஜர்லாந்தின் குடிமக்களோ தம் வலிமையிழந்து, சுதந்திரம் போய்ச் சுகமிழந்து ஆஸ்ட்ரியர்களுக்கு அடிமைகளாய் நின்று தவித்தனர். நிற்க

யூரி யென்பது சுவிட்ஜர்லாந்து தேசத்திலுள்ள ஒரு சிறிய கிராமம். அதன் அண்மையில் ரூசஸ்நதி, தெளிப்பளிங்கன்ன தீப்புனல் நிறையப்பெற்று வெகு அழகாக ஓடிக்கொண்டிருக்கிறது.

அவ் வாற்றின் கரை ஓரத்தில் ஒரு சிறிய குடில் இருந்தது. அதைச்சுற்றி ஆடுகள் நிறைந்திருக்கும். அச்சிறு குடிலில் வதியும் புருடனே நமது கதாநாயகனாகும். ஆஹா! நமது சுதந்திர அன்னையின் இருப்பிடமெங்கே? மானத்தையே ஆபரணமாகப் பூண்டு சுதந்திரத்திற்காக உயிரை விடக் குதித்துக்கொண்டிருக்கும் தியாகிகளின் குடிலல்லவோ எழில்பெறும் எம் அன்னைக்கு இருப்பிடம். இதுகாறும் உலகில் தனக்கென வாழாப் பிறர்க்கென வாழும் தியாகிகள் பிறந்தவிடம் பெரும்பாலும் கூரைகளால் வேய்ந்த சிறுமண் வீடுகளே! ஆஹா! அச்சிறு குடில்களின் பெருமையை என்னென்றியம்புவது? சுவிட்ஜர்லாந்தின் சுதந்திர வெற்றிக்குக் காரணமாயிருந்த நமது கதாநாயகன் பெயரை வில்லியம்டெல் என்று எல்லோரும் அழைப்பார்கள்.



அவன் ஆடுகளை மேய்க்கும் இடை மகனாகும். நாள்தோறும் ஆடுகளை மேய்த்து ஜீவனோபாயம் பண்ணிவந்தான். அவனுடைய ஆஸ்திகளெல்லாம் அவனுக்குள்ள சில ஆடுகள்தான். எல்லாவற்றையும் விட அவன் நேசித்த பொருள் ஒன்று உண்டு. அதுதான் அவனுடைய புத்திர ரத்தினம். மழலை பேசிக் கொஞ்சும் குழவிகள் அவனுக்கு வேறு இல்லாதபடியால் தன்னுடைய ஒரே மகனிடத்தில் அதிக வாஞ்சையைக் காட்டினான். அந்த யௌவன குமரன் பத்தாண்டுப் பிராய முள்ளவனாக இருந்தான். நமது வில்லியப்டெல் என்னும் வீரனும் அவன் மகனும் ஆடுகளைப் புலங்களில் ஓட்டி மேய்த்துச் சுகமே காலம் கழித்து வந்தனர். நமது வில்லியப்டெல்லினுடைய ஒப்பற்ற அரும் புதல்வனின் எழில் முகத்தில் எப்பொழுதும் புன்முறுவல் தவழ்ந்தவண்ணமா யிருக்கும். ஊக்கமும் உற்சாகமும் நிறைந்த உள்ளமுடையவன். ஆட்டுக்குட்டிகளைத் தனக்கேற்ற இனிய நண்பர்களாகக் கொண்டு அவைகளுடன் ஓடி ஆடி விளையாடுவான்.

நமது சுதந்திரத் தியாகியாகிய வில்லியம்டெல் வில்வித்தையில் பேர்போன மகா அதி சமர்த்தன். குறி தப்பாமல் எய்வதில் குவலயத்தில் ஒப்பாருமில்லான். அன்பு, அடக்கம் நிரம்பிய அஞ்சா நெஞ்சன். மானமே பெரிதெனக் கொள்ளும் மாண்பு மிக்கான். அவனது புகழ் அந்நாடெங்கும் இன்றளவும் பரவியிருக்கின்றது.

* * * * *

ஒருநாள் மாலை ஐந்து மணி இருக்கும். சுவிட்ஜர்லாந்திலுள்ள ஆல்டார் நகரத்தில் எங்கும் ஜனங்கள் கும்பல் கும்பலாகக் கூடியிருந்தனர். துக்க முகத்தோடு ஒருவருக்கொருவர் மெதுவாகப் பேசிக்கொண்டிருந்தனர். ''அந்தோ! இந்த ஆஸ்ட்ரியரின் கொடுமை பொறுக்க முடியவில்லையே'' என்று சொல்லிக் கண்ணீர் வடித்தனர் சிலர். ''ஐயோ! நம்மை ஆளும் இந்தக் கவர்னர் மிகக் கொடியவன்'' என்று கையை நெறித்துக்

கொண்டு அழுதனர் பலர். இவற்றிற்கெல்லாம் காரணமென்ன வென்பதைப் பின்வரும் சம்பவங்களால் அறிவோம். கடைத் தெருவின் மத்தியில் ஓர் கம்பம் நாட்டப்பட்டிருந்தது. அதன் மேல் முனையில் ஓர் ஆஸ்டிரிய தொப்பி தொங்கவிடப் பட்டிருந்தது. அதன் பக்கலில் ஜெஸ்லர்............என்ற ஆஸ்டிரிய கவர்னர் ஓர் அழகிய புரவியில் அமர்ந்திருந்தான். அவனைச் சுற்றிலும் ஈட்டிகள் பிடித்த போர் வீரர்கள் பலர் நின்றுகொண்டிருந்தனர். கடைவீதி வழியாகச் செல்லும் ஜனங்கள் அக் கம்பத்தின் அண்மையில் நெருங்கி ஆஸ்டிரிய தொப்பிக்கு மண்டியிட்டுச் சலாம் செய்து சென்றனர். அதுவே அக் கொடிய கவர்னரின் ஆக்கினையாகும். மானமுள்ள மக்கள் அவ் விழிதொழிலுக்கு ஒருப்படாராயின் போர் வீரர்களின் ஈட்டி முனைக்கு இரைதான். இவ்விதமாக நாழிகை பல செல்ல, வில்லியம் தன்னருமை மகனைக் கையில் பிடித்துக்கொண்டு அவ் வீதிவழியாக வந்தான். கம்பத்தையும் அருகில் நிற்கும் கவர்னரையுங் கண்டான். அவைகளை லக்ஷியம் செய்யாமல் சென்றான். அதைக் கண்ட கவர்னருக்கு அடக்கமுடியாத கோபம் பிறந்தது. அவன் தனது உரத்த குரலில் "அடே சுவிட்ஜர்லாந்தின் அடிமை நாயே" எனது கட்டளை என்ன வென்பது உனக்குத் தெரியாதா? அங்ஙனமாயின் "கம்பத்தின் முன் பணிந்து வேண்டிக்கொள்" என்றான். அப்போது வில்லியம் தனது விரிந்த மார்பையும் திரண்ட தோளையும் திருப்பிக் காட்டி, அசையாது நின்றுகொண்டு "ஆண்டவனொருவனுக்கே என் முடி இறைஞ்சும்" என்று அஞ்சாது கூறினான். கவர்னராகிய ஜெஸ்லர் என்பவன் வெகுண்டெழுந்து "அடிமை நாயைப் பிடியுங்கள்" என்று தன் போர் வீரர்களுக்குக் கட்டளையிட்டான். அப்பொழுது வில்லியம் தன்பாலணுகும் வீரரைக் கையமர்த்தி, ஜெஸ்லரை நோக்கிக் கவர்னரே! சற்றுப் பொறுங்கள் என்று சமாதானம் கூறினான். ஆஹா! அவன் கூறிய வீர மொழிகளைப் போன்று எமது "பாரதி" யார் அழகாகப் பாடுவதை எண்டெடுத்துத் தருகிறேன்.



"சதையைத் துண்டு துண்டாக்கினும் உன்னெண்ணம்
சாயுமோ? ஜீவன் ஓயுமோ?
இதயத்துள்ளே இலங்கும் மகா பக்தி
யேகுமோ? நெஞ்சம் வேகுமோ?" (பாரதி)

வில்லியம் மறுபடியும் கவர்னரை நோக்கி "நீ இப்பொழுது என்னைக் கொன்று விடலாம். உன் இரத்தம் தோய்ந்த வாளால் என் தலையை வெட்டி வீழ்த்தி விடலாம். ஆனால் என்னுள்ளத்தில் எழுந்த மகா உன்னதமான சுதந்திர உணர்ச்சியைத் தடை செய்ய உனது வாளாலும் ஈட்டியாலும் முடியாத காரியமாகும். ஆஸ்ட்ரியரின் கொடுமையான ஆட்சியால் எங்கள் நாட்டு மக்கள் ஒவ்வொருவரின் உள்ளத்திலும் சுதந்திர உணர்ச்சி தகதக வென்று கொழுந்துவிட்டெரிகின்றது. அதன் பலனை சமீபத்திற் காணலாம்" என்று கூறினான். அதற்குள் வீரர்கள் வில்லியமைப் பிடித்துக் கவர்னர் முன்பு நிறுத்தினார்கள். தீப்பறக்குஞ் சிவந்த கண்களோடு அக் கவர்னர் உற்று நோக்கி "என் கையால் உன்னைக் கொல்லப் போவதில்லை அதற்கு வேறு வழியிருக்கின்றது" என்று கூறிவிட்டு வில்லியத்தின் மகனைப் பக்கத்திலிருந்த ஓர் மரத்தில் கட்டி அவன் தலையில் ஓர் ஆப்பிள் பழத்தை வைக்கும்படி கட்டளையிட்டான். அது முடிந்ததும் 50 அடித் தூரத்திலிருந்து அப் பழம் இரண்டு துண்டுகளாக விழும்படி குறி பார்த்து எய்யவேண்டுமென வில்லியமுக்குக் கட்டளையிட்டான். அந்தோ! என்ன கொடுமை; சிறிது குறி தப்பினாலும் தன் ஒப்பற்ற மகனின் ஆவியைக் கொள்ளைகொள்ளும் அவ் வதைச் செயலுக்கு யாரே ஒருப்படுவர்? மிகமிகத் தயங்கினான் வில்லியம் என் செய்வான் பாவம்? அப்பொழுது கவர்னர் கடுங் கோபங் கொண்டு "அதைச் செய்துமுடி, அப்பொழுதுதான் உனக்கு விடுதலை" என்று கூறினான்.

இருதலைக் கொள்ளி எறும்புபோல, இடர்ப்பட்டுத் தயங்கி நிற்கும் தந்தையை நோக்கி, மரத்தில் கட்டுண்டு கிடக்கும் இளஞ்

சிங்கம் "தந்தையே! தயங்கவேண்டாம். விடுதலை அல்லது மரணம், இரண்டிலொன்றை விரைவாகச் செய்து முடியுங்கள்" என்று கர்ஜித்தான். தந்தையின் உற்சாகத்திற்கோ அளவில்லை. உயிரையும் துரும்பாய் மதிக்கும் ஒப்பற்ற இப்புதல்வனைப் பெற்ற தந்தை ஏன் தளர்ச்சியடையப் போகிறான் ?

அக்கணமே வில்லியம் தன் வரிசிலையை வளைத்தான். நாணேற்றினான். பெருந் திரளான மக்கள், அம்முடிவைக்காண இமைகொட்டாது நோக்கியிருந்தனர். "வில்லியமுக்கு ஜே" "அடிமை வாழ்வு ஒழிக" "ஆஸ்டிரியர் அநீதம் வீழ்க" என்ற பெருத்த ஆரவாரம் கூட்டத்தினின்று கிளம்பியது. குறி அடித்தாகிவிட்டது. ஆப்பிள் பழம் இரு துண்டாகிக் கீழே விழுந்தது. வில்லியம் விடுதலை பெற்றான். ஜனங்கள் ஜெயகோஷம் செய்தார்கள். அதனால் ஜெஸ்லரின் முகத்தில் கோபக்குறி அதிகமாயிற்று. தனது எண்ணம் நிறைவேறாமல் ஏமாற்றமடைந்தது, அதிக ஆத்திரத்தைக் கிளப்பிவிட்டது. 'வில்லியம்! நீ ஜெயமடைந்தாய் அதற்காக எனக்கு நன்றி வணக்கம் செலுத்தி நின் மகனுடன் செல்வாயாக" என்றான். அந்த இறுமாப்பான வார்த்தை வில்லியத்தின் நெஞ்சில் புகுந்து மனவேதனையையுண்டுபண்ணிற்று. அவன் கோபத்தோடு "எனக்கு ஜெயத்தைத் தந்த எனது ஆண்டவனைத் தொழுகின்றேன். ஆனால் யான் எய்த அம்பு, குறிதவறி என் அருமைப் புதல்வனுக்கு இன்னல் விளைத்திருக்குமாயின் அடுத்த அம்பு உன் மார்பைப் பிளந்திருக்கும்" என்று கூறிவிட்டுத் தன் மகனுடன் வீடு சென்றான். அந்தத் தியாகியால்—சுதந்திர புருஷனால் சுவிட்ஜர்லாந்து ஆஸ்ட்ரிய ஆட்சியிலிருந்து விடுதலை பெற்றது. அதைப் பின்னால் கூறுவோம்.

வில்லியம் நாமம் ஓங்குக; சுதந்திரம் தழைக்க.



# ஓர் கொலைஞனது காதலின் முடிவு.

ஸ்ரீமான் கே. எஸ். மஹாதேவன் அவர்கள்.

"தீங்கவி யியற்றும் பாவலரைப் போலக் கடுங் குற்றவாளிகளும், இயற்கையில் சாமர்த்திய முள்ளவர்களே யொழியச், செயற்கையால் அத்துணைக் கையாற்றல் உடையவர்களல்லர். ஆனால் பிறவிக் கள்வனும், கொலைஞனும் தன் தொழிலைக் காட்டிலும் இடையறாச் சந்தோஷத்தைப் புகட்டக்கூடிய ஜீவியம் ஒன்று உளதென்று அறிவானானால், தன் கொடிய வழக்கத்தைக் கடிதே விட்டுவிட்டு, மேன்பாடடைவன் என்பதற்குச் சிறிதும் ஐயமில்லை. சென்ற இருபது ஆண்டுகளாக நான் நியாயாதிபதியாயிருந்துபெற்ற அனுபவமாகும் இது." இதை நான், ஆறு உயிர்களைக்கொன்று என்னிடம் நியாயத் தீர்ப்பிற்கு வந்த ஓர் கடுங் குற்றவாளியினின்றும் தெரிந்துகொண்டேன். பீஷ்வா என்னும் பெயர் கேட்டமாத்திரத்தில் உடல் நடுங்குவர் வங்காளியர். அவனைப்பற்றிய ஆச்சரியகரமான சாமர்த்தியங்களைக் கூறாத பத்திரிகைகளே கிடையாது. தனது தைரியத்தோடு சாமர்த்தியத்தையும் கலந்து தன்னைப் பிடிக்கப் பின்பற்றி வருபவர்களை எட்டவே ஒழித்துவந்தான். கடைசியாகத் தன்னைத் தொடர்ந்த ஓர் போலீஸ் உத்தியோகஸ்தனைக் கொன்று நாப்பறையறையும் நாட்டைவிட்டு நீங்கினான். இரண்டு வருடங்கள் வரையிலும் அவனுடைய ஆர்ப்பாட்டமின்றி ஜனங்கள் நிம்மதியாயிருந்தனர். பிறகு ஒருநாட் காலை தானே போலீஸ்டேஷனுக்கு வந்து தன் குற்றத்தையெல்லாம் சொல்லித் தன்னை விசாரித்துத் தகுந்த தீர்ப்புச் சொல்லுமாறு வேண்டி நின்றான்.

அவனைப்பற்றிய நியாயத் தீர்ப்பு என்னண்டை வந்தது. பீஷ்வா, தன்பேரில் சாற்றப்பட்ட குற்றத்திற் கெல்லாம் தனக்கொன்றும் தெரியாதென்றான். எனக்கு அவனைத் தூக்குத் தண்டனைக்கு உட் செய்வதைவிட வேறு ஒரு வழியும் தோன்றவில்லை. அவ்வாறு அவனுக்குத் தூக்குத் தண்டனை வாசித்தவுடன் அவன் முகம் பொலிவுற்றது. அவன் புன்னகை புரிந்தான். அது அவன் உண்மையான ஆநந்தத்தை வெளிக்காட்டியது. அத்தகைய புன் முறுவலை யான் முன் பார்த்ததில்லை. அவன் தனது கைகளை இறுகக் கட்டிக் கொண்டு மேலே நிமிர்ந்து நோக்கித் தனக்குக் கிடைத்த பாக்கியத்திற்காக இறைவனைத் தியானிப்பது போல் தோன்றிற்று. பிறகு போலீஸ் பந்தோபஸ்தோடு பீஷ்வா கோர்ட்டை விட்டு நீங்கினான்.

அன்று நிகழ்ந்தது என் ஜீவியத்திலேயே ஓர் ஆச்சரியமாக இருந்தது. பீஷ்வாவின் புன்னகை என் மனதை வாட்டினது. இரவில் அவன் தன் கைகளைக் கட்டிய வண்ணம் ‘‘சீக்கிரம் என்னைத் தூக்க உத்தரவு கொடும்’’ என்று கேட்பதுபோல் கனவு கண்டேன். காலையில் அவனைப் பற்றி இன்னும் தெரிய விரும்பினேன். ஜெயிலுக்குட் சென்றேன். அவன் தனிமையாக அவனுடைய அறையில் இருப்பதைக் கண்டேன்.

என்னைக் கண்டவுடன் அவன் மரியாதையாக எழுந்து நின்று ‘‘காலம் கிட்டியதா?’’ என்றான். ‘‘இன்னும் இல்லை’’ என்று சொல்லிக்கொண்டே அவனண்டை உட்கார்ந்தேன். ‘‘எதற்கும் நான் தயார்’’ என்று மொழிந்துகொண்டு அவன் மிக விநயத்தோடு நின்றான்.

கொஞ்ச நேரம் வரையில் நிஸ்ஸப்தம் பரவியது. தனது இரு கைகளாலும் தன் தலையைத் தாங்கி வெகு தூரத்திலுள்ள ஏதோ ஒருவஸ்துவைக் குறிப்பாய்ப் பார்ப்பதில் தன் கவனத்தைச் செலுத்தினவனா யிருந்தான். ‘‘பீஷ்வா, நான் உன்னோடு தனிமையாக உரையாட விரும்புகிறேன்; நீ ஏன் உயிரை வெறுத்து நிற்கின்றாய்’’ என்று நான் கேட்டேன்.



பீஷ்வா திடீரென்று என் முகத்தை யுற்றுநோக்கிக் கலவரத்துடன் பார்க்க விழித்தான். சங்கட மேலீட்டால் ‘‘என்னிடமிருந்து தாங்கள் எதை யறிய விரும்புகின்றீர்கள்?’ என்று பரிதாபகரத்துடன் கூறினான்.

அவன் என்னை ஏறிட்டுப் பார்க்கும்பொழுது அவனுடைய கிழிந்த சட்டைப் பையிலிருந்து செந் நிறமுடைய பவள மாலையொன்று தென்பட்டது. அது என்னவென்று தெரிவதில் என் ஆத்திரம் தூண்ட நானே அதை யெடுத்தேன். உடனே குற்றவாளியினுடைய கோரக் காட்சிகள், முகத்திலுங் கண்களிலும் ஜொலித்தன. உதடுகள் துடித்தன. அக்கணமே அவன் குதித்தெழுந்து ‘‘அதைக் கொடுங்கள்’’ என்று கூவினான்.

உடனே அதை அவன் கையிலிட்டு, ‘‘அது என்ன?’’ என்று வினவினேன். சிறிது நேரம்வரை பீஷ்வா ஸ்தம்பித்து நின்றான். பதில் உரைக்க நா எழவில்லை. அப் பவள மாலையை உற்று நோக்கிய வண்ணம், வெகு அருமையாகக் காப்பாற்றப்பட்ட அந்தப் பொக்கிஷத்தில், காதலியைக் கையிழந்த சோகத்தில் தன்னை மறந்தான். பழைய நினைவுகள் திடீர் திடீரென்று அவன் மனதிற்குத் தோன்றின. பெருமூச் செறிந்தான். அவன் முகம் வேறுபட்டது. ‘‘இரத்தம் இரத்தம்’’ என்னும் வார்த்தையைக் கலங்கிய மனதுடன் அவன் தனக்குள்ளேயே சொன்னான். மெதுவாக ‘‘எனது ஆருயிரின் குருதி, காதலரசியின்பால் என் கை மோசம்’’ என்று புகன்றுகொண்டே சோகமுற்றுச் சோர்ந்து வீழ்ந்தான். பின்னெழுந்தான்.

அவன் தன்னை யறியாமலே தன்னுடைய ரகசியத்தை வெளியிட்டதைக் கண்டு மனம் குழம்பினவனாய் ஆயாசத்தோடு சரேலென்று எழுந்து, ‘‘ஏன் நீர், சாகும் தருவாயி லிருக்கும் ஒருவனுடைய ரகசியத்தை அறிய விரும்புகிறீர்; நான் எல்லாக் குற்றத்தையும் ஒப்புக்கொண்டு விட்டேனே—படு கொலைகளையும பகர்ந்தேனே; எனக்குத் தகுந்த தண்டனையையும் தாங்களும்

கொடுத்திருக்கின்றீர்களே; நியாயமும் செலுத்தப்பட்டிருக்கின்றதே; வேறு என்ன பாக்கி?" என்றான். "கடைசியாக நீ பார்க்க விரும்பியவர் எவருமில்லையா?" என்ற கேள்விக்கு, அவன் திகைத்து என் முகத்தை உற்று நோக்கினான். "தாங்கள் உண்மையில் அவ்வளவு அன்போடு கேட்கின்றீர்களா? நான் மரிக்குமுன் என் குழந்தையை ஒரு தரம் பார்க்க விரும்புகிறேன்" என்றான்.

"உனக்கும் ஒரு குழந்தை யிருக்கிறதா?" என்று மிக்க ஆச்சரியத்தோடு கேட்டேன்.

சிறிது நேரத்திற்கு அவனால் ஒன்றும் பேச முடியவில்லை. பிறகு வெறுத்த மனதினால் ஏற்பட்ட அலக்ஷியச் சிரிப்போடு "நான் என் ஜீவியத்தையே வீணாக நழுவ விட்டு விட்டேன்; என் இரகசியத்தை நழுவ விட்டால் என்ன! நான் விரும்பிய மரணத்தைத் தாங்கள் தடையின்றிக் கொடுத்தீர்கள். அப்படிப்பட்ட மஹானுக்கு நான் என்ன செய்தால்தான் தகாது. பிரபுவே! நான் என் வரலாறு அனைத்தையும் தங்களுக்கு ஒன்றும் விடாமல் சொல்லுகிறேன்" என்றான்.

சிறந்த சாமர்த்தியசாலியான பானர்ஜி என்னும் துப்பறியும் இன்ஸ்பெக்டர், என்னைத் தொடர்ந்தபொழுது தற்காப்புக்காக அவர் உயிரை மாய்த்தேன். ஆனால் மென்மேலும் என்னைப் பிடிக்க ஆட்கள் வந்துகொண்டிருந்தமையால் ஈவு இரக்கமில்லா நன்றிகெட்ட மானிடக் குழாத்தில் உறைவதைக் காட்டிலும் வஞ்சனையில்லா மான்கள் துள்ளி விளையாடும் கானகமே என் மனதிற்கு ஒத்திருந்தமையால், சமீபத்தில் கல் என்று கரைந்து வீழும் நீர் வீழ்ச்சியின் தோற்றமும், விதம் விதமான மலர்களைப் போர்த்துக்கொண்டோடும் கானாறுகளின் காட்சியும், ஆனந்தமே உருக்கொண்ட காட்டுப் புள்ளினங்கள் களித்துக் குலாவும் கவினும், வண்டினங்களின் கீதங்கள் நிறைந்த இயற்கையின் வனப்பும் சற்றும் குன்றாத கானகத்தை அண்மி அங்கோர் சிறு



குடிசில் என் கையினாலேயே அமைத்தும், காய் கனி கிழங்குகளைத் தின்றும், சிற்சில சமயங்களில் நான் வேட்டையாடிக் கொண்டு வரும் மான் மரை முதலியவற்றின் ஊனுணவுண்டும் எனது காலத்தைக் கழித்து வந்தேன்.

மனித வாசனையையே விட்டகன்றும் என்னை விதி விட்டிலது. என் குடிசைக்குப் பக்கத்தில் ஸாந்தல் ஜாதியாரின் கூட்டமொன்று என்னைப்போல் இயற்கையையே அனுசரித்து வாசம் செய்திருந்தது. நான் அவர்களை நாடிச் செல்லவுமில்லை. அவர்களை ஒரு பொருட்டாக நினைக்கவுமில்லை. எனினும், மனிதருக்குண்டான தயை அருள் பச்சாத்தாபம் அன்பு பிரியம் இவைகளில் ஒன்றிலேனும் பற்றில்லாத வங்காளத்துச் சாமர்த்தியத் திருடனாகிய பீர்வா என்பவன் மீள முடியாத—இறுகக் கட்டுண்ட ஓர் காதலில் ஆழ்ந்தான். என்ன விந்தை!

அக்காதல் எவ்விதம் ஏற்பட்டதென்று இப்போது என் ஞாபகத்திற்கு வரவேயில்லை. ஒரு நாள் நான் காட்டு வழியாக வரும்பொழுது மரங்களடர்ந்த ஓர் இடத்தில், மலர் மகளோ! மலை மகளோ!! அல்லது மானுட மகள் தானோ!!! என்று மதி மருண்டு ஐயுறும் வண்ணம் ஓர் கன்னிகையைக் கண்டேன். அவள் அழகு, என் மனதைக் கவர்ந்ததென்று சொல்லுவதைத் தவிர்த்து வேறு யாது கூறட்டும். ஆயினும் செடிகளின் பசிய இலைகளால் அம்மெல்லியலாள் தேகம் அநேகமாக மறைவுற்றிருந்தது. அனுக அனுக கருமையான அவள் கூந்தலில் பன்னிற ஜாதி மலர்கள் காணப்பட்டன. அவள் மருண்ட பார்வைக்கிணங்க அச்சமயம் காயப்பட்ட ஓர் சிறிய மான் குட்டியின் காலுக்குச் சிகிச்சை செய்துகொண்டிருந்தாள். அவளைக் கண்டதும் என் கல்லான மனமும் அவள் வசப்பட்டது. எனினும் என் மனதை ஒருவாறு தன் வயப்படுத்திக் கொண்டு அவளிடம் சென்று "இந்த மானை எனக்கு ஈவாயாக; அது எனக்கு நல்லுணவாகும்" என்றேன்.

இதைச் செவியுற்ற அந்த அணங்கு, என்னை நிமிர்ந்து பார்த்தாள். அவளுடைய கண்கள் இரக்க மிக்க தோற்றத்தைக் காட்

டின. அவள் தனது மடியில் வைத்திருந்த சில பழங்களை என் முன் வைத்து "நீர் பசி நோயால் வருந்துகின்றீர்; இதை யருந்தும்" என்றனள். பிறகு கொஞ்சம் தைரியம் கொண்டு என்னை நோக்கி "இவ்வளவு அழகு வாய்ந்த, யாதொரு பாவத்தையு மறியாத மிருகங்களைக் கொல்ல ஒருபோதும் நினையாதேயும். ஏற்கெனவே இது தன்னைக் காயப்படுத்திக் கொண்டிருக்கிறது. ஆகையால் இதைக் குணப்படுத்துவதற்குத் தகுந்த மூலிகைகள் கொண்டு வாருங்கள்" என்று என்னைத் தன் வபப் படுத்தி, ஆஞ்ஞாபித்து அனுப்பினாள்.

நான் அவளது கட்டளையை மறுக்க முடியவில்லை. அன்று முதல் ஒவ்வொரு நாளும் அவள் என்னைப் பார்க்க வருவாள். இப்படி நாட்கள் பல சென்றன. ஒரு நாள் மாலைக் காலம், புறாக்களும், குயில்களும், நாகணவாய்ப் புட்களும் பேடையும் ஆணும் ஜோடி ஜோடியாகக் கூட்டங் கூட்டமாகப் பரம சந்தோஷத்தோடும் சுயேச்சையோடும் தத்தம் இனிய கீதங்களோடு உலாவி விளையாடிக் கொண்டிருப்பதைப் பார்த்தோம். சற்றே தயங்கி அவள் இரு கைகளையும் இறுகப் பிடித்து என் மார்போடணைத்து அவள் காதில் "அழகிய தாமரை மலரில் வீற்றிருக்கும் எனதாவி யனைய அன்னம் போல்வாய், உன்னை நான் காதலிக்கின்றேன்; உன்னை விட்டு அரைக்கணமும் இனி என்னால் தனித்திருக்க வொண்ணாது' என்று மெல்ல மெலிந்து தளர்ந்த குரலோடு கூறினேன்.

அவள் தன் தலையை உயர்த்தி என்னைப் பார்த்து வெட்கித் தலை குனிந்து, தன் கால் நகத்தின் அழகைக் கவனிப்பவள் போல் புன்முறுவல் தவழ, "நானும் உம்மை முதல் முதல் கண்டது முதற் காதலிக்கிறேன். உமது திரண்ட தோளும், அகன்ற மார்பும் உம்மை ஓர் சுத்த வீரன் என்றே காட்டுகின்றன" என்று நவின்றாள். அதைக் கேட்டதும் அந்தோ! என் பழைய கொடிய செய்கைகள் எல்லாம் என் மனதை ஒன்றன்பின் ஒன்றாக வருத்தின. அவளிடத்தி னின்றும் சற்று விலகி நின்றேன்.



"பெண்ணே, நான் உன்னை ஒருபொழுதும் சந்தோஷமான நிலைமையில் வைக்க முடியாது; நான் மகா பாதகன்" 'குலத்திலும் கொடியேன், குணத்திலும் சிறியேன், குற்றமே பெரிதுடையேன்' என்று என் பழைய ஜீவியத்தைப் பூராவும் ஒன்று விடாது சொன்னேன்.

எல்லாவற்றையும் செவி சாய்த்த அக் குலமகள், கடைசியில் மனம் பொறாமல், என் மார்போடு சாய்ந்து, விம்மி, விம்மி அழுது "தாங்கள் முன்பு எப்படி இருந்தீர்கள் என்பதைப் பற்றி நான் கவலைப்படவில்லை. உம்மையே நாதனாக விரும்பி யுள்ளேன். நீரே என் பதி, என் தெய்வமும் நீரே" என்று மனம் தளரச் சொன்னாள். சில தினங்களில் எங்கள் காதல் மணமும் காந்தர்வ மணமாய் முடிந்தது. கடவுள் அருளால், ஓர் பெண் மகவும் பிறந்தது. எங்கள் சந்தோஷத்திற்கு அளவில்லை. சில காலங்களாக நாங்கள் இயற்கை வாழ்வு வாழ்ந்து இயற்கை இன்பமே துய்த்து இனிதே காலங் கழித்து வந்தோம்.

பின்னர் என் கண்மணியன்ன காதலி, வாரத்திற்கு ஒருமுறை தனது பிறந்த அகத்திற்கு ஏகுவள். இப்பால் கொஞ்சக் காலமாக அதைவிட அடிக்கடி சென்றனள். அவ்வாறு செல்லுவதைக் கண்டேன். ஏன்? என்று கேட்டேன். "உறவினரைப் பார்க்கவே" என்றாள். ஒரு நாள் இரவு என் மனைவி வெகு நேரம் வரை வரவில்லை. சற்று மனது சலிப்புற்றேன். சந்திரனும் காய்ந்தான். நானும் சற்று உலாவக் கானுட் புகுந்தேன். வீட்டின் அருகாமையி லுள்ள ஓர் தடாகத்தின் கரையை அடைந்தேன். குளிர்ந்த சந்திரனின் வெள்ளிய கிரணங்கள் அந் நீர்நிலையில் பட்டதினால் அந் நீர்ப் பரப்பு வெள்ளித் தகடுகள் போலப் பளீர் பளீர் என்று மின்னியது. சமீபத்தில் காலடிச் சத்தமும் கேட்டது. சற்று மறைந் திருந்தேன். ஐயோ, என்ன கண்ணுற்றேன்! என் மனம் பதை பதைத்தது. பொறுத்தேன். என் மனைவி, யாரோ ஓர் ஆடவனுடன் சல்லாபமாகப் பேசிச் சிரித்து

விளையாடிக்கொண்டு வருவதை என் கண்ணாரக் கண்டேன். சிறிது நேரத்தில் என் மனைவி அவனிடம் போக விடை பெற்றாள். அந்த ஆண்மகனும் என் மனைவியைக் கட்டி முத்தமிட்டு அப்புறம் சென்றான்.

என் மனது என்ன பாடு பட்டிருக்கும். ஈயத்தைக் காய்ச்சி, மட மட வென்று ஊற்றினால் என்ன பாடு என் மனது படுமோ, அந்நிலையில் அது இருந்தது. மனதைச் சாந்தப்படுத்திக்கொண்டு வீடு சென்றேன். என் முக வாட்டத்தைக் கண்டு என் மனைவி "என்ன வாட்டமுற்றிருக்கின்றீர்கள்" என்று என்னைக் கேட்டதற்கு "ஒன்றுமில்லை" என்று வாளா இருந்தேன். மறு நாளும், அன்று மறுதினமும் அதே விதமான காக்ஷியை அக்கானிடத்துக் கண்டேன்.

போதும் 'படமுடியாதினித் துயரம் படமுடியாதரசே நான் பட்டதெல்லாம் போதும்' என்பதற்கிணங்க என் மனது பொறுக்க முடியவில்லை. என் மனம் ஓர் எரி மலையையொத்திருந்தது. துயரப் புகையால் மூடுண்டது. மூன்றாம் நாளிரவு வீட்டு வேலை முடிந்ததும் என் மனைவி என் அண்டை வந்தாள். அவள் முகத்தில் புன் முறுவல் காணப்பட்டது. என் எரிகின்ற மனதிற்கு அது எண்ணெயாக விளங்கிற்று. "கிட்ட வா" என்று உரக்கக் கூவினேன். அவள் பயந்தாள் எனினும் என் மார்பில் தன் தலையை வைத்து அழுத்தி என் இருதயத்தைக் குளிரச் செய்ய முயன்றாள். அந்தோ என்ன நினைந்தேன்! ஐயோ என் செய்தேன்! என் சொல்வேன்! என் ஆவி சோர்கிறதே! என தங்கம் பதை பதைக்கிறதே! கைகால் அயர்ந்து வருகிறதே! கொடிய ரண ரங்க சூரர்களை யானாலும், வீரரை யானாலும், அதி சூரரை யானாலும் கண்டு அஞ்சா என் நெஞ்சம் அயர்கிறதே! 'ஆய்ந்தோய்ந்து காரியம் பாராதான் தான் சாகக் கடவன்' என்ற பழமொழிக்கு யானே இலக்காயினேன். நிரபராதியை— ஆவியே யனையாளை—அன்னம்போல்வாளைக்—கரும்பினு மினித்த



மொழி பகர்வாளைக்—கருங் குழலாளை—அந்த மெல்லியலை நினைக்கவே நெஞ்சம் நெக்குருகுகிறதே! சினமென்னும் சர்ப்பங் கதுவ மிதமிஞ்சித் தலைக்கேறிய குரூர மென்னும் விஷமயக்கத்தால் இன்னதுதான் செய்வதென்று ஒரு சிறிதும் ஓராது போயினேன்! மதி மயங்கினேன். கள்ளங் கரவு அறியாத கண்மணி—ஸ்படிக மனத்தாள்—அப் பாவை போல்வாள், இத் தீயேனுக்கு ஒரு சிறிதும் உண்மை உரைத்தாளில்லை. என் செய்வேன்; என் செய்தேன். காயப்பட்ட மான் குட்டிக்குக் கருணை காட்டிய மானையாளைக் காலன் போன்ற கொலைக்கருவியால் அவள் உடலையும் உயிரையும் குளிரச் செய்தேன்!

முடிந்தது. ஆவி பிரியும் தருவாயிலும் அவள் குளிர்ந்த முகத்தில் விசனக் குறி காணப்படவில்லை. புன்னகையே தவழ்ந்தது. அவளை மெல்லக் கீழே கிடத்தினேன். அவள் மெல்லிய தேகத்தை மெதுவாகத் தூக்கித் தோழிலிட்டுக் குளக் கரைக்குச் சென்றேன். அங்குத் தீ மூட்டி அவளை அதில் கிடத்தினேன். அவள் மார்பில் தவழ்ந்த இப்பவள மாலையை அவளுடைய சின்னமாகச் சேமித்தேன். எந்த இடத்தில் நான் அவளைக் காதலித்தேனோ அதே யிடத்தில் அவளை அக்கினிக் கடவுள் ஆகுதியேற்றான். என்னே காதற்றிறம்!

அதற்குள் விடிந்தது. என் புறம்பே காலடிச் சத்தம் கேட்டது; திரும்பிப் பார்த்தேன். ஓர் ஆடவனைக் கண்டேன். உற்று நோக்கினேன். அவனே என் மனைவியுடன் அன்று காணப்பட்ட மனிதன் உடனே அவன், "நான் உமக்குப் புதிது உமது மனைவியின் சகோதரன். நான் வெகுநாட்களாக அன்னியநாடு சென்றிருந்தேன். என்னைப்பற்றி உம்மிடத்தில் என் சகோதரி ஒன்றும் சொல்லி யிருக்கமாட்டாள். ஏனெனில், நாங்கள் உங்களுக்கு நல்லதோர் இல்லம் கட்டி அதன் கிரகப் பிரவேசத்தன்று எல்லோரும் சந்தோஷங் கொண்டாட எண்ணி யிருக்கின்றோம்" என்று சொல்லும் பொழுதே அப் புது மனிதனுடைய கரத்தை நான் இறுகப் பிடித்துக்கொண்டு "உண்மையைச் சொல், நீ யார்?" என்றேன்.

"ஏன்? நான் உமது மனைவியின் உடன் பிறந்தவன். நாம் அவளிடம் செல்லுவோமே. அவள் எங்கே!" என்றதும், திடீரென்று துணுக்குற்று மெய் பதைத்து ஆவி சோர்ந்து இடியேறுண்ட நாகம்போல் ஆ! எனதாருயிரே! அருமருந்தே! காதலின் முடிவே! என்று அலறிக்கொண்டே வீழ்ந்து அவசமுற்று மூர்ச்சித்தேன்.........இப்பால் அன்னவர் மார்பகத்தே சாய்ந்திருந்த நிலைமையில் மூர்ச்சை தெளிந்து எழுந்து நின்று, அதோ! என்று எரியும் எரியைச் சுட்டிக் காட்டி கண்ணீரில் மெய் குளிக்க விம்மி விம்மி நாக்குளர வாய் தடுமாற நிகழ்ந்தவற்றை யெல்லாம் கூறி, என் கைவாளை அவனிடம் கொடுத்து என்னைக் கொன்று பழிக்குப்பழி வாங்குமாறு சிரம் சாய்த்து இரங்கி வேண்டினேன். அன்னவர், "நீ உயிரோடிருப்பதே உனக்குத் தகுந்த தண்டனை" என்று சொல்லிச் சரேலென அகன்றார்.

அன்றே மாண்டேன். ஆனால் உடல் இங்குளது. இது செல்லும் நாள் அறியேன். அக்கற்பு நல்லாள் செல்நெறியை யானும் கடிதில் பின்பற்றுமாறு கருணை காட்டுவீர்களாக.

# பர்மிய மாதர்கள்.

ஸ்ரீமாந். கு. கோ. கிருஷ்ணன் அவர்கள், *B Sc., (Hons.)*

உலகத்தில் பெரும்பாலும் மேல் நாடுகளில் மாதர்களின் சுதந்திரக் கிளர்ச்சி, சுமார் நூறு வருடங்களுக்கு முன்னதாகவே உண்டாயிற்று. அங்குத் தற்போது மாதர்கள் பூரண சுதந்திரத்தைப் பெற்று முன்னேற்ற மடைந்திருப்பதை யாவரும் அறிவர். அப்படிச் சுதந்திரமடையாது, கல்வி கேள்விகளிற் குன்



றிக் கிடப்பது முக்கியமாகக் கீழ் நாட்டு மாதர்களே யென்று கூசாமற் கூறலாம் ஆனால் பர்மிய மாதர்களின் நிலைமை, ஏனைய கீழ் நாட்டு மாதர்களி னிலைமையைப் போலல்லாமல் மிகவும் வியக்கத் தக்கதாயும், போற்றத் தக்கதாயும் காணப்படுகிறது.

மாதர்கள் தனி உரிமையைக் கனவிலுங்காணாத பர்மாவின் வட மேற்கிலும் கிழக்கிலும் உள்ள நாடுகளால் பர்மா விரவப்பெற்றிருப்பினும், இத்தேசத்துப் பெண்கள் மாத்திரம் தமக்குத்தாமே சுயேச்சை பெற்றிருப்பது பெரிதும் வியப்பை விளைவிக்கிறது. ஆசியாக் கண்டத்திலேயே பர்மிய மாதர்கள் மாத்திரம் பெரும்பாலும் சுயேச்சையை இயற்கையாகவே பெற்றிருக்கிறார்களென்று சொல்லலாம். இந்தியா, சில காலம் புத்த மதத்தைச் சார்ந்திருந்தும், சீன தேசத்து மதம் இன்றும் புத்தமதமா யிருப்பினும் இத் தேசங்களி லுள்ள மாதர்கள் பர்மிய மாதர்களைப் போல் அவ்வளவு சுயேச்சையை (Freedom)ப் பெற்றிருக்கிறார்களென்று கூறுவதற்கிடமில்லை.

பர்மிய மாதர்கள் பொதுவாக மிக்க சௌந்தர்ய முள்ளவர்கள். அவர்கள் கூந்தற் சுருள்களையும், மெல்லிய வெள்ளிய ரவிக்கையையும் (Jacket) பட்டு ஆடை (Lungyi) யையும் பாதத்தில் பாதரட்சை (Slippers) யையும் தரித்தவர்களாய்க் கண்ணைக் கவருந் தன்மையிலிருந்து பார்ப்போர் மனதைப் பரவசப் படுத்துகின்றனர். பர்மிய மாதர்களின் வழக்கங்களும், வாழ்க்கையின் பெற்றிகளும், செய்கைகளும் வியக்கத்தக்கனவாய், வேறு மாதர்களிடம் காணப் படாத தனிப்பட்டனவா யிருக்கின்றன.

பர்மிய மாதர்கள் தங்கள் பர்மிய கணவர்களைப் போலவே வாழ்க்கையை மிகவும் இலேசாகக் கருதிவிடுகின்றனர். இவர்கள் தங்கள் தற்கால வாழ்க்கை, கடைசியான முக்தியாகிய 'நிர்வாண' தசை (Nirvana) யடைவதற்குரிய ஓர் படியெனக் கருதுகின்றனர். அவர்கள், 'மரணம் வர வெகு காலமுண்டு, நாம் அதற்குள் சந்தோஷ சாகரத்தில் ஆழ்ந்திருப்போமாக." என்று உலகத்திற்கு

எடுத்துக் காட்டுந் தன்மையில் கவலையற்று வாழ்ந்து வருகின்றனர். ஆதலால் அவர்கள் வாழ்க்கை, ஓர் அழகிய அன்னப் பட்சி, யாதொரு கவலையின்றிக் குதூகலமாய் ஓர் பெருந் தாமரைத் தடாகத்தில் வெகு சுலபமாக, மெதுவாக இரு பக்கமும் அழகான அலைகளையுண்டாக்கி நீந்திச் செல்லுவது போலிருக்கிறது. எப்பொழுதாவது வாழ்க்கையில் கஷ்டமுண்டானால் அவைகளைச் சிரித்த வதனத்தோடு ஏற்றுக் கொள்ளுகின்றனர். வருத்தம், மன வெறுப்பு, மனக் கிலேசம் முதலியவைகள் சாதாரணமாக அவர்களை வந்தடையா. ஆனால் இவைகள், அவர்கள் கணவர், நண்பர் சொந்தக்காரர் இவர்களில் ஒருவரை யிழந்தால் மட்டும் வந்தடைகின்றன. மற்றக் காலங்களில் ஆண்களோடு தாராளமாய் வார்த்தைகளாடவும், பெரும் வைபவங்களில் தலைமையாயிருந்து வேலைகள் நடாத்தவும் பிறப்புரிமை கொண்டவர்களா யிருக்கின்றனர். இவர்கள் ரோமன் காதொலிக் (Roman Catholic) மாதர்களைப் போலத் தங்கள் மதத்தையும், கடவுள் வழிப்பாட்டையும் மிக்க உள்ளன்போடும்; விடா முயற்சியோடும் பாராட்டி வருவர். அவர்கள் தங்கள் மதச் சுவாமியார்களை (Phoongyi)க் கண்டால் ஓடோடியும் வந்து வழிமறித்து தங்கள் இல்லங் கொண்டு சென்று தங்களாலியன்றதை யீந்துபசரித்து வழியனுப்புவர். கல்யாணமாகாத பர்மிய இள மாதர்கள் யாவரும் விரத நாட்களையும், உற்சவ நாட்களையும் ஒழுங்கே யனுசரியாமலிரார். இவர்கள் மடாலயங்களில் முழங்கால் படியிட்டுக் கையில் மணிக்கோவைகளை வைத்துக் கடவுள் தான் சிந்தித்து உருட்டிக் கொண்டிருப்பதை எக்காலமுங் காணலாம். இப்படி மடாலயங்களிற் காண்பது போலவே பர்மிய நாடகங்களில் இவர்கள் திரள் திரளாக உல்லாசமாய்ப் பாய்களிலமர்ந்து கொண்டு மிக்க ஆவலுடன் கவனமாய்க் காட்சி கண்டு களிப்புறுவர்.

ஆடைகள் அணிவதிலோ தெய்வ கன்னிகைகள்தான். அவர்களுக்கு உலகத்திலுள்ள பட்டாடைகள், வைரக் கற்கள் முதலிய விலையுயர்ந்த ஆடையாபரணங்களைச் சதாத் தரித்துக்கொள்ள மிகுந்த ஆவலுள்ளவர்கள். சில சமயங்களில் உயர்ந்த ஆடைகளை



அணிந்துகொண்டு தங்கள் கணவர்களிடங் குதித்தோடிப் போய்த் தன் உருவத்திற்குந் தான் அணிந்திருக்கும் ஆடைக்கும் எவ்வளவோ பொருத்தமா யிருக்கிறதென்று வெகு கெம்பீரமாய் எடுத்துப் பேசுவர். பர்மிய மாதர்கள் பல வர்ணங்களையுடைய பட்டாடை, பட்டுத் துண்டு முதலியவைகளணிந்து கையில் பர்மியக் குடை ஏந்தி, கால்களில் மிருதுவான பட்டுப் பாதரட்சையையும், கை கால்களில் தங்க வளையல்களையும், நீண்ட கூந்தற் சுருள்களில் ரோஜா மலர்களையும் சூடிக்கொண்டு தங்கள் படர்ந்த வதனங்களில் பர்மிய சந்தனமாகிய 'தனக்கா'வை இலேசாய்ப் பூசிக்கொண்டு பகலில் சூரிய வெளிச்சம், அவர்களின் மீது பட தெருக்களில் நடந்து விட்டால் அவர்களை நோக்க வெகு சௌந்தரியமாயிருக்கும். இவர்கள் உடுக்கைகளின் மேலுள்ள பற்றையும், ஒய்யார நடைகளைப் பற்றியும் அதிகமாய்க் கூறத்தேவையில்லை. பர்மிய ஆடவர்களும் அப்படியே. தாங்கள் தேடும் திரவியங்களை அணிகலன்களிலேதான் தாக்குவர்.

பர்மிய மாதர்கள் மணமுடித்துக்கொள்ள, தன் பூரண சம்மதம் முக்கியமானதா யிருந்தாலும் அவர்கள் தாய் தந்தையர்களின் சம்மதங்களையும் எதிர்பார்க்க வேண்டியிருக்கிறது. கலியாணம் செய்துவிட்டால் ஒரு மாது தன் கணவனோடு, இறக்கும்வரை பிரியாமலிருந்துவர வேண்டுமென்னும் நிபந்தனை யில்லை. மேலும் மற்றக் கீழ் நாட்டு மாதர்களைப்போல மனிதர் கண்ணுக்குப் புலப்படாமல் வீட்டிற்குள் அடைக்கப்படுவோரு மில்லை. மணமாகிவிட்டாலும் பர்மிய மாதர்கள் தங்களுடைய சந்தோஷ வாழ்க்கையைக் கைவிடுவதில்லை. இவர்கள் பெரிய குடும்பங்களைச் சார்ந்தோர்களானால் தங்களுக்குப் பிள்ளைகளுண்டானவுடன் தங்கள் வீட்டு வேலைகளையும், குழந்தைகளையும் பழுது பார்த்துக்கொண்டு மகிழ்வுடன் வாழ்ந்திருப்பர். ஆனால் சிறிது எளிய குடும்பத்தைச் சேர்ந்தவர்களானால் தங்களுக்கு மணமான பிறகுதான் கஷ்டமான நிலைமையையடைந்து அதிக உழைப்புக் காளாகின்றனர். இவர்கள் வேண்டுமானால் பஜாரில் ஓர் சிறிய கடையையாவது அல்லது சிறியதோர் தொழிற் சாலையையாவது உண்டாக்கித் தங்கள் குடும்பத்தை நிலைகு

லையாது பரிபாலித்துவருவர். ஒருபுறத்தில் வியாபார விருத்திக்குப் பாடுபடுவதிலும், மற்றொரு புறத்தில் குடும்ப க்ஷேமத்தைக் கவனிப்பதிலும் இவர்களுக்குப் போதிய அறிவு, இடையறா முயற்சி முதலிய அரிய பெரிய குணங்களேற்பட்டிருப்பது மிகவும் போற்றத்தக்கது. குடும்பச் செலவுகளெல்லாம் இவர்களே செய்துவர வேண்டும். ஒருசமயம் பர்மிய புருஷர்கள் முக்கிய சம்பாத்தியக்காரர்களாயிருப்பினும் தாங்கள் செலவு செய்யுமுன் தங்களருமை மனைவிகளின் பூரண சம்மதங்களைப் பெறுவார்கள். ஓர் பர்மிய மாது தன் கலியாணத்தில் கொஞ்சத் திரவியங் கொண்டுவந்தால் அதைத் தன் கணவனிடங் கொடாது தான் சொந்தமாக வைத்து விருத்திசெய்வர். பொதுவாகப் பர்மியர், பணத்தைச் சேர்த்து வையார். தாங்கள் தேடுவதை யெல்லாம் தங்கள் சுகத்திற்கும், தருமத்திற்கும் செலவுசெய்துவிடுவார்கள் இன்றைக்கு வேண்டுமென்பதைத் தவிர்த்து நாளை வேண்டுமென்றெண்ணார். இவர்கள் எறும்புகளைப்போல வேலை செய்வதில் ஊக்கமற்றவர்கள். தங்கள் சிறிது வாழ்நாட்களுக்குள் தங்களால் கூடியவரை கஷ்டமின்றிச் சந்தோஷமாயிருக்க நோக்கமுடையவர்கள். ஆண் பெண் இருபாலாரும் அநேகமாய் மெலிந்த தேகமுடையவராகவே காணப்படுவர். பாரமான சுமை சுமக்கவோ முடியாது. பசி, நோய் முதலியன வரின் அவைகளைக் கூடியவரை சகிக்கும் வன்மையும் இராது. கடுவெயில் குளிர்காற்று பனி முதலியனவற்றை நிர்வகித்து நின்று எவ்வித வேலைகளையும் இயற்றும் பான்மை யிவர்களிடமில்லை. சரியான தேகவன்மை படைத்தவர்களல்ல. ஆனால் மனோவன்மையோ என்றாலும் அப்படித்தான். தேக ஆற்றலைக்கொண்டு செய்யும் எத்தொழிலிலும் நம்மவர்க்கும் இவர்களுக்கும் வெகு வித்தியாசமுண்டு.

தங்கள் மத ஆச்சாரத்தில் பர்மிய மாதர்களுக்கும், ஆடவர்களுக்கும் பேதமொன்று மில்லை. சட்டங்களிலு மப்படியே. ஒரு குடும்பத்திலுள்ள இளைய குமாரத்தி தன் மூத்த சகோதரனைப் போலவே சொத்துக்களுக்கு உரிமை யுடையவளாகிறாள். பர்மிய ஆண்களும் பெண்களும் யாதொரு உயர்வு தாழ்வில்லாமல் நடந்து கொள்ளுகின்றனர். ஓர் புருஷன் ஒரு பெண்ணுக்குத் தன்னைவிட



ஓர் அரிய பெரிய குணமுண்டு எனப் பெருமை பாராட்டுவது போலவே ஓர் பெண்ணும் ஒரு புருஷனைப்பார்த்துத் தன்னைவிடப் பெருமையுள்ளவனெனக் கருதிக்கொள்ளுகிறாள். ஓர் புருஷன் ஒரு பெண்ணைத் தேர்ந்தெடுக்குமுன், "அவள் எப்பேர்ப்பட்டவள்? மரியாதையுடையவளா? நல்லபுத்திக் கூர்மையுள்ளவளா? எவ்வழியிலும் நற்குண நற்செய்கையுடையவளா?" என்னுங் கேள்விகளுக்குப் பொருத்தமான விடை பெற்றுக்கொள்ளுவது போலவே ஓர் பெண்ணும் ஒரு புருஷனைத் தேடிக்கொள்ளுகிறாள்.

ஆனால் தற்காலப் பர்மிய மாதர்கள் தங்கள் தாய்மார்களைவிட மிக்க வேறுபாடுகளை யடைந்திருக்கிறார்கள். இவர்கள் தாங்களே மாறுதல்களை யடையாவிட்டாலும் காலமாவது மாறுதல்களைக் கொண்டுவந்திருக்க வேண்டும். தினந்தோறும் தாங்கள் பார்த்திராத புதிய வஸ்துக்களையும், செய்கைகளையும் தூரதேசத்து மாதர்களின் மூலமாய்க் காண்கிறார்கள். கண்டவுடன் அவைகளின் மீது பற்று எற்படுகிறது. பற்று ஏற்பட்டவுடன் அந்நெறி பற்றிச் செல்ல முயலுகின்றனர். முக்கியமாய் மேனாட்டாரின் நடை, உடை, பாவனைகள் பர்மிய இளமாதர்களின் மனதைக் கவர்ந்து விடுகின்றன. அந்தோ! இப்படியாக அந்திய நாட்டாரைப் பின்தொடர்ந்து தங்கள் சுய நடை உடைகளின் மீதுள்ள பற்றை யிழக்கின்றனர். என்செய்வார் பாவம்; படக்காட்சி சாலைகளிலும், கலாசாலைகளிலும், சாலை சோலைகளிலும் மேனாட்டு நூதன நாகரிக உடை யணிந்தோர்களையே காண ஏற்பட்டுத் தங்களையறியாமலே அவ்வுடைகள் நடைகள் மனதைக் கவர்ந்துவிடுகின்றன. சிலர் அவர்களைப்போல நூதனத் தடபுடலிலுண்டான நறுக்குமயிர் (Bobbed hair) வைத்துக்கொள்ளுகின்றனர். சிலர் மேனாட்டு உடைகள் தரித்துக்கொள்ளுவதில் மிகத் திரவிய விரயமாகாதெனக் கூறுகின்றனர். எப்படியெனில், பர்மிய உடையணிந்து கொண்டால் தங்கள் காதுகளிலோ, விரல்களிலோ விலை யுயர்ந்த வைரக் கற்களைத் தரித்துக் கொள்வதவசியமாயிருப்பதால் மேனா

ட்டு உடைகளை யணிந்துகொள்ளுவது மிகவும் அவசியமாம். இது ஒரு வழியில் நகைப்பிற் கிடமானாலும் மற்றொரு வழியில் உண்மைதான். இந்தியாவில் வைரக் கற்களணிந்து கொள்ளும் பைத்தியத்தை எதிர்த்துப் போராடியவர்களாகிய மிஸஸ் நாயுடு, சிஹாலா தேவி போன்றவர்கள் பர்மாவிலில்லாததைப்பற்றி பெரிதும் வருந்துகிறோம். பர்மிய மாதர்கள் மேனாட்டுப் பழக்க வழக்கங்களில் அதிகமாய்த் தற்போது ஈடுபட்டு வராவிட்டாலும், இனிமேல் அவர்கள் தொகை அதிகப்படுமென்னும் அச்சத்திற்கிடமுண்டு.

பர்மிய மாதர்கள் தங்கள் கவலையற்ற சந்தோஷமான வாழ்க்கைக்குத் தகுந்தவாறு ஓர் சுறுசுறுப்பான உழைப்பாளி அல்லது திரவியவந்தனைக் கணவனாகத் தேட ஆசை கொள்ளுகிறார்கள். ஆகவே இவர்கள் அந்நிய நாட்டார்களை முக்கியமாகத் தங்களை ஆதரிப்பவர்களை எம் மதத்தவராயினும் எக் குலத்தவராயினும் மணந்து கொள்ளுகின்றனர். அப்படிக் கலப்பு மணமான பிறகு ஓர் கணவன் ஏதோ கஷ்ட காலத்தால் நஷ்டமடைந்து விட்டு சம்பாதிக்கச் சக்தியற்றவனாகி விட்டால் அவன் பர்மிய மனைவி, இல்லத்திருந்த சுக வாழ்க்கையில் சிறிது இழந்து வெளிப்புறப்பட்டு வியாபார முதலிய வகைகளில் சம்பாதித்து அவனை அறுசுவையோடு இருக்கவைத்து அன்னம் ஊட்டுவாள். ஆனால் அவன் சிறிது நம்பிக்கையின்மையையும், திருட்டுத்தனத்தையுங் காட்டித் தன் பர்மிய மனைவிக்குக் கோபத்தை யுண்டாக்கிவிட்டால், அவள் கையில் எடுத்துக்கொள்ளுவது தன் காலிலணியும் பாதரட்சையே. ஓர் பர்மிய மாதுக்குக் கோபம் வந்துவிட்டால் (ஓர் பர்மிய ஆடவனும் அப்படியே) மடம், அச்சம், நாணம் முதலிய குணங்கள் பறந்துபோய் தலைவிரி கோலமாய்த் தனக்குக் கோபமுண்டாக்கியவன் எப்பேர்ப்பட்டவனானாலும் அவனை அடிக்கத் தன் காலிலுள்ள பாதரட்சையையே தூக்குவாள். இவர்களுக்குக் கோபம் ஓர் அற்ப விஷயத்திற்கும் பொங்கி நிற்கும். இவர்கள் கலப்பு மணத்தால் இவர்களுடைய சுய மதம், நாகரீகம், நடையுடை பாவனை முதலியவைகள் சிறிது சிறிதாக க்ஷீணதிசை யடைந்து வருவதாகத் தெரிகிறது.



பர்மிய மாதர்கள் கல்வி பயில முன்வந்து விட்டனர். ஒரு ஆணுக்கும் ஒரு பெண்ணுக்கும் மனத்துவேஷ மேற்படுவதற்கு முக்கிய காரணம் பெண் கல்வியின்மையே என்று பெண்கள் விசேஷமாகக் கல்வி பயிற்றப்படுகின்றனர். "கல்வி நலனே கலனல்லால் மற்றோரணிகலம் வேண்டாவாம்." பெண்கள் பயிலுவதனால் பெருமையுண்டாகிக் கணவன் சொற்கேளார் என்னுந் தப்பபிப்பிராயங் கொள்ளுகிறவர் பலர். அவ்வபிப்பிராயம் தங்கள் பொறுமைக் குணத்தாலுண்டாவதே யன்றி வேறில்லை. கல்வி பயிலுவதினால் பெண்களிடத்தில் யாதொரு குறைவு மேற்படுவதில்லை. பெண்கள் பொதுவாகத் தங்கள் அருமைக் கணவர்களுக்கு உதவியாளர்களாகச் சுகத்திலும் துக்கத்திலும் வேண்டுமென்பதே அவர்களின் முக்கிய நோக்கம். இவர்களின் இப் பெருமை வாய்ந்த நோக்கங்களைக் கெடுத்துவிடுவது இவர்களை அடிமைகளாகப் பாவிக்கும் ஆடவர்களே! பெண்களிடத்தில் புருஷர்களுக்கு எவ்வித உழைப்புக்கும் ஊக்கங்கொடுக்குமோர் வித சக்தி உளது. அவ்வித சக்திகளை அவர்களுக்குச் சம உரிமை கொடுத்தாலல்லது நாம் காணமுடியாது. பர்மியர்களும் இவ்வித நோக்கமுடையவர்களாகவே யிருக்கின்றனர். கல்லூரிகளில் தற்போது சுமார் நூறு பர்மிய மாதர்கள் பயின்று வந்தால் வேறு உயர்தர ஸ்கூல்களில் பயின்று வருவோர் எத்தனைபேராவர் என்பது சொல்லாமலே யூகித்துக் கொள்ளலாம். கல்லூரிகளில் ஜட சாஸ்திரம், திராவக சாஸ்திரம் முதலிய ஆராய்ச்சிகளில் மிக ஊக்கங்கொண்டவர்களா யிருக்கின்றனர். கல்லூரிகளில் கற்கும் மாதர் யாவரும் பக்குவமடைந்த வயதினை யுடையவர்களே. இங்கிலாந்துக்கும் அநேகர் போய்க் கல்வி பயின்று வந்திருக்கின்றனர். தற்போது ஓர் பர்மிய மாது பாரிஸ்டராக (Bar-at-Law) இங்கிலாந்திலிருந்து வந்து இரங்கூன் ஹைக்கோர்ட்டில் உத்தியோகம் பார்த்து வருகிறாள். அங்கேயே மற்றொரு மாது B. L. பட்டம் பெற்றவளாய் ரிஜிஸ்ட்ரார் வேலையிலமர்ந்திருக்கிறாள். மற்றொரு மாது இங்கிலாந்தில் உயர்தர வைத்திய முறையில் பயின்று வந்து இரங்கூன் பொது வைத்திய சாலையில் மேலான பதவியிலிருந்து வருகிறாள். பர்மிய மாதர்களுக்குக்

கல்வி உணர்ச்சி இவ்விரண்டு மூன்று வருடங்களுக்குள் அதிகமாகிவிட்டது.

தற்போது, "தேசத்து மாதர் கூட்டம்" (National Council of Women) ஒன்று உண்டாகி வெகு தீவிரத்தோடு மாதர்களுக்குச் சகல உரிமைகளுங் கிடைக்கும்படி பாடுபட்டு வருகிறது. சட்டசபை முதலிய கூட்டங்களுக்கு அங்கத்தினர்களாகவும், வோட்டுகள் (Votes) கொடுக்கவும் சுதந்திரங்கள் பெற வெகு மும்முரமாய் உழைத்து வருகின்றனர். சைமன் கூட்டம் இரங்கூன் வந்துற்றகாலையில் சர் ஜான் சைமன் அவர்களிடம் தனியாகத் தங்கள் குறைகளுக்குத் தகுந்த உதவி செய்யுமாறு எடுத்துக் கூறியுள்ளனர். இக் கூட்டத்தாருக்குச் சட்டசபை முதலிய கூட்டங்களில் போராடி அவர்கள் எண்ணங்களைப் பூர்த்தி செய்ய முன் வந்திருப்பவர், இரங்கூன் நகர பரிபாலன சபைத் தலைவர் M. M. ரபி (M. M. Rafi M. L. C. Bar-at-Law. Lord Mayor of Rangoon.) என்னுமோர் இந்திய மகமதியரே.

ஆதலால் பர்மிய மாதர்களும் மற்றக் கீழ் நாட்டு மாதர் யாவரும் வேண்டிய சம உரிமைகள் பெற்றுத் தேசிய சீர்திருத்தங்களில் தலைப்பட்டுத் தேச முன்னேற்றத்திற்கு ஒத்துழைக்க எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிவாராக.



# கற்பகம்.

(பால்ய விவாஹத் தீமைகளைக் குறிப்பிடும் ஓர் சிறு கதை.)

ஸ்ரீமாந். ஈ. வி. சுப்ரமண்யன் அவர்கள்.

என் பெயர் கற்பகம். நான் வளர்ந்ததும் இருந்ததும் மறு மணம் செய்ததும் ஒரு கதையாகவேயிருக்கிறது. யான் என் கதையை வரைவதற்கு முன் சில உரைக்கிறேன். பொறுமையுடன் வாசிப்பீர்களாக. என சரிதை பால்ய விவாகத்தின் தீமைகளை நன்கு உணர்த்துவதாயிருக்கிறது. ஆகையால் வாசகர்களே, என் சரிதையை உண்மையென நம்பினாலும் சரியே ஒதுக்கி விடுவீர்களாயினும் சரியே. ஆனால் நான் வேண்டுவதெல்லாம் நீங்கள் இச் சரிதையிலுள்ள சாராம்சத்தைக் கிரகிக்க வேண்டுமென்பதே பாகும். மேலும் என் சரிதையாகிய இக் கதையை உயரிய "பாரதி"யில் பிரசுரிப்பதற்காக ஆசிரியருக்கு என் நன்றியறிதலான வந்தனங்களை உரிமை செய்து உவகை யடைகிறேன்.

எனக்கு நடத்திய விவாகத்தை பெண்ணுங்கால் கனவு கண்டதுபோல் இருக்கிறது. எனக்கு வயது சுமார் 4 இருக்கும். என் தாயார் என்னை மடியின்மேல் உட்கார வைத்துக்கொண்டிருந்தாள். எதிரில் ஒரு சிறு பையன் சுமார் 5 அல்லது 6 வயது இருக்கலாம். அவன் ஒரு வாழைப் பழத்தை ஆவலுடன் புசித்துக்கொண்டிருந்தான். சிறு குழந்தையாகிய அவனை, என் கழுத்தில் தாலியைக் கட்டும்படி அநேகர் தொந்திரவு செய்து கொண்டிருந்தனர். பிடிவாதத்துடன் அச் சிறுவன் தன் தாயை நோக்கி, 'அம்மா, உன்

கழுத்தில்தான் தாலியைக் கட்டுவேன்...... இல்லாவிட்டால் தங்கை கழுத்தில் கட்டிவிடுகிறேன்...... அவளுக்குக் கட்டமாட்டேன்,' என்று என்னைச் சுட்டிக் காட்டிச் சொன்னான். இப்பொழுதும் என் கண் முன் அப்படியே தோன்றுகிறது! அப்பொழுது எனக்கு ஒன்றுந் தோன்றவில்லை. மிரள மிரள விழித்தபடியே எனதருகில் நின்றுகொண்டிருந்த என் தந்தையை நோக்கி, 'அப்பா, இஃதென்ன' எனக் கேட்டேன். அவர் "அடி கற்பகம்" என அருமையுடனழைத்து, "உனக்குக் கல்யாணமடி! எதிரில் இருக்கிறான் பார் இராமு, அவனைத்தான் நீ கட்டிக்கொள்ள வேண்டும்" என விடையிறுத்தார். உடனே யான் 'அப்பா, நான் அந்த அழுமூஞ்சி இராமுவை விவாகம் செய்துகொள்ளேன். உன்னை விவாகம் செய்துகொள்ளட்டுமா? இல்லை, நான் அண்ணன் கோபுவைக் கலியாணம் செய்துகொள்ளுகிறேன்,'' என்று மழலை மொழிகளுடனுரைத்தேன். ஒரு நாட் காலை 7 மணி இருக்கும். 8 வயதுப் பெண்ணாகிய யான் என் சகிகளுடன் விளையாடிக் கொண்டிருந்தேன். மற்றப் பெண்கள் என் கழுத்திலுள்ள தாலியை நோக்கி ஏளனம் செய்துகொண்டிருந்தனர். எனக்கு மிகவும் அவமானமாயிருந்தது. கோபத்துடன் கழுத்திலிருந்த தாலியைப் பிடுங்கி வீசியெறிந்துவிட்டு என் தாயாரிடம் சொல்லப் போனேன். அப்பொழுது வீட்டில் பெருங் கோஷ்டமாயிருந்தது. என் தாயார் தமக்கை மற்றுமுள்ள அனைவரும் ஒப்பாரி வைத்து அழுதுகொண்டிருந்தனர். எனக்குச் சங்கதி யொன்றும் விளங்கவில்லை. திகைப்புற்று விழித்தேன். என்னைக் கண்டவுடன் என் தாயார் ஓடிவந்து என்னைக் கட்டிப் பிடித்துக் கொண்டு அழுதாள். என் தாயார் அழுவதைக் கண்டதும் எனக்கும் அழுகை வந்துவிட்டது. எல்லாம் முடிந்தது. அவரவர்கள் என் தாயாரிடம் மிகவும் பரிதாபத்துடன் பகர்ந்தனர். மெதுவாகச் சங்கதி யென்ன வென என் தாயாரின் காதுக்குள் கேட்டேன். என் தாயார் அழுகை கலந்த அன்புடன், "என் செல்வமே, நீ விதவையாகி விட்டாய்" என மொழிந்தாள். எனக்கு ஒன்றும் புரியவில்லை.



நாட்கள் கழிந்தன. மாதங்கள், வருடங்கள் வரிசையாகச் சென்றுகொண்டே யிருந்தன. என் கஷ்டம் எனக்குச் சிறிது சிறிதாகப் புலப்படத் தொடங்கிற்று. என் தாயாரைப் பந்துக்களனைவரும் என் தலைமயிரை நீக்கிவிடும்படி வற்புறுத்திக்கொண்டு வந்தனர். மேகத்திற்கொப்பான என் கருங் கூந்தலை நீக்க யாருக்குத்தான் மனம் வரும்? இப்படி மயிரை நீக்கிச் சடங்குகள் செய்யாவிட்டால், எங்களை ஜாதியை விட்டு நீக்கி விடுவதாக என் பந்துக்கள் பயப்படுத்தினர். என்ன செய்வதென்று தோன்றவில்லை!

எங்கள் வீட்டுக்கெதிரே ஓர் உத்தியோகஸ்தர் குடியிருந்தார். அவர் அதிகச் செல்வந்தரெனச் சொல்வதற்கில்லையாயினும் நடுத்தரமான வகுப்பைச் சேர்ந்தவர். அவருக்கு இரு பெண்களும் ஒரு புதல்வனுமுண்டு. சாம்பசிவன் என்னும் பெயர் புனைந்த அவ்வுத்தியோகஸ்தரின் புதல்வர் டாக்டர் பரீட்சைக்குப் படித்துக் கொண்டிருந்தார். லீவு காலங்களில் வரும்பொழுதெல்லாம் எங்கள் வீட்டுக்கு வராது போவதில்லை. சாம்பசிவனுக்கும் என் தமையன் கோபாலனுக்கும் மிகுந்த நட்பு ஏற்பட்டது. என் விருத்தாந்தத்தைக் கோபு மூலமாக அறிந்த சாம்பசிவன் என் மீது மிகவும் பரிதாபமுற்றார். விதவைகளுக்குரிய சடங்கினால் சீக்கிரத்தில் என்னைத் துன்பப்படுத்தப் போகிறார்களென அறிந்ததும் மிகவும் கிலேசமுற்றார். என் தலைவிதி இப்படியாயிற்று! யாரென்ன செய்யக்கூடும்?

சாம்பசிவனுக்கு டாக்டர் பரீட்சை முடிந்துவிட்டது. தற்போது வீட்டிலேயே யிருக்கிறார். ஆனால் ஒவ்வொரு நாளும் எங்கள் வீட்டுக்கு வருவது வழக்கம். யான் எதிர்பாராது இருமுறை சாம்பசிவனைச் சந்தித்ததுண்டு. என்னையறியாமலேயே ஒருவகை அன்பு சாம்பசிவன் மேல் உதித்தது. நாளுக்கு நாள் இது முற்றத் தொடங்கிக் காதலாக மாறிவிட்டது. ஒரு நாள் வீட்டிலிருந்த அனைவரும் ஒரு கலியாணத்திற்குச் சென்றிருந்தனர். எதிர் வீட்டுச் சாம்பசிவன் மெதுவாக வந்து திண்ணையின் மேல் உட்கார்ந்தார். தற்செயலாய் வெளியே யான் பார்த்தேன். சாம்பசிவனு

டையவும் என்னுடையவும் கண்கள் ஒன்றையொன்று சந்தித்தன. உடனே யான் நாணத்துடன் தலையைக் குனிந்து கொண்டேன். பிறகு அவர் மெதுவாகப் பேசத் தொடங்கித் தன்னை மணம் செய்து கொள்ளும்படி வேண்டினார். உடனே யான் எனது விதவா நிலைமையை விவரித்து, "தாங்கள் என்னை மணம் செய்து கொள்ளின் தங்கள் உறவினர்கள் தங்களை ஜாதிப் பிரஷ்டம் செய்து விடுவார்களே. மேலும் தங்கள் குடும்பத்திற்கும் அழியாப் பழியும் நேரும். ஆகையால் தாங்கள் கருதிய சங்கதியை மறந்து விடுங்கள். என் தலை விதி எப்படியாகிறதோ ஆகட்டும்" என்றேன்.

அவர் எனது பரிதாபகரமான நிலைமைக்கு மிகஇரங்குவதாயும், எனது ஜீவியத்தைச் செம்மை செய்து சந்தோஷப்படுத்த விரும்புவதாகவும் தேசத்தில் இப்பொழுது விதவைகளுக்குச் செய்து வரும் கொடுமைகளைத் தைரியத்துடன் எதிர்த்துப் போராடி ஒழிக்க முன்வருவதாயும், ஆகையால் என்னை மறு மணம் செய்ய உண்மையாகவே தயாராகி விட்டதாயும் அறிவித்தார். ஜாதியின் பெயரால், வழக்கத்தின் பெயரால், மதத்தின் பெயரால், சாஸ்திரத்தின் பெயரால் எனக்கு இனிமேல் ஏற்படப் போகும் கஷ்டங்களை அவர் எனக்கு விவரித்துக்காட்டவே, எனது கேவலமான நிலையை நான் உணர்ந்தவுடன் என் மனம் கொல்லனுலைபோற் கொதித்துக் கொண்டிருந்தது. அவரை அப்படியே கட்டிப் பிடித்துக் கொண்டு, என்னைக் காப்பாற்றுமாறு கெஞ்சிக் கெஞ்சி அழுதேன். என்னருமைக் கண்மணியே! பயப்பட வேண்டாம். உன்னைக் காப்பாற்றுகிறேன். யான் ஜாதியை விட்டு விலக்கப்பட்டாலும் சரியே, எத்தகைய துன்பங்கள் நேரிட்டாலும் சரியே! எப்பொழுது உன்னைக் காதலித்தேனோ அப்பொழுதே என் உடல் பொருள் ஆவி மூன்றையும் உனக்கே தத்தம் செய்துவிட்டேன். உனது மேன்மையே எனது மேன்மை. எனது தந்தையிடம் இதைச் சொல்லிப் பார்க்கிறேன். என் தந்தை ஒத்துக்கொண்டால் சரி. இல்லாவிடில் உனக்கு முன் சொல்லியபடியே நடக்கத் தவறேன். யோசிக்க வேண்டாம். யான் வேண்டுமென்றால், உண்மைக் காதலன் வேண்டுமென்றால், நீ மேன்மை அடைய வேண்டுமென்றால் நான் கூறிய



ஆலோசனையின்படி செய். உலகத்தார் ஏச்சுக்களைக் கவனிக்க வேண்டாம்; மறக்க வேண்டாம் என்று எடுத்துக் கூறித் தம் ஆவேசத்துடன் கூடிய சிறு பிரசங்கத்தை இனிதே முடித்தார்.

எனக்கு இன்று தலையை மொட்டையிடப் போகிறார்களென்ற சங்கதி ஊர் முழுவதும் பரவியது. எண்ணிலா ஜனங்கள் எங்கள் வீட்டில் வந்து கூடிவிட்டனர். என் தாயார், தந்தை முதலியவர்கள் விசனத்துடன் தலை குனிந்து கொண்டிருந்தனர். நேரம் சமீபித்து விட்டது. என்னை நோக்கிப் பச்சாதாபப் படுவார் வெகு சிலரே. கூடியிருந்த ஜனங்கள் பலவிதமாய்ப் பேசத் தொடங்கினார்கள். "பாழாய்ப்போன பொண் வீட்டிற்குப் போன மறு வருடத்திலேயே புருஷனைப் பறிகொடுத்தாளே" என்று பலவாறாக அநேகர் என்னைக் கடிந்து கொண்டனர்.

எல்லாம் தயாராய்விட்டது! திடீரென மோட்டார் இரதம் ஒன்று எங்கள் வீட்டிற்கு எதிரே வீதியில் வந்து நின்ற சப்தம் கேட்டதும் அனைவரும் வெளியே சென்று பார்த்தனர். மோட்டாரிலிருந்து திடீரென ஓர் வாலிபர் இறங்கினார். உடனே யான் என் பெற்றோர்கள் காலில் விழுந்து நமஸ்கரித்ததும் முன் நாங்கள் பேசி வைத்திருந்தபடி மட மடவென நடந்து மோட்டாரில் ஏறிக்கொண்டேன். திடீரென நடந்த சம்பவமாதலின், அனைவரும் ஆச்சர்யத்துடன் அப்படியே நின்று கொண்டிருந்தனர். மோட்டாரிலிருந்து இறங்கிய வாலிபர் அனைவருக்கும் வந்தனம் செலுத்திவிட்டு வண்டியில் உட்கார்ந்தார். வண்டி காற்றாய்ப் பறந்தது. ஒன்றும் அறியாதிருந்த ஜனங்கள் எங்கள் மோட்டார் செல்வதைக் கண்டு கலவரத்துடன் கூச்சலிட்டனர். என் பெற்றோர்கள் சங்கதி தெரியாது நின்று திகைத்தனர்.

மோட்டாரிலிருந்து இறங்கிய வாலிபர், டாக்டர் சாம்பசிவமே யென்பது யான் சொல்லாமலேயே விளங்குகின்றதன்றோ? எங்கள் மோட்டார் நேராகச் சென்று பிரம சமாஜக் கட்டிட



தமிழ்நாடு ... 600 008
198516

த்தை யடைந்தது. எங்களை எதிர் நோக்கிக் கொண்டு திரளான ஜனங்கள் கூடியிருந்தனர். மோட்டாரை விட்டு இறங்கியதும் முன்னேற்பாடாக அலங்கரித்திருந்த பிரம சமாஜத்தினுள் சென்றோம். அங்கு 18 வயதுக் கற்பகமாகிய எனக்கும் 28 வயதையுடைய டாக்டர் ராம்பசிவத்துக்கும் இனிது மணம் புரிவிக்கப்பட்டது.

தற்போது, தம்பதிகளாகிய யாங்களிருவரும் பிரம சமாஜத்தைத் தழுவி நிற்கிறோம். யானும் என் காதலரும் இனிதாகவே வாழ்ந்து வருகிறோம். தற்பொழுது நாங்கள் புதிய மதத்தைத் தழுவியதின் காரணம் உங்களனைவருக்கும் விளங்கியிருக்கக்கூடும். ஆர்ய சமாஜம், பிரம சமாஜம் ஆகிய இவைகள் இந்து மதத்திலிருந்து உண்டானவைகளே. இவைகளும் இந்து மதமாகவே கருதப்படுகின்றன. இந்து மதத்தில் பிறந்த எங்களை, ஹிந்துக்களும் எங்கள் ஜாதியார்களும் எங்கள் பந்துக்களும் எங்கள் குடும்பத்தார்களும் வெறுத்துத் தள்ளிய போதிலும், இந்து மதத்தின் புதிய பிரிவாகிய பிரம சமாஜம்—ராஜாராம் மோஹனராய் அவர்களால் ஏற்படுத்தப்பட்ட மதஸ்தாபனம்—கவிச்சக்கிரவர்த்தி ரவீந்திரநாத தாகூர், கவி அரசி சரோஜினி தேவி முதலிய இன்னும் அநேகம் பெரியார்கள் அனுசரிக்கும் மதக் கொள்கை எங்களை அன்புடன் ஏற்று எங்களுக்கு உதவிக் கொண்டிருக்கிறது. ஆதலின் வாசகர்களே, நீங்கள் இனியாகிலும் என்னைப்போலுள்ள அநேகம் பெண்களை ஆதரிக்காவிடின், ஆதரிக்கும்படி பிரசாரம் செய்யாதுவிடின் (ஐயோ பரிதாபகரமான அப் பால்ய விதவைகளின் கண்ணீர்) பாரத மாதாவின் மனதை வாள்கொண்டறுக்கும். ஆதலின் எது உசிதமென்பதைத் தாங்களே ஆலோசித்துக் கொள்ளுமாறு வேண்டிக் கொள்கிறேன்.

இந்திய வாலிபர்களே! விதவைகளின் கொடுமைகளை நாசமாக்கி, அவர்களுடைய ஜீவியங்களைப் புனிதமாக்கிச் செம்மைப்படுத்துங்கள். பெண்களின் கண்ணீர் இந்தியாவின் முன்னேற்றத்திற்குத் தடை என்பதை உணர்ந்து சமூக விடுதலைக்காகவும் தேச விடுதலைக்காகவும் உழைக்க உடனே முன் வாருங்கள்.



# இன்சூரன்ஸ்.

திரு. *R. M.* துரைச்சாமி பிள்ளை அவர்கள்

"இவ்வுலகத்தில் என்று பிறந்தோமோ, அன்று முதல் நமக்கு இறப்பு உண்டு. இதில் சற்றும் சந்தேகமேயில்லை" யென்று பெரியோர்கள் கூறியபடி இவ்வுலகத்தில் பிறப்பும் இறப்பும் மாறிக்கொண்டே வருகிறது. ஒரு மனிதன் நூற்றுக் கணக்காய்ச் சம்பாதித்து, அவற்றையெல்லாம் செலவழித்துவிட்டு, மிச்சம் வைக்காது, இறந்து போவானானால்’ அவன் மனைவி மக்கள் எத்தனையோ கஷ்டங்களுக்கும் நஷ்டங்களுக்கும் ஆளாகிறார்கள். ஒருவனுக்கு மேலும் மேலும் புத்திர பாக்கியம் பெருகிக்கொண்டே இருந்ததென்றால், அவனுக்கு அம்மக்களைப்பற்றிய கவலைகள் நாளுக்கு நாள் பெருகிக்கொண்டேயிருக்கின்றன. "நம் மக்களுக்குக் கல்வி போதிக்கப் பணம் வேண்டுமே; அவர்களுடைய முன்னேற்றத்திற்குச் சரியான படிப்பின்றி, கைத் தொழில், வியாபாரம் முதலியவைகள் செய்ய வேண்டுமென்றாலும், அவற்றிற்கு நூற்றிற்குமேல் ஆயிரக்கணக்கான ரூபாய் வேண்டுமே; இதற்கு என்ன செய்வது? பொருள் சேர்த்து வைக்காமல் நாம் திடீரென்று இறந்தால், நம் மனைவி மக்கள் கதி என்னவாகும்? தரித்திரர்களாய்த் தெருவில் நின்று கஷ்டப்படுவார்களே; எப்படி நம் மனைவி மக்களுக்குப் பொருள் சேர்த்து வைப்பது?" என்று இப்படியெல்லாம் எண்ணி எண்ணி மனதைப் புண்ணாக்கி மிகவும் கஷ்டப்படுகிறான்.

ஆகையால் குடும்ப பாரம் என்ற கடுஞ் சுமையை "லைப் இன்சூரன்ஸ்" (Life Insurance) என்ற சுமைதாங்கியில் இறக்கிச் சிரம பரிகாரம் செய்து கொள்ளலாம். பாமர ஜனங்கள் ஒரு நாள்

சிற்றுண்டி அல்லது டிராமா, தமாஷ் விஷயங்களில் செலவு செய்யும் இரண்டணாவைத் தினம் மீதி வைத்துச் சேர்த்து இன்சூரன்ஸுக்குச் செலுத்த வேண்டிய சந்தாவாகக் கொடுத்தால், அவரவர்களின் மனைவி மக்களுக்கு ரூ. 1,000 முதல் 2,000 வரை கிடைக்கலாம். கம்பெனிக்குச் செலுத்த வேண்டிய சந்தாத் தொகையானது, வீண் செலவு செய்ய விடாதபடி தடுத்துச் சிக்கனமாய்க் கவலையின்றி வாழச் செய்து தன் அந்திய காலத்தில் தனக்கும் தனது மனைவி மக்களுக்குமாகச் சேர்த்து வைத்த பொக்கிஷமாக உதவுகிறது. கோடீஸ்வரர்களான ராக்பெல்லர், கார்ஸி, போர்டு முதலானவர்கள் 'இன்சூரன்ஸ்'' செய்து பலன் பெறுகிறார்கள். ''இன்ஷியூர்'' செய்வது ஒரு குடும்பத்திற்குப் பணம் சேர்த்து வைக்கக்கூடிய முறையில் சுளுவான தென்றும், கஷ்டம், கவலை, நஷ்டம் முதலியவைகளைத் தடுத்து வாழ்வை இலகுவாக்கும் வழியென்றும் கூறுகிறார்கள்.

மேனாட்டில் ஒருவன் ஓர் பெண்ணைத் தன் மகனுக்கு விவாகம் செய்யக் கேட்கும்பொழுது, பெண் வீட்டார் கேட்கும் இரண்டு முக்கியமான கேள்வி எவை யெனில் (1) உன் மகன் தொழிலென்ன (2) அவன் தன் ஜீவனை எவ்வளவுக்கு இன்ஷியூர் (Insure) செய்து வைத்திருக்கிறான்? அதாவது திடீரென்று அவன் இறந்தால். அவனுக்குப் பிற்காலம் அவன் குடும்பம் க்ஷேமமாய் வாழும் பொருட்டு என்ன ஏற்பாடு செய்து வைத்திருக்கிறான் என்பவைகளே. இந்த இரண்டு கேள்விகளுக்கும் அவர்கள் கொடுக்கும் விடை தம்முடைய குலத்திற்கும் அந்தஸ்திற்கும் பொருந்தினதாய் இருந்தால் மட்டுமே அவ் விவாகத்தைச் செய்ய உடன்படுவார்கள். இன்சூரன்ஸ் கம்பெனிகளில் போட்டுவரும் பணத்தை நாமே சேர்த்து வைக்கக் கூடாதா? என்று சிலர் நினைக்கக் கூடும். சமுசாரத்தி லுள்ள அநேகந் தொல்லைகளை மேற்கொண்டு அப்படித் தவறாமல் பணம் சேர்த்து வைப்பது துர்லபம். அன்றிச் சேர்த்தாலும், அகஸ்மாத்தாய்ச் செலவுகள் ஏற்படும். ஆனால் நியாயஸ்தலங்களில் நடக்கும் கேசுகளினால்



ஏராளமான குடும்பச் சொத்துக்கள் பாழாய்ப் போகின்றன. அஜாக்கிரதையாய்க் கொடுத்த கடன்கள் கொடுத்தவர்களைப் பாப்பராக்கி விடும். சொத்துள்ளவர்களுள் அநேகர் வேலையில்லாம லிருப்பதால், அவர்கள் வாழ்வில் அநேக மாறுதல்கள் உண்டாகலாம். ஆனால் தக்கபடி இன்ஷியூர் செய்துவிட்டால் குடும்ப எதிர்காலக் கவலைக்கு இடமில்லை

இன்சூரன்ஸ் என்பது நல் வாழ்வி லிருக்கும்பொழுதே பின் வரும் துன்பங்கள் பாதியா வண்ணம் ஒரு திட்ட முறையுடன் தன் முயற்சியால் சேமித்து வைக்கப்படும் பொருள் இது ஒரு நிலையமாக ஏற்படுத்தப்பட்டுளது. இம் முறையால் தன்னையும் தன் குடும்பத்தாரையும் பாதுகாப்பதுடன் பங்குதார்களாகிய நம் மனித சமூகத்திற்கும் நமது முக்கிய கடமையாகிய அரிய உதவியை உற்ற தருணத்தில் செய்து நம் தேயத்தின் செல்வ வளத்தைப் பெருக்குதற் குரிய சிறந்த நன்மைக் கிடமுண்டு. இம் முறையா லேற்படும் நிதியைக் கொண்டு அநேக கைத் தொழிற் சாலைகள், இருப்புப் பாதைகள், கப்பல் தொழிற்சாலைகள், அநேக பல்கலைக்கழகங்கள் முதலிய பயன்மிக்க பொது நலங்களை அமைப்பதற் குரிய தலை சிறந்த மூலதனங்களாகச் சாதகம் செய்யும் பொருட்டு அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் உபயோகப்பட்டு வருகிறது. இதுவே நவீன சாஸ்திரீய தர்மம் (Scientific Charity).

''இந் நில வுலகின்கண் ஒற்றுமைப்பாடு நிலவ வேண்டின் இப்பேர்ப்பட்ட 'ஆபத்துக் குதவும் நிதிப்'' பெருக்கத்தாலே உலகின் ஒரு கோளத்தி லிருப்பவருக்கும் மற்றொரு கோளத்தி லிருப்பவருக்கும் ஒற்றுமை ஏற்படுகிறது'' என்று நமது காருண்ய முள்ள ஐந்தாம் ஜார்ஜ் மன்னர்பிரானவர்கள் அவர்கள் தம் அரிய சொற் பொழிவுகளி லொன்றில் கூறியுள்ளார். இன்சூரன்ஸ், பொருளியலின் (Economics) ஒரு பாகமாக அமெரிக்கா ஐரோப்பாவின் பல்கலைக்கழகங்களில் கற்பிக்கப்பட்டு வருகிறது. அத் தேயங்களில் பெரும் பான்மையாய் எல்லோரும் இன்ஷியூர்

செய்து வருகிறார்கள். கலியாணம், படிப்பு, கிழத் தன்மைக்கேற்ற உபகாரச் சம்பளம், மரணம், வியாதி, மோட்டார்கார், திடீரென்று வரும் ஆபத்துக்கள், தேகத்தின் அங்கங்கள் வகையறா, கட்டிடங்கள், கைத் தொழிற்சாலைகள், நெருப்புவாதனை முதலிய ஆபத்துகளுக் குட்பட்டு வரும் நஷ்டங்களை மீட்டிக் கொள்ளவும் அவர்கள் இன்ஷியூர் செய்து வருகிறார்கள். ஷை குடார்த்த கோளத்தில் (Western Hemisphere) ஆயிரக்கணக்கான இன்சூரன்ஸ் கம்பெனிகள் ஏற்பட்டிருக்கின்றன. அமெரிக்காவில் 4 இன்சூரன்ஸ் கம்பெனிகளிலுள்ள ஐவேசுகள், அத் தேயத்திலுள்ள எல்லாத் தேசீய பாங்குகளிலும், ஜாயிண்டு ஸ்டாக் கம்பெனிகளிலும் உள்ள ஐவேசுகளைக் காட்டிலும் அதிகரித்திருக்கிறதென்றால், அத் தேசத்தி லுள்ள இன்சூரன்ஸ் முன்னேற்றத்தைப் பற்றி விவரிக்கத் தேவையில்லை. மேலும் அதன் முற்போக்குக்காக ஆழ்ந்த யோசனையுடைய அமெரிக்கர் ஐரோப்பியர் சிறப்புற்ற தன்னந்தனிக் கவனத்துடன் ஓம்பி வருகிறார்கள்.

இன்ஷியூர் செய்வதின் நன்மைகளை யறிந்த பெரியோர்களும் பிரபுக்களும் அவரவர்கள் தகுதிக்குத் தகுந்தவாறு இன்ஷியூர் செய்திருக்கிறார்கள். இத்தாலி தேசத்து அரசர் 15 லட்சம் பவுனுக்கும், வேல்ஸ் இளவரசர் அரைக்கோடி பவுனுக்கும், பர்ஷியா இளவரசர் 3 கோடி ரூபாய்க்கும், இங்கிலாந்திலுள்ள கோடீஸ்வரப் பிரபுவாகிய லார்ட் ரோத்ரால்ட் மூன்றரைக் கோடி ரூபாய்க்கும் மிஸ் ஸ்டான்பார்டு என்பவள், கலிபோர்னியா சர்வ கலாசாலைக்கு 75 லட்சம் ரூபாய் கிடைக்கவும் தங்கள் தங்கள் ஜீவனை இன்ஷியூர் செய்திருக்கிறார்கள். ஏனெனில் நன்னிலைமையில் இருக்கிறோம் என்று அசட்டை பண்ணாது, இன்ஷியூர் செய்வதன் மேன்மையான அனுகூலங்களைத் தெளிவாய் அறிந்தே தங்கள் ஜீவனை இன்ஷியூர் செய்திருக்கிறார்கள்.

பண்டைக் காலத்தில் இன்சூரன்ஸ் மக்கட் பிறவிகளில் எவ்வாறு இருந்ததென்று ஆராய்வோம். சிருஷ்டியில் மனிதனுக்கு இரு கண்கள் இரு கால்கள், இரு கைகள் படைக்கப்பட்ட நோக்கத்தை உற்று நோக்குங்கால், ஒரு கண்,—கை—கால் கெட்டுப் போனால் மற்றொரு கண்,—கை,—கால் அந்தக் கணமே உதவுதற் பொருட்டேயென்று ஆபத்துக் குதவியாக உண்டாக்கப் பட்டது.



இது ஈசனது இன்சூரன்ஸ் அபிப்பிராயத்தைத் தெளிவாய்ப் புலப்படுத்துகிறது. மேலும் இந்து சமூகத்தில் கல்யாணம் கருமாதி முதலிய சடங்குகளில் ஏற்படும் செலவைச் சமரசப்படுத்த மொய் முறைகள் இருக்கிறதாகத் தெரிகிறது. அதனினும் விரிவாகப் பழைய ஏற்பாடு (பைபிள்) ஆதியாகமம் 41 அதிகாரம் 31-வது வசனத்தில் காணலாம். அதாவது எகிப்து அரசாகிய பார்வோன் தனது கனவில் ஏழு கொழுத்த பசுக்களை அதன் பின்னால் வந்த ஏழு மெலிந்த பசுக்கள் பச்சித்து விட்டதாகக் கண்டார். அக் கனவின் அர்த்தத்தை யோசேப்பு என்னும் ஒருவனிடம் கேட்டனர். அவன் சொன்ன பொருளாவது:—எகிப்து தேசத்திற்கு ஏழு வருஷம் செழிப்பும் ஏழு வருஷம் பஞ்சமும் உண்டாகும். அப் பஞ்சத்தைத் தடுப்பதற்குச் செழிப்பான வருஷங்களின் அறுவடைத் தானியங்களில் 5-ல் ஒரு பங்கைச் சேமித்து வைப்பதே சிறந்த உபாயம் என்றான். இந்த யோசனைப்படியே இச் செய்தியை ஷை அரசரும் தன் நாடெங்கும் அறிவித்து அவ்விதமே செய்யும்படிக்குக் கட்டளையிட்டார். அவ்வாறே பஞ்சம் தோன்றிய காலத்தில் எகிப்து தேசம் முழுவதும் உண்ணப் போதுமான உணவிருந்தது. இதை ஒருவாறு இப் பூவுலகில் முதல் இன்சூரன்ஸ் ஆபீஸாகவும் யோசேப்பை முதல இன்சூரன்ஸ் ஆபீஸ் பிரசிடெண்டாகவும் கூறலாம்.

இன்சூரன்ஸ் பாலிசிகளைப்போல் ஒப்பந்தம் செய்து அவ் வழக்கத்தைப் போர்த்துக்கல், ஸ்பெயின், பிளாண்டர்ஸ் தேயத்தினர்களோடு முதன் முதல் பரப்பினவர்கள் இத்தாலியர்களே. இங்கிலாந்தில் 1583-ம் ௵-ல் இன்சூரன்ஸ் ஆபீஸ் ஏற்பட்டது. இந்தியாவிலோ 1800-ம் ௵-ல் தோன்றிற்று. தற்சமயம் இந்தியாவில் சுமார் 57 கம்பெனிகள் இருப்பதாகத் தெரிகிறது. பிக்கானிர், மைசூர் சமஸ்தானங்களில் ஸ்டேட் இன்சூரன்ஸ் நடத்தப் பட்டு வருகிறது.

இன்ஷியூர் செய்வதின் மூலம் பற்பல நன்மைகள் உண்டாவதால், நமது தேசத்து ஜனங்களில் அநேகர் தங்களை இன்ஷியூர் செய்ய முன் வருவார்களாக.

---

# யதீந்திர தாஸரின் வெற்றி.

ஸ்ரீமாந். எஸ். தாமஸ் பாலையா அவர்கள்.

வெற்றி யதீந்திர தாஸருக்கே! ஆம், ஆம். இற்றை நாள் இந்தியா வெங்கணும், என்? உலகமெங்கணுமே யதீந்திர தாஸரின் திருமுக நோக்கே சிறந்து நிற்கின்றது. பெறுதற்கரிய பெரும் பேற்றினைப் பெற்றுள்ள இவ் வாலிப வீரருக்கு எனது சிரங் குனிந்து வணக்கஞ் செலுத்துகிறேன். உலகமே வாலிபர்களின் உறு துணை கொண்டே வெற்றி பெற வேண்டுமென்பதில் இஞ்ஞான்று தலை சிறந்து விளங்குகிறது. வாலிபர்களாகிய அமீர் அமானுல்லா, ஹாஜி முஸ்தபா கமால் பாஷா, சீன தேயத்திய யூங்-வாங்-ஷிலிங், சுபாஷ் சந்திரபோஸ், 'பண்டித ஜவஹர் லால் நேரு போன்ற பல வீரர்களின் வரிசையில் நின்றிலங்கிய யதீந்திர தாஸர் என்னும் நட்சத்திரம் இந் நாள் மறைந்து விட்டது என்றாலும் அன்னவரின் புகழொளி மங்கவில்லை. ஆனால் அது மங்குவதற்கும் மறைவதற்கும் பதிலாக முன்னிலும் ஆயிரமடங்கு அதிகமாக உலகெங்கணும் ஓடி முட்டிப் பிரகாசிக்கிறது.

1929௵ செப்டம்பர்௴ 13௳ மாலை ஸ்ரீயுத. யதீந்திரதாஸர், லாகூர் பார்ஸ்டல் சிறைச் சாலையில் தியாகம் என்னும் தெய்வீக பலிபீடத்தின் மீது தன் உயிரைப் பலியிட்டனர். ஹா! உயிரைத் தியாகம் செய்வதென்பது மக்களால் கூடிய காரியமன்று. மனிதப் பிறவி பெறினும் அதில் தியாகம், சேவை என்னும் நறுமலர்கள் பரிமளித்துக் கொண்டிருந்தாலன்றி எவனும் தன் உயிரைத் திரணமாக மதித்து, தான் கோரிய கொள்கைக்காக அர்ப்பணஞ் செய்வதென்பது மிக்க அரிய காரியமாகும். இங்ஙனம் செய்தவர்களின் வரிசைக் கிரமத்தைப் பார்ப்போமாயின் விரல் கொண்டு எண்ணிவிடக் கூடிய அவ்வளவு சொற்பப் பெயர்களே இருக்கின்றனர். குறிப்பிட்ட கொள்கையை ஸ்தாபிப்பதற்கென்று கஷ்ட நஷ்டங்களையும், குடும்பங்களையும், செல்வத்தையும், மற்றும் ஏனைய சௌகரியங்களையும் கவனியாது பாடுபடுவோர் பல்லாயிரவர் இருக்கலாம். ஆனால், உடலையும் உயிரையும் ஒருங்கே அர்ப்பணம் செய்தவர்கள் எத்தனைபேரிருக்கலாம்? ஓர் தேசப் புனருத்தாரணத்திற்கானாலுஞ் சரியே, இன்றேல் மதத்தின் பொருட்டாயினுஞ் சரியே இவைகட்காகத் தியாகம் செய்த பெரியார்களின் பெயர்கள் இன்றும் என்றும் அழியாப் புகழ் பெற்று மேதினியோரால் போற்றப்பட்டு வருகின்றன. ஆனால், இக் கொள்கைகட்காகப் பெரும் வேதனைகள் அனைத்தையும் சந்தோஷமாகவே அநுபவித்து ஆவி நீத்து அதன் பலனால் அழியாப் புகழ் பெற்றவர்கள் வரிசையில் கிறிஸ்து பெருமான், பெரியார் மாக்ஸ்வினே, வீரர் யதீந்திர தாஸ் ஆகியவர்களையே குறிப்பிட வேண்டும். விவிலிய நூற்படி இயேசு கிறிஸ்து, மக்களுடைய பாவங்கட்காகச் சிலுவையிலறையுண்டு சகிக்கொண்ணா வேதனைகளை அநுபவித்து இறுதியில் உயிர் துறந்தனர். அயர்லாந்தில் சுதந்தரப் போராட்டம் வெகு மும்முரமாக நடந்து கொண்டிருந்தபோது, ஸ்ரீமாந். தேவலராவின் தலைமையில் தளகர்த்தராய் நின்று சுதந்தரப் போர் புரிந்த பெரியார் மாக்ஸ்வினேயை அரசாங்கத்தார் சிறையிலடைக்கவே, அன்னவர் அறுபது நாட்களுக்கு மேலாக உண்ணா விரதமிருந்து உயிரை நீத்தனர். இப்போது நமது யதீந்திர தாஸரின் முடிவும் அதேபோலாயிற்று. யதீந்திர தாஸர் அறுபத்துமூன்று நாள் உண்ணா விரதமிருந்து தனது உயிரை விட்டிருக்கிறார். இந்த நாட்களில் ஒரே ஒரு நாள் மட்டும் மூன்று கோப்பையளவு தண்ணீர் பருகியதன்றி ஏனைய நாட்களில் ஒன்றும் உட்கொள்ளாது, பசியினாலும், தலை வலியினாலும், சாத்தி

ஞலும், ஆயாசத்தாலும், தேக இளைப்பாலும், சோர்வாலும் வேதனையடைந்து தனது கொள்கைக் கென்று மரணமடைந்த பெருமையை என்னென்பேன்! என்னென்பேன்!!

இந்தியாவில் உதவி மறுத்தல் இயக்கம் ஆரம்பமானதும் மகாத்மா காந்தி முதலிய 25,000 பேர்கள் சிறைக்குச் சென்றபோது, இந்தியாவில் அரசாக்ஷி செய்யும் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் எவ்வளவு நடுக்கங் கொண்டார்களோ, அதை விடப் பன் மடங்கு யதீந்திர தாஸரின் மரணத்தால் இப்போது திகில் அடைந்தார்கள் என்று கூறுவது முற்றிலும் தகும். யதீந்திர தாஸரின் மரணம் இவ்வளவு அதிர்ச்சியையும், நடுக்கத்தையும் கவர்ன்மெண்டாருக்கு அளித்திருப்பதையும், நாடெங்கணும் இம் மரணத்தாலேற்பட்டுள்ள பெருங் கிளர்ச்சியையும் உற்று நோக்கினால் வெற்றி யதீந்திர தாஸருக்கே என்பதும், தோல்வி அரசாங்கத்தாருக்கே என்பதும் வெள்ளிடை மலை யெனப் புலனாகும். இன்று நாணத்தால் தலை கவிழ்ந்திருக்கும் அரசாங்கம், யதீந்திர தாஸரின் மரணத்துக்காகக் கடவுளால் தக்கபடி சிட்சிக்கப் படுமென்பதில் ஐயமில்லை.

இத் துணை மகிமைக் காளாகிய யதீந்திர தாஸர் யாரென ஈண்டுச் சிறிது வரைதல் நன்று. இவரின் வயது 25. 1904-ம் வருடம் கல்கத்தாவில் ஸ்ரீமாந். பங்கிம் தாஸ் என்பவருக்கு இவர் மூன்றாவது புத்திரனாக அவதரித்தார். இவ் வீரர், காலேஜில் வாசிக்கும் போதே மகாத்மாவின் ஆணை வழி நின்று, ஓர் தரமல்ல இரண்டு தரமல்ல மும்முறை ராஜீய விஷயங்கட்காகச் சிறைக்குச் செல்லலானார். மூன்றாவது தடவை இவர் மூன்று மாதச் சிறை வாசம் பெற்றனர். அப்போதே சிறையில் இவர் நடத்தப்பட்ட விதம், இவருக்குத் திருப்தி யளிக்கவில்லை யாகையால், முப்பது நாட்கள் உண்ணா விரதமிருக்கவே வங்காள அரசாங்கத்தார் இதில் தலையிட்டு ஓர் சமரச மேற்படுத்தினர். பின்னர் நமது வீரர் வெளியே வந்ததும், இதுவரையிலும் இவரை வெறுத்து நின்ற இவரது தந்தை மீண்டும் தம்மிடம் சேர்த்துக் கொண்டார். சிறைக்கு அடிக்கடி சென்றதால் இவருடைய தேகம் பலஹீனப் படவே சில மாதங்கள் ஓய்



வெடுத்துக் கொண்டார். சரீரம் சிறிது சுகமடைந்ததும் மறுபடியும் அரசியலில் இறங்கித் தென் வங்காளக் காங்கிரஸ் கழகத்தின் உதவிக் காரியதரிசி யானார். இவ் வமயமே லாகூர்ச் சதியாலோசனை வழக்கில் இவரையும் ஓர் குற்றவாளி யெனக் கவர்ன்மெண்டார் கைது செய்து லாகூருக்குக் கொண்டு போனார்கள். இவ் வழக்கில் சம்பந்தப்பட்ட பலருடன், இந்தியச் சட்டசபை வெடி குண்டு வழக்கில் ஆயுள்பரியந்தம் தண்டனை பெற்ற ஸ்ரீமான்களான பகத்சிங், தத்தர் ஆகியவர்களும் சேர்க்கப்பட்டனர். இங்ஙனம் இவ் வழக்கில் சம்பந்தப்பட்ட யாவரும், "தாங்கள் எல்லாரும் அரசியற் கைதிகளென்றும், தங்களை மிக்க கௌரவமாக நடத்தப்பட வேண்டுமென்றும், சாதாரண—சௌகரியமான ஆகாரம் கொடுக்கப்படுவதுடன், பத்திரிகை, புத்தகம் முதலியன வாசித்தல் போன்ற சாதனங்கள் கொடுக்கப்பட வேண்டுமென்றும், இம் மாதிரியான சௌகரியங்கள் தங்கட்கு மட்டுமன்று, இந்தியாவிலுள்ள சகல ராஜீயக் கைதிகளுக்கும் அளிக்கப்படல் வேண்டுமென்றும், தங்கட்கும், வெள்ளையர் நாட்டுக் கைதிகட்கும் எவ்வித வித்தியாசமும் பாராட்டக் கூடாது" என்றும் முதலாவதாக அரசாங்கத்திற்கும் இரண்டாவது சிறைச்சாலை அதிகாரிகட்கும் தெரிவிக்கலாயினர். இந் நியாயமான வேண்டுகோள் "செவிடன் காதிலூதிய சங்கு" போலாகவே, யாவரும் உண்ணா விரதமிருக்க ஆரம்பித்தார்கள். பஞ்சாப் கவர்ன்மெண்டார் தங்களுடைய தந்திர மந்திரோபாயங்களால், இவர்களின் உண்ணா விரதத்தை நிறுத்த முயன்றும் பலிதமாகாமற் போகவே, பலவந்தப்படுத்தி ஆகாரம் செலுத்த வாரம்பித்தனர். இம் முயற்சியும் வெற்றியளிக்கவில்லை. அரசாங்கத்தார் நியாயமான கோரிக்கைகளை மழுப்பி, தாங்கள் என்னமோ தர்ம தேவதை போன்று நாலு கால்களால் நடப்பதாகக், குப்பை கூளம் போன்ற அறிக்கைகள் பல விடுத்தனர். இவ்வறிக்கைகளைக் கண்டு நாகரீக உலகம் நகைத்ததேயன்றிப் பாராட்டிய உண்மை மனிதர் எவருமே யில்லை.

இந் நிலையில் யதீந்திர தாஸரின் நிலைமை வரவர மோசமாகி விட்டது. பண்டித ஜவஹர்லால் நேரு, பஞ்சாப் சிறைச்சாலைச்

கழக அங்கத்தினர் சிலர், ஸ்ரீமாந். புருஷோத்தம தாஸ் தாண்டன் போன்ற பெரியார்கள் சிறைக்குச் சென்று உண்ணா விரதத்தைக் கைவிடும்படி சொல்லியும், தன் லக்ஷியம் நிறைவேறினாலன்றி, நான் உண்ணா விரதத்தை விடுவதில்லை யென நமது வீரர் சொல்லி விட்டார். தனது லக்ஷியத்திற்காக மட்டுமன்றி, பாழும் இந்த அடிமை நாட்டில்—துரதிர்ஷ்ட தேசத்தில்—சுதந்திர தாகங் கொண்டவரை அடக்கு முறையால் வாட்டும் அரசாங்கம் ஆட்சி பண்ணும் இப் பூமியில் தன்னைப்போன்ற அரசியற் கைதிகள் கௌரவிக்கப்பட வேண்டும்—மரியாதையுடன் நடத்தப்பட வேண்டும் என்பதை நிலை நாட்ட, முடிவில் தன் ஆவியையும் போக்கினார்! ஆ! இத்தகைய விரதத்தை—மஹா தியாகத்தை—மாசற்ற கொள்கையை வர்ணிக்க இவ் வொரு பேனாவினால் முடியுமோ? நீதி முறையற்ற-யாவரும் வெறுக்கத் தக்க கேவலம் இந்த அரசாங்கத்தாரைத் துரும்பினும் கேவலமாக மதித்தும், இவர்கள் விசாரணையையும், அதன் தஸ்தாவேசுகளையும் குப்பைத் தொட்டிக் காகிதங்கள் என எண்ணியும், நிகரற்ற தமது வாலிபத்தில், இந்திய அன்னையின் பெருமை துலங்கத் தியாக மாதாகளிகூர, வெகு மகிழ்ச்சியுடன் தன் உடல், பொருள், ஆவி ஆகிய மூன்றையும் அர்ப்பணஞ் செய்த நமது வீரரால், இந்தியா பெற்றுள்ள கௌரவம் அளவிடற் கரியது. இந்தியாவில்-அரசியல் உலகில் ஓர் புதிய சகாப்தம் ஆரம்பமாகிவிட்டதென்றே சொல்ல வேண்டும். மாக்ஸ்வினே மரணமடைந்த ஆறும் மாதம் அயர்லாந்து சுதந்தரப் பேற்றினை யடைந்தது. இந்தியாவிற்கும் அத்தகைய பாக்கியம் கிட்டிவிடும் என்பதற்கான அறிகுறிகளும் தோன்றிவிட்டன. யதீந்திர தாஸர் மரணமடைந்து விட்ட போதினும், அவரது சாம்பலின் ஒவ்வொரு அணுக்களும் நம் மக்களிடையே புகுந்து, பல்லாயிரக் கணக்கான யதீந்திர தாஸர்களை உண்டாக்க வேண்டுமென விரும்புகிறேன். யதீந்திர. தாஸரது ஆத்மாவுக்குச் சாந்தி உண்டாவதாக.

துரதிர்ஷ்டம் நிறைந்த இந்த நாட்டில், யதீந்திர தாஸரின் மரணத்தால் உண்டாயிருக்கும் எழுச்சி அரும்பிப் பூத்துக் காய்த்துக் கனிதால் வேண்டும். எந்த லக்ஷியத்திற்காக இவ் வீரர் உயிர் துறந்தாரோ, அந்த லக்ஷியத்தின் விஷயமாக இந்திய அரசாங்கத்தாரும், ஏனைய மாகாண அரசாங்கங்களும் தக்க கவனம் செலுத்த வேண்டுமென விரும்புகிறேன். வீணே இத்தகைய அபவாதங்களை வலிய மேற் போட்டுக்கொண்டு, இந்தியாவைத் தாங்கள் தாங்கி நடப்பதுபோற் பேசுவது வீண் பகட்டேயாகும். "நாகரீக இந்திய கவர்ண்மெண்டு" எனக் கூறிய மிஸ். மேயோ, யதீந்திர தாஸரின் மரணத்துக்குக் காரணமாயுள்ள இத் தன்மைக்கு என்ன பெயர் கொடுக்க விரும்புவாளோ அறிகிலோம். பஞ்சாப் அரசாங்கத்திற்கும், இதனை ஆதரித்து நின்ற இந்திய அரசாங்கத்திற்கும் ஏற்பட்டுள்ள இக் கருப்புக் கோடு அழிக்கப்பட வேண்டுமாயின் அரசியல் கைதிகள் விஷயத்தில் சிறிதேனும் பராமுகமாயிருக்கக் கூடாதென எச்சரிப்பது எம் கடமையாம்.



# இந்தியர் வாழ்வைப் பற்றி நான் ஏன் இங்கிலீஷில் எழுதுகிறேன்?

சுமார் 17 வருடங்களுக்கு முன் நான் அமெரிக்காவிற்கு வந்தபொழுது அநேக விஷயங்களைத் தெரிந்துகொள்ள வேண்டியதாயிற்று. அங்ஙனமே என் அறிவை அதிகமாக அபிவிருத்தி செய்துகொண்டே னென்பதில் சந்தேகமில்லை. அத் தேசத்தைப் பற்றியும் ஜனங்களைப் பற்றியும் நான் வாசித்துக்கொண் டிருந்தபொழுது, இந்தியாவின் சரியான தத்துவத்தைப் பற்றி இங்கே யுள்ளவர்கள் (அமெரிக்காவில்) உள்ளபடி தெரிந்துகொள்ள வில்லை யென்பதை யறிய நான் ஆச்சரியப்

பட்டேன். ஆகையால் என் தாய்நாட்டிலுள்ள நகரங்கள், கிராமங்கள், காடுகள் ஆகிய இவைகளைக்குறித்து எழுத வேண்டுமென்பதைப்பற்றி நாள்தோறும் அதிக நன்றாய் அறிந்துகொண்டேயிருந்தேன்.

பிற தேச நாகரீகங்களையும் பழக்க வழக்கங்களையும் சிறுவர்களே விசேஷமாக அறிவார்களென்று நான் நம்பியதால், அவர்களுக்கே நான் எழுத ஆரம்பித்தேன். குழந்தையின் வாழ்நாளில் தன்னுடன் வசிக்கும் பிராணியே முக்கிய பொருளாதலால், இந்தியக் குழந்தைகள், பிராணிகளிடத்து எவ்வித எண்ணமும் அபிப்பிராயமும் கொண்டிருக்கிறார்கள் என்பதை அமெரிக்கச் சிறுவர் அறிந்தால், பெரிதும் இந்தியச் சிறுவர்களைப் புகழ்வார்கள் என்பது பிரத்தியட்சம்.

உதாரணமாக ஒரு யானையை எடுத்துக்கொள்வோம். பல நூற்றாண்டுகளாக இந்தியாவில் (நாம்) ஏன் யானைகளைப் பழக்குவதில் சாமர்த்தியமுள்ளவர்களாக இருந்து வருகிறோம்? ஆப்பிரிக்காவில் யானையைப் பழக்கும் முறை எங்ஙனம் தெரியாமலேயே இருக்கிறது? சூடானில் யானைகளைப் பழக்க ஜெனரல் கார்டன் (General Gordon) விரும்பியபொழுது, இந்தியாவிலிருந்தே யானைப் பாகர்களைக் கொண்டுவர வேண்டியதாக இருந்தது என்று சொல்லப்படுகிறது. நான் இதற்குக் காட்டக்கூடிய ஒரே ஒரு காரணம் யாதெனில், இந்தியர்கள் யானைகளுக்குப் பயப்படுவதில்லை. மாவுத்தர்களின் குடும்பத்திலிருக்கும் சிறு குழந்தைகளுங்கூட, யானை பிடிபட்ட மூன்று வாரத்திற்குள் அதன் துதிக்கையில் தங்களின் கரங்களை வைக்கும். "எவ்வாறு அப்படிச் செய்கிறார்கள்" என்று நீங்கள் (அமெரிக்கர்கள்) யானைப் பாகர்களில் ஒருவரைக் கேட்டால், "நாங்கள் அவைகளுக்குப் பயப்படுவதில்லை" யென்று அவர்கள் எல்லோரும் பதில் சொல்வார்கள். சில காலங்களில் நான் விளையாடின "காரி" யென்னும் என்னுடைய யானையைப் பற்றி எழுதும்பொழுது பிராணிகளுக்கும் மனிதனுக்கும் சம்பந்தப்பட்டிருக்கும் உட்கருத்தை வெளியிட்



டேன். "பயமற்றவன் எவனோ அவன் யானையை வசமாய் நடத்தக்கூடும். "குழந்தைகள் இதை அறிந்துகொண்டார்கள்" என்பதை நான் நம்புகிறேன். நான் எழுதின அடுத்த புஸ்தகத்திற்கும் இக் கருத்தே உற்சாகம் அளித்தது.

பயத்தினாலோ சந்தேகத்தினாலோ பீதியடையாதவன் மிருகங்களினால் தொந்திரவு செய்யப்படுவதில்லையென்பதை இந்தியக் காடுகளில் அதிகமாகப் பார்த்திருக்கிறேன். தன் வாணாட்களில் பெரும் பாகத்தை வனத்திலேயே போக்கிய பிரதான் என்னும் பெயர் பூண்ட வேடன் ஒருவன், ஒரு மிருகத்தினாலும் ஒரு சிறிதுங்கூடக் காயமடையவில்லை என்பதை நானறிவேன். பிற்பாடு நான் அவனுக்கு கோண்டு (Ghond) என்னும் பெயர் கொடுத்தேன். இப் பெயரையே தலையங்கமாக வைத்து அவ் வேடனின் (கோண்டு) உண்மையான அனுபவங்களில் அநேகமானவற்றை நான் எழுதியிருக்கிறேன். சிறு விஷயத்திலுங்கூட அவன் எவ்வளவு சாமர்த்தியவானாக இருந்தானென்பதை உங்களுக்கு (அமெரிக்கர்களுக்கு) உதாரணமாகத் தெரிவிக்க ஒரு சம்பவத்தை மட்டும் கீழே குறிப்பிடுகிறேன். ஒரு நாள் நானும் அவனுமாகக் காட்டுக்குள் போய்க்கொண்டிருந்த பொழுது ஒரு அழகிய முயல் சிறு புதரொன்றினின்றும் வெளியேறி யெங்களை உற்றுப் பார்த்தது. கோண்டு என்னைப் பார்த்து உங்களுக்கு அது வேண்டுமா? என்று கேட்டான். "நான் அதைப்பெற விரும்புகிறேன்" என்றேன். அத் தருணத்தில் அவ்வழகிய முயல் ஓடிற்று. அவன் ஒரு அம்பை வில்லினின்றும் எய்ய, அது அப் பிராணியை ஊடுருவிச் சென்று தரையோடு சேர்த்துத் தைத்துக்கொண்டது போல் தோன்றிற்று. நான் கோபங்கொண்டு அவனை வெறுத்தேன். வசையாடினேன். கொன்றுவிட்டாயே யென்று கூறினேன். அவன் என் தோள்மேல் கைவைத்து "ஆனால் நான் அப்படி நினைக்கவில்லை. ஆயினும் நாம் போய்ப் பார்க்கலாம்" என்றான். திருப்தியில்லாமலே நாங்கள் தரையோடு தரையாய்க் கிடக்கும் அம் முயலினிடத்திற்குப் போனோம்.

அங்கு போய்ப் பார்க்கவும் எங்களுக்கு அதிக ஆச்சரியமுண்டாயிற்று. அவன் விடுத்த அம்பு அம் முயலினுடலில் அழுந்திச் செல்லாமல், அதற்கு யாதொரு தீங்குமின்றிக், கழுத்தோரத்திற் சென்று, அதை ஓட விடாமல் மட்டும் தடுத்துப் பூமியில் தைத்துக் கொண்டது. அவ் வழகிய பிராணியை எனது கரங்களில் எடுத்தபொழுது அதன் தோலிற்கூட யாதொரு காயமுமின்றி மிகச் சந்தோஷமாக இருந்தது.

அவன் யாதொரு கலவரமுமில்லாமலும் மனச் சாந்தமாகவும் இருந்ததால் அவ்வளவு சாதுர்யமாகக் காரியத்தைச் செய்யச் சாத்தியப் பட்டதென்றும், எவனொருவன் பயத்தினாலோ அல்லது அமைதி யின்மையாலோ கஷ்டப்படாம லிருக்கிறானோ அவன் எந்த மிருகத்தினாலும் தொந்திரவு செய்யப்படுவதில்லை என்றும் சொன்னான்.

எனது இரு கதைப் புஸ்தகங்களிலும் இதே கருத்தைத் தெளிவாய்க் கூறியிருக்கிறேன். குழந்தைகளுக்கு ஏற்பட்டிருக்கும் பெரும் பெரும் பயங்களை யெல்லாம் போக்கலாம் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன். பயம் போக்கும் மார்க்கத்தைத் தெரிவிக்க எனது ஒவ்வொரு புஸ்தகத்திலும் முயன்றிருக்கிறேன். பிள்ளைகள் அவைகளை அறிகிறார்களென்று நான் நம்புகிறேன்.

அமெரிக்காவைப் பற்றி நான் ஆராய்ந்துகொண்டு போகும் பொழுது, அமெரிக்க இளைஞனுக்கு அமைதி மிகவும் குறைவாக இருப்பதோடு இந்திய மக்கள் வீடுகளில் நடத்தும் நித்திய வாழ்க்கையைப்போல் தன் வாழ்நாளிலேயே நடத்துவது கிடையாது என்ற சங்கதி எனக்குத் தென்பட்டது. இந்திய குடும்பங்களில் ஒன்று பிரபலமுடைய தேஹது ஏதாவதிருந்தால், அது அமைதியே யாகும். எனவே இந்தியாவில் நாம் அமைதியை எப்படி உண்டு பண்ணிக் கொள்கிறோமென்று அமெரிக்கர்கள் தெரிந்துகொண்டால் அவர்களும் சாந்தம் வகிக்கத் தெரிந்து கொள்ளுவார்கள் என்று நினைக்கிறேன். அவர்கள் (அமெரிக்கர்கள்) ஹிந்துக்களின்



தியான முறையை எப்பொழுதாவது ஒத்துக்கொள்வார்களென்று நான் நம்பவில்லை. ஆனால் அவர்கள் நமது வாழ்க்கையைப் படிப்பதினால், தாங்களாகவே (அமெரிக்கர்கள்) சௌகர்யமாக ஒரு சாஸ்திரார்த்தமான முறையைக் கண்டுபிடித்துக் கொள்ளுவார்கள் என்று உறுதி கூறுகிறேன். இந்தியக் குடும்ப வாழ்க்கையைப் பற்றி அமெரிக்கர்களுக்கு வர்ணித்துக் காட்ட எனக்கு அவா உள்ளதால் என்னுடைய சொந்தக் குடும்பத்தைப் பற்றியே ஜாதியும் ஜாதிப் பிரஷ்டமும் (Caste & Outcaste) என்ற எனது நூலில் எழுதி யிருக்கிறேன்.

இந்தியாவில தனிப்பட்ட ஒரு விசேஷம் உண்டு. அது நமது ரிஷிகளே யாகும். இந்தியா முழுவதிலும் 10 ரிஷிகள் கூட இருப்பது துர்லபம். பிற தேசத்தினர் அவர்களைப் பார்ப்பதே கடினம். இதற்கு மாறாக யாத்திரைவாசிக ளெல்லாம் இந்தியாவில் பகீர்கள், மந்திரவாதிகள், ஜால வித்தைக்காரர்கள் முதலியவர்களைப் பார்க்கிறார்கள். இவர்களை அவர்கள் படம் பிடித்து வைத்துக்கொண்டு 'பரிசுத்தவான்கள்" என்று அழைக்கின்றார்கள். இதிலிருந்து பர தேசத்தினர்கள் எவ்வளவு சுலபமாக ஏமாற்றப்படுகிறார்கள் என்பது தெரிகிறது. நமது சத்திய சீலர்களான ரிஷிகள் 50 நூற்றாண்டுகளாக நமது ஆத்மாக்களின் ரக்ஷகராக இருந்து வருகிறார்கள். அவர்களின் உதவி இல்லாவிட்டால் இந்தியா இதற்குள் லௌகீகத்தின் வெறுந் தோற்றமாகவே ஆகியிருக்கும். இந்து நாகரீகத்திற்கு அவர்கள் எவ்வளவு அவசியமானவர்கள் என்பதைப் பற்றி ("My Brother's Face" & "The Face of Silence") என்பவற்றில் எழுதியிருக்கிறேன். "மௌனத்தின் முகம்' என்னும் நூலை எழுதுவதற்காகவே நான் பிறந்தேன் என அறிகிறேன். அது ஒரு ரிஷியைப்பற்றிய கதைகளை ஒன்றுசேர்த்து எழுதப்பட்ட நூலாகும். அவரைப்போல் செயின் பிரான்ஸிஸ் காலத்திற்கு முன்னிருந்து இவ்வுலகத்திலேயே எங்கும் பார்க்கப்படவில்லை. இவரிடத்தி லிருந்து ஆத்மார்த்தமான

கேள்விகளுக்குப் பதில் தெரிந்துகொள்ளலாம். நான் ஸ்வாமி ராமகிருஷ்ணரைப்பற்றி வீரம் பேசவில்லை. இந்தியாவிலிருந்து மேனாடுகளுக்கு ஒரு செய்தி யிருக்குமானால் அதை "மௌனத்தின் முகத்தில" எழுதப்பட்டிருப்பதைக் காணலாம்.

முடிவாகக் கீழ்நாடுகள் மேனாடுகளிலிருந்து சுறு சுறுப்பையும் சாஸ்திரீகார்த்தமான விஷயங்களையும் கற்றுக் கொள்ள வேண்டும். மேனாட்டார்கள் கீழ் நாட்டார்களிடமிருந்து சாந்தமும் தியானமும் கற்றுக்கொள்ள வேண்டும் என்று சொல்லுகிறேன். மனித சமூகத்தில் மேற்கண்ட இரு சமூகங்களும் ஒன்றுபடுவதே அடுத்த படியென்று மானிட சமூக சரித்திரத்தில் காட்டும். அப்பேர்ப்பட்ட பெரும் முடிவுக்காக எனது சிறிய வழியின்மூலம் பாடு படுவதற்கு எனக்குக் கிடைத்த பேறே பெரும் பேறு.

"ஸூபி" (Sufi) பத்திரிகையிலிருந்து "பாரதி"க்காக மொழி பெயர்க்கப்பட்டது.

இதை ஆங்கிலத்தில் எழுதியவர் ஸ்ரீமான். தனகோபால் முகர்ஜி. அவர் வங்காளத்தில் பிறந்த நமது இந்திய சகோதரர். நமது நாட்டாரில் சிலர் அயல் நாடுகளில் சென்று அவரவர்கட்கு ஏற்ற தொழில் செய்து ஜீவிப்பது போலவே, ஸ்ரீமான் தனகோபால் முகர்ஜியும் அமெரிக்காவிற்குச் சென்று அவருடைய மனைவியுடன் வசிக்கிறார். அங்கு அவர் தனது ஆங்கிலக் கல்வியின் மூலம் பேனாமுனையின் உதவியைக் கொண்டு தனது எழுத்து வன்மையால் சிறுவர்களுக்கு ஏற்ற இலகுவான நல்ல நல்ல கதைப் புத்தகங்கள் எழுதிப் பிரக்கியாதி பெற்றுக்கொண்டிருக்கிறார். அவர் எழுதிய சில புஸ்தகங்களைப் பார்த்து வியந்து, அமெரிக்கப் புஸ்தக சாலைச் சங்கத்தார், **(American Library Association)** அவருக்குப் பரிசில் கொடுத்திருப்பதே அவரது திறமைக்கு நல்லதொரு சாட்சி. அவர் எழுதிய சில புஸ்தகங்களின் பெயரைக் குறிப்பிடுகிறோம்.

(1) Ghond, The Hunter, (2) Gay-Neck The Story of A Pigeon. (3) Kari, The Elephant. (4) Hari. The Jungle Lad. (5) Jungle Beasts and Men. (6) A Son of Mother India Answers. (7) Caste and Outcaste. (8) Secret Listeners of the East.



அவரது நூற்களை அமெரிக்காவில் பிரபல புஸ்தக வியாபாரிகளான நியூயார்க் நகரத்து டட்டன் அண்டு கம்பெனி **(Messrs E. P. Dutton & Co, New York)** வெளியிட்டிருக்கிறார்கள். இரண்டு ரூபாய்க்குக் குறைந்த விலையுள்ள புஸ்தகங்கள் அவரால் எழுதப்பெற்றது கிடையாது.

தனது இலேசான கதைகளின் மூலம் மேல் நாட்டுச் சிறுவர் சிறுமிகளுக்கு கீழ் நாட்டு நாகரீகத்தைப் பற்றிப் போதித்துக் கொண்டிருக்கிறார். இளம் அமெரிக்கர்களுக்கு இந்தியாவின் உண்மைகளைத் தக்கபடி இப்பொழுது போதித்தால், வருங் காலத்தில் பெரியவர்களாகும் பொழுது இந்தியாவைப்பற்றி உன்னதமாக எண்ணிக் கௌரவிப்பார்கள் என்பது அவரது அபிப்பிராயம். அவரது நோக்கம் முற்றிலும் சரியே. அவரது அடக்கமான தொண்டு—நமது நாட்டைப்பற்றி அன்னிய தேசங்களில் அவசியம் இப்பொழுது செய்யவேண்டிய தொண்டு மிகவும் போற்றற்குரியதே. ஒவ்வொரு தேசத்திற்கும் நமது பாரத சகோதரர்கள் சென்று அவரவர் சக்திக்கும் ஆசைக்கும் தக்கவாறு தொண்டு செய்தால் இந்தியா எவ்வாறு கௌரவிக்கப்படும் என்று சொல்லத் தேவையில்லை. கன்னி மேயோ போன்றவர்களின் பிரச்சார விஷத்திற்கு ஸ்ரீமான் தனகோபால் முகர்ஜி போன்றோர்களது நூற்கள் மாற்று மருந்தாயிருக்கிறது.

சென்ற ஆண்டில் ஸ்ரீமதி சரோஜினி தேவியார் அமெரிக்காவிற்கு விஜயம் செய்திருந்தபொழுது, ஸ்ரீமான் தனகோபால் முகர்ஜியும் அவரது பத்தினியாரும் ஸ்ரீமான் ஹரி கோவிந்த கோவிலால் நிறுவப் பெற்ற இந்திய மகாநாட்டில் இந்நாட்டு அந்நாட்டு மக்களுடன் சேர்ந்து அம்மையாரை அன்புடன் வரவேற்றதை இங்குக் குறிப்பிடுகிறோம்.

ஆசிரியர், "பாரதி."



# யதீந்திரரது தந்தையின் "பிராயச்சித்தம்"

நாட்டுக்காகத் தம் உயிரைக் கொடுத்த வீரர் யதீந்திரநாத தாஸரது தந்தையான ஸ்ரீ பங்கிம் பீஹாரி தாஸ் வெளியிட்ட செய்தியின் விவரம் கிடைத்துளது. ஸ்ரீ யதீந்திரரது பிரேதம் ஸ்மசானத்தில் தீ மூட்டப் படுகையில் இச் செய்தி படிக்கப்பட்டது இதன் விவரம் வருமாறு :—

நம் மூதாதையரான ஹிந்து, முஸ்லீம் இருவரும் நவாபினது உப்பைத் தின்று விட்டு, அவரையே மோசம் செய்து வங்காளம்—ஏன் இந்தியா முழுதையுமே அந்நியரிடம் ஒப்படைத்துத் துரோகம் புரிந்தனர். இதற்குப் பிராயச்சித்தமாக எனது அன்பான அருமைக் குமாரன் யதீந்திரனை ஈசனே நினது பாதாரவிந்தத்தில் எனது கண்ணீரையே காணிக்கையாகச் செலுத்தி அர்ப்பணஞ் செய்கின்றேன். அவனது புனிதமான சுய உயிர்த்தியாகத்தின் விளைவாக இந்தியா விழிப்புறுமாக.

—பங்கிம் பீஹாரி தாஸ்.



# ஆசிரியர் குறிப்புகள்.

## தமிழ் மாகாண மகாநாடு

"நமது தமிழ் நாட்டுத் தேசீய விழா, சமீபத்தில் நடக்கப் போகிறது; இதோ நாளைக்கு நடக்கப் போகிறது; நாளை மறு நாள் நடக்கப் போகிறது; தலைவரவர்களுடைய வருகைக்காக மகாநாட்டை ஒத்தி வைத்திருக்கிறார்கள்" என்று பல விதமான பேச்சுக்கள் நடந்துகொண்டிருந்தன. தமிழ் நாட்டுத் தலைவர்களை வாட்டிக்கொண்டிருக்கும் துவேஷம் கொழுந்துவிட்டெரிய ஆரம்பித்தது. தமிழ் நாட்டிலுள்ள தலைவர்களில் எவர் தலைமை வகித்தாலும் பிடிக்காத நிலைமையில் அவ்வளவு வேற்றுமை ஜ்வாலை தலைவர்களிடம் வீசிக்கொண்டிருந்தபடியால் இருக்கிறபடியால், வேறு மாகாணத்திலிருந்து ஒரு தலைவரை அழைக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டு விட்டது. என்னே தமிழ் நாட்டுத் தலைவர்களின் உடும்புப் பிடிவாதம்! நாடு கெட்டழிந்தாலும் தங்களுடைய கௌரவம் உயர்ந்தால் சரி என்ற கேவலமான மனப்போக்கு நம் தலைவர்களைப் பிடித்துக்கொண்டு ஆட்டி வருகிறது. அயல் மாகாணங்களிலிருந்து வரும் தலைவர்களை நாம் மறுக்கவில்லை. ஆனால் அவரை அன்புடன் வரவேற்கிறோம். ஒற்றுமையால் அன்பால் அழைப்பதை எவர் தடுக்கப்போகிறார்? வேற்றுமை விஷத்தால் மனமே மாறுபட்டுக் கசந்து சீர்கெட்ட நிலைமையிலிருக்கும் பொழுது வேறொருவரை அழைப்பது தமிழருக்கு எவ்வளவு அவமானம்!

இந்தியச்சட்டசபைத் தலைவரின் சகோதரரும் பார்டோலி வீரருமான சர்தார் படேலைத் தலைமை வகிக்குமாறு கேட்டுக்கொள்ளவே அவரும் ஒப்புக்கொண்டுவிட்டார். அப்பால் அவர் தமிழ்

நாட்டின் நிலைமையைச் சற்று அறிந்துகொண்ட பிறகு, தலைமைப் பதவியைத் தான் தாங்கி நடத்த முடியாதென்று உதறித் தள்ளி விட்டார். பின்பு எப்படியோ பலவிதமாய்க் கூறியதால், அவரும் தேசத்தின் அடிமை நிலையை உணர்ந்து கடைசியில் இணங்கி விட்டார்.

ஆகவே சர்தார் வல்லபாய் படேல் தமிழ் நாட்டிற்கு வந்தார்; வேதாரண்யம் சென்றார். சென்ற மீ 31-ம் உ. யன்றும் இம் மீ 1-உ யன்றும் 33-வது தமிழ் மாகாண மகாநாட்டில் அக்ராசனம் வகித்து நடத்தினர். பல உயரிய தீர்மானங்கள் எப்பொழுதும்போல் நிறைவேற்றப்பட்டன. பூரண சுயேச்சைத் தீர்மானம் தோற்கடிக்கப்பட்டது. காதிதத் தீர்மானங்கள் வழக்கம்போல் வெகு அழகாய் வர்ணிக்கப்பட்டுத் தீர்மானிக்கப் பெற்றன. ஆனால் காரியத்தில் செய்ய வேண்டுமல்லவா! தலைவர் சர்தார் படேலும் தமிழ் நாட்டிலுள்ள சில முக்கிய பட்டினங்களுக்குச் சென்று, அருமைப் பிரசங்கங்களை ஆவேசத்துடன் புரிந்து நாட்டுக்குச் செய்யவேண்டிய தன் கடமையை அவர் செய்துவிட்டுச் சென்றார். அவர் உறுதியான தொண்டர், உண்மைத் தேசாபிமானி; காரியக்காரர். பார்டோலியைப் பக்குவமாய்ப் பண்படுத்தி அரசாங்கத்துடன் சத்தியாக்கிரகப் போர் தொடுக்கச் செய்த தீரர். தமிழ் நாட்டுத் தலைவர்களுடைய பாழும் குறைகளால் துவேஷத்தால் ஒற்றுமை யின்மையால் தமிழ் நாட்டில் ஏற்பட்ட சச்சரவுகளுக்கு ஒற்றுமையைத் தவிர்த்து அவர் வேறு என்ன சொல்லுவார்?

1921, 1922-ம் வருடங்களில் தேசீயத்தைத் தெய்வமாகக் கொண்டாடிய காலத்தில் காங்கிரஸுக்கு இருந்த கௌரவத்தை, தேசீய ஒற்றுமையை, தேசீய வன்மையை இனி நாம் எப்பொழுது காணப்போகிறோம் என்று மிக, வருந்துகிறோம். "மலடி அறிவாளோ பிரசவ வேதனையை?" அந்நாட்களில் ஊர் ஊராய்ச் சுற்றித் திரிந்து தேசீயப் பிரச்சாரம் செய்து நாட்டுத் தொண்டு செய்தவர்களுக்கல்லவோ வருத்தம் தெரியும்?



அயல் மாகாணங்களைப் பற்றிப் பேச வரவில்லை. தமிழ் நாட்டில் தேசீயம் எந்நிலையில் இருக்கிறது? தமிழ் நாட்டுக் காங்கிரஸ் கமிட்டியின் நாடியை அறிந்தவர்களுக் கல்லவோ தெரியும் உண்மை நிலை? காதிதத் தீர்மானங்களைக்கொண்டு இனி என்ன செய்யப் போகிறார்கள்? கிராமக் காங்கிரஸ் சபைகள் எங்கே? தாலுகா சபைகள் எங்கே? ஜில்லாச் சபைகள் எங்கே? ஊக்கமும் உற்சாகமும் உண்மையும் உள்ள தேசாபிமானிகளும் தொண்டர்களும் முன்வந்து நாட்டின் முன்னேற்றத்திற்காக உழைக்க வேண்டுகிறோம். தேச வாலிபர்கள் முன்வந்தாலல்லாது இனி எக்காரியமும் செம்மையாய் நடக்காதென்று எச்சரிக்கிறோம். இதற்கு இன்று உலகத்தில் நடைபெறும் பல சம்பவங்களை ஒட்டிய பற்பல உதாரணங்கள் கூறலாம். இந்திய வாலிபர்களே, பாரத தேசத்தின் விடுதலை உங்கள் வசமே இருக்கிறதென்பதை உணர்ந்து எழுந்துவந்து ஒற்றுமையுடன் நாட்டிற்காக உழையுங்கள்.

## ஸ்ரீமாந் யதீந்திரநாத் தாஸரது அரும் பெருந் தியாகம்

திருவாளர் யதீந்திர தாஸரை நினைக்க நினைக்க மெய் சிலிர்க்கின்றது; கண்ணீர் வடிகின்றது; உள்ளம் உருகுகின்றது; மூளை கலங்குகின்றது; ஊனையும் எலும்பையும் தாண்டி அப்பாலிருக்கும் மூளையே உருகுகின்றது; என்ன எப்படி எழுதுவதென்று தோன்றவில்லை; எழுதுகோல் எதையும் எழுதாது அப்படியே அசைவற்று நிற்கின்றது. யதீந்திர தாஸரது ஒப்பு உயர்வு அற்ற தியாகத்தைப் பற்றி எழும்பும் உணர்ச்சிகளைக் கேவலம் வார்த்தைகளால் உள்ளபடி மொழி பெயர்த்து அற்பமான எழுத்துக்களால் எவ்விதம் எழுதுவது! முடியாது, முடியாது!

அரும் பெருந் தியாகி—வாலிப வயிரம்—சுதந்திர சுத்த வீரர்—உயரிய அரிய தேசாபிமான சிரோன்மணி—ஊக்கமும் உறுதியும் கொண்ட உத்தமத் தொண்டர்தொண்டன்—இந்தியாவின் உயரிய பூஷணம்—தேவி பாரதியின் உண்மைப் புதல்வர்—யதீந்திர நாத் தாஸ், 63 நாட்கள் அன்ன ஆகாரம் அருந்

தாது சுதந்திரத்திற்காக உயிர் நீத்த சங்கதி, இமயம் முதல் குமரியீறாகவும், பெலுஜிஸ்தானம் முதல் அஸ்ஸாமின் அந்தம் வரையும் நமது நாட்டில் மட்டுமன்று, கடல் கடந்து அன்னிய அயல் நாடுகளிலுங் கூடப் பேராச்சரியத்தையும், பெரும் பேருணர்ச்சியையும், இந்திய சர்க்கார்மீது பெருந் துவேஷத்தையும் உண்டாக்கி யிருக்கிறது. கனவிலேயுங்கூடக் காணவொண்ணாத, நினைக்கவொண்ணாத அவரது அவ்வளவு அரிய பெரிய தியாகத்தால் இந்தியாவுக்குப் புத்துணர்ச்சியும் புத்துயிரும் உண்டாகித் ததும்பிக்கொண் டிருக்கிறது. எங்கும் யதீந்திரருக்குப் புகழுரைகள், சர்க்காருக்கு இகழுரைகள். இந்தியாவெங்கும் யதீந்திரருக்காக அனுதாபக் கூட்டங்களும், சர்க்கார் மீது கண்டனக் கூட்டங்களும் இப்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இன்று இவரைத் தேசம் போற்றுகின்றது; உலகமே போற்றுகின்றது.

சிறையில் நடக்கும் அநியாயங்களைக் கண்டிப்பதற்காகவே—உண்மையாகச் சொன்னால் இந்தியரது சமத்துவத்திற்காகவும் சுதந்திரத்திற்காகவுமே சத்தியாக்கிரகத்தைக் கைக்கொண்டு, ஹட விரதம் பூண்டு, அன்ன ஆகாரமின்றி, ஐம்புலன்களையும் அடக்கி யொடுக்கி உயர் தபோதனர் போன்று தவங்கிடந்தார். அதிகாரிகள் சிறைச்சாலையில் அச்சம் உண்டாக்கிப் படாதபாடுகளைப் படுத்தித் துன்புறுத்தினார்கள். கடைசியில் அவர்கள் சிறையில் பலாத்காரத்துடன் அன்னம் புகட்டினதையும் தைரியமாய் ஏற்காது மூச்சைப் பிடித்து எதிர்த்து நின்று அவர்களின் அகங்காரத்தையும் அடக்கினார். அன்ன பானாதிகளின்றி உடலில் உயிர் எத்தனை நாளைக்குத்தான் நிலைத்திருக்கும்? அவரது நெடுநாட் பட்டினி விரதத்தால் கண்கள் பார்வையற்றுக், காதுகள் கேள்வியற்று, உடல் மெலிவுற்றுச், சொர்ப்பனத்திலும் கண்டறியா அவ்வளவு அகோர அவஸ்தைகளை அடைந் தனுபவித்துப் பேச்சற்று, உடலிலுள்ள கருவிகள் அனைத்தும் பலமற்று, உடம்பு வாடி வதங்கி வரண்டு அசைவற்றுப், பாரதமாதாவின் விடுதலைக்காக உயிர் நீத்துப், புண்ணியவான்கள்



அடையும் இடமாம் எல்லாம் வல்ல இறைவனது பாதாரவிந்தங்களை அடைந்துவிட்டார். அவரது தியாகத்தின் பெருமையை எவ்வாறு கூறுவது! அவரைப்பற்றிச் சரியாய் எண்ண எண்ணங்கள் கிடைக்கவில்லையே! எழுத வார்த்தைகள் கிடைக்கவில்லையே!!

சமீபகாலத்திற்கு முன் அயர்லாந்து தேச சுதந்திரத்திற்காகக் கார்க் நகரின் தலைவரான (Lord Mayor) மாக்ஸ்வினி என்பார் 80 நாட்களுக்கு மேலாக உண்ணா நோன்பிருந்து, தன் தாய் நாட்டிற்காக உயிர் துறந்தார்! இப்பொழுது அயர்லாந்து, சுயராஜ்யம் பெற்றுச் சந்தோஷத்துடன் விளங்குகிறது. சத்தியாக்கிரக மேற்கொண்டு ஸ்ரீமாந் மாக்ஸ்வினியைப் பின்பற்றி நடந்த இந்தியாவின் மாக்ஸ்வினியான யதீந்திரரது ஜீவ அர்ப்பணத்தால் இந்தியாவுக்குச் சுதந்திரம் சமீபத்தில் கிட்டிவிடுமென்பதற் கையமில்லை. தன் தேசத்துக்காக உயிர் நீத்த அந்த மாக்ஸ்வினியின் சகோதரியான மேரி மாக்ஸ்வினி, யதீந்திரரது குடும்பத்திற்குக் கல்கத்தா மேயர் சென்குப்தா மூலம் அடியிற் கண்ட அனுதாபச் செய்தியை அனுப்பியிருக்கிறார்.

> தேச பக்தி வாய்ந்த இந்தியா, ஸ்ரீமாந் யதீந்திர தாஸரது மரணத்தால் அடைந்திருக்கும் துக்கத்திலும் பெருமையிலும் மாக்ஸ்வினியின் குடும்பமும் கலந்து கொள்ளுகிறது. இந்தியாவுக்குச் சுதந்திரம் வந்துவிடும்.

அயர்லாந்திலிருந்து பல சுதந்திரச் சங்கங்களும் அனுதாபத்தை அறிவித்திருக்கின்றன.

உலகத்தில் அரசாங்கங்கள் செய்த, செய்கிற அட்டூழியங்களுக்குக் கணக்குகள் வழக்குகள் இல்லை. அன்பு மதத்தை நிலைநிறுத்திய ஏசுநாதரைத் துன்புறுத்திக் கொன்றதைக் கேட்டு வருந்தாதவர் உலகத்தில் இருக்கிறார்களா? வையகமே உச்சிமேற் கொள்ளவேண்டிய அவ்வளவு பெரிய அறிஞரான சாக்ரட்டீஸ் என்பவரை விஷம் கொடுத்து அநியாயமாய்க் கட்டாயப்படுத்திக்

குடிக்கச்செய்து கொன்றஅரசாங்கத்தின் முட்டாள் தனத்தை என்னென்போம்! இதுபோல் பற்பல பெரியார்களைப் பல அரசாங்கங்கள் படுத்திய பெரும் பாடுகளையும், புரிந்த குரூரச் செய்கைகளையும் சொல்லி முடியாது.

ஸ்ரீமாந் பங்கிம் பீஹாரி தாஸரின் புதல்வரும், வங்காளத்தில் முன்ஸீப்பாயிருந்து காலஞ்சென்ற ஸ்ரீமாந் மஹேந்திரநாத் தாஸரின் பேரனுமாவர் நமது யதீந்திர நாதர். 1904-ம் வருஷத்திலே பிறந்து, 1920-ம் வருஷத்திலே மெட்ரிகுலேஷன் பரீட்சையில் தேறி, 1921-ம் வருஷத்திலே ஒத்துழையாமை யியக்கம் காட்டுத் தீப்போன்று தேசமெங்கும் பற்றிப் பரவிக்கொண்டிருந்தபொழுது, நாட்டுப் பற்றில் நாட்டமிகக் கொண்டு குதித்தெழுந்து, தான் படித்துக்கொண்டு வந்த கல்லூரியை உடனே விட்டு விலகி, வங்காளத்தில் அப்பொழுது வெள்ளத்தால் உண்டான கஷ்டங்களுக்குப் பற்பல இடங்களுக்குச் சென்று வெள்ளக் கஷ்ட நிவாரண வேலைகளைச் செய்தார். பின்பு சாத்விகச் சட்ட மறுப்பில் ஈடுபட்டு வேலை செய்யவே அதுமுதல் அரசாங்கத்தின் தண்டனைக்கு ஆளானார். சிறைக்குச் செல்லச் செல்ல, தேசத்தொண்டு செய்யச் செய்ய இவருள்ளே அடங்கிக் கிடந்த தேசபக்தி ஜ்வலிக்க ஆரம்பித்தது. 1925-ம் வருஷத்தில் 23 தினங்கள் உண்ணாவிரதமிருந்து தனது சாத்வீகப் போரால் சிறைச்சாலைத் தலைவரது கர்வத்தை அடக்கினார். பல தருணங்களில் தேசப்பணி ஆற்றியிருக்கிறார். லாகூர்ச் சதிவழக்குச் சம்பந்தமாய்ச் சென்ற ஜூன்மீ 14-ம்வ இவரைக் கைது செய்து விசாரணைக்காக லாகூருக்குக் கொண்டுபோய் லாகூர்ச் சிறைச்சாலையில் வைத்திருந்தார்கள். அப்பால் அங்கிருந்துதான் இம் மஹா தியாக விரதத்தைத் துவக்கிப் பரிபூரண தசையை அடைந்திருக்கிறார்.

யதீந்திர நாத் தாஸர் தேசத் தொண்டிற்காகவே பிறந்தார்; தேசத் தொண்டு செய்துகொண்டே இருந்தார்; இப்பொழுது தேசத் தொண்டு செய்துகொண்டே இறந்தார். இவரது நினைப்புகளும், பேச்சுகளும், செய்கைகளும் தேசத்தைப் பற்றியதே.



இவர், தியாக வாழ்வால்—வீரச் செய்கையால், வாலிபர்களுக்கு ஒரு பெரிய பாடமாகவும், ஒப்புயர்வற்ற உதாரணமாகவும், முன்னோடியாகவும், தேசாபிமானிகளுக்கு வழிகாட்டியாகவும், தொண்டர்களுக்குக் குருவாகவும், சத்தியாக்கிரகிகளுக்குச் சத்தியாக்கிரக தளகர்த்தராகவும், இந்திய மக்கள் அனைவருக்கும் ஒரு மேலான தனிப் பெருந் தொண்டராகவும், மூவாசை யற்ற தியாகியாகவும், உலகத்திற்கே ஒரு விடுதலை வீரராகவும் விளங்குகிறார். ஆனால் இந்திய ஏகாதிபத்திய ஆட்சிக்கோ குற்றவாளியாகவும் விளங்கினார். "காமாலைக் கண்ணனுக்குக் கண்டதெல்லாம் மஞ்சள் நிறம்" என்பதைப்போன்று நமது அரசாங்கத்திற்குத் தெரிகிறது. வாத நோய்க்கு மருந்துண்டு, பிடிவாத நோய்க்கு மருந்துண்டோ? நமது அரசாங்கத்தின் முதலைப் பிடிவாத நோய்க்கு எந்த மருந்து எவர் கொடுக்கப்போகிறார்? இந்திய அரசாங்கம், தனது குருட்டுத்தனமான போக்கால் ஓர் உயிரைப் போக்காமல் போக்கினதற்கு, அரசாங்கங்களுக்கும், அரசர்களுக்கும், சக்கிரவர்த்திகளுக்கும் விசாரித்துத் தக்கபடி தண்டனை கொடுக்கும் அறப் பெருங் கடவுள், என்ன தண்டனைதான் கொடுக்கப் போகிறாரோ?

இவரது ஸ்தூல சரீரம் மறைந்தாலும் இவரது ஆத்ம சக்தி இன்று ஒவ்வொரு இந்தியனுடைய உள்ளத்திலும் மின்சார வேகத்துடன் புகுந்து ஊக்கத்தையும், தேச பக்தியையும், தியாக உணர்ச்சியையும், தொண்டில் வெறியையும் வேகமாய் உண்டாக்கிக் கொண்டிருக்கிறது. முக்கியமாய் இந்திய வாலிபர்களுக்கு ஒருவகைப் புத்துணர்ச்சியைக் கிளப்பிக் கொண்டிருக்கிறது. இக் காலத்தில் இந்தியாவுக்கு உபயோகமற்ற வெறும் பேச்சுத் தலைவர்கள் வேண்டியதில்லையென்பதற்கு யதீந்திர நாதரது ஜீவியம் இன்று உதாரணமாய் இலங்குகின்றது. போலித் தலைவர்களையும், சுயநலப் பேய்பிடித்த தலைவர்களையும், வேஷத் தலைவர்களையும் இவரது ஒப்பற்ற தியாகம் பண்படுத்துமாக. ஆனால், உண்மையான தேசத் தொண்டர்களுக்கும், உறுதியான இச்சா சேவகர்களுக்கும், சேவையையே ஜீவிய நோக்கமாகக் கொண்டவர்களுக்கும் நவ நவசக்தியை மென்மேலும் உண்டாக்குமாக.

198516

பாரதப் போருக்காக—அறப் போருக்காக அரவான் என்பவனை உயிருடன் பலியாக அன்று பாரத நாடு அளித்தது. 25 வயதுள்ள ஒரு வாலிபரை—பல இன்பங்களை அனுபவிக்க வேண்டியவரை—யதீந்திர நாத் தாஸரை நாட்டின் விடுதலைக்காக வங்காளமோ இன்று அளித்திருக்கிறது. இந்திய தேச உரிமைப் போராட்டத்தில், சத்தியாக்கிரகக் கொடியில் அரும்பிய யதீந்திர நாத் தாஸ் என்னும் தியாக நறு மலரைச், சுதந்திர தேவியின் முடியில் வங்காளம் இப்பொழுது சூட்டியிருக்கிறது.

இந்திய சகோதரர்களே! இன்று ஒருவருடைய அபார அருஞ் செய்கையால் நாட்டில் எவ்வாறு நவீன உணர்ச்சி உண்டாகியிருக்கிறது? ஒருவருடைய தியாகம், அடக்கு முறைகளால் அட்டகாசம் செய்து கொண்டிருக்கும் அரசாங்கத்தை எவ்வாறு ஆட்டிக் கொண்டிருக்கிறது? தளரா அரசாங்க அடிமைச் சங்கிலிகளை அறுத்தெறிந்து நம் நாடு சுதந்திரமும், சமத்துவமும், சகோதரத்துவமும், செல்வாக்கும், செல்வமும் ஏனைய நன்மைகளும் அடைந்து வேறு பல அயல நாட்டாருடன் கௌரவமாய் இருக்க எத்தனையோ பேர் தியாகம் செய்ய முன்வரல் வேண்டும். யதீந்திரர் யார் பொருட்டுத் தனது ஜீவியத்தையே வெறுத்துத் தனது உயிரையே துறந்தார்? இந்தியாவின் பொருட்டென்பதையே ஒவ்வொரு இந்தியரும் உன்னி உன்னி உளம் குழைந்து உருகி உழைத்து உழைத்துச் சுதந்திரம் பெறுங்கள். எதன் பொருட்டு யதீந்திரர், தன் ஆவியைக் கொடுத்தாரோ, அதை நாம் அடைவதற்கு அரும் பாடுபடுவதே நமது கடமையாகும். சகோதர சகோதரிகளே! எழுங்கள்; முன் வாருங்கள்; ஒற்றுமையுடன் ஒன்று கூடுங்கள்; வேலை செய்யுங்கள்; சாத்வீகமாய்ப் போராடுங்கள்; நாட்டின் விடுதலையைச் சீக்கிரத்தில் பெறுங்கள்.

பிரிய மிக்க இந்திய இளைஞர்களே! இந்திய சரித்திரம் ஆதியிலிருந்து சரியாய் எழுதப்படவில்லையென்று சிலர் குறை சொல்லுகிறார்கள். உண்மைதான். புராதன காலத்தில் எந்தத் தேசம் யுத்த தர்மத்தைக் கைக்கொண்டிருந்தது? போரில்



நிராயுதபாணிகளுக்கு இம்சையுண்டா? ஆ! அவர்களை எவ்வாறு எதிரிகள் காப்பாற்றினார்கள்? ஒவ்வொரு தேச சரித்திரத்திலும் கொள்ளைகளும், கொலைகளும், சச்சரவுகளும், சண்டைகளும் தவிர்த்து வேறென்ன இருக்கிறது? நமது பண்டைச் சரித்திரம், ஞான சரித்திரங்களைப் பற்றியும், தர்ம அரசர்களைப் பற்றியும், தியாக மூர்த்திகளைப் பற்றியும் மட்டுமே கூறுகின்றது. பழந் தமிழ் மக்களது மஹா வீரத்தைப்பற்றி விவரிக்கத் தேவையில்லை. மத்திய காலத்தில் ராணா பிரதாப ஸிம்ஹன், கும்ப மகா ராணா முதலிய ரஜபுத்திரர்கள் எவ்வாறு வீரத்துடன் இருந்தார்கள். ரஜபுத்திர கோமளங்கள் எவ்வளவு தீரத்துடன் வாழ்ந்து வந்தார்கள் என்பதை அறிகிறோம்.

இப்பொழுது இந்தியா அடிமையாகிவிட்டது. பாரத மக்களின் சமத்துவத்திற்காகவும் சுதந்திரத்திற்காகவும் யதீந்திரநாத் தாஸ், தனது உயிரையே சுதந்திர தேவதைக்குச் சமர்ப்பித்தார். யதீந்திரரது ஆத்ம சக்தி உங்களுக்குப் பாய்ந்திருக்கிறது. யதீந்திரரது நாட்டுப் பற்று, தியாகம், அவரது அருங்குணங்கள் அனைத்தையும் அடைந்து அவரது ஆவேசம் பெற்று இந்தியாவை அடிமைத் தனத்திலிருந்து விடுவிக்க, எத்தனையோ கோடிக் கணக்கான யதீந்திரர்கள் உண்டாகி முன்வந்து தீவிரமாய் வேலை செய்ய ஓடிவாருங்கள்.

இன்று இளந் துருக்கியர்கள், சைனாவின் வாலிபர்கள், ஜப்பானிய யுவர்கள், ஜெர்மன் யௌவனர்கள் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள்? இக்கால வாலிபர்களே உலகத்தின் ஒவ்வொரு தேசத்திலும் அரிய தியாகங்களைச் செய்து நாட்டு முன்னேற்றத்திற்காக நன்கு உழைத்துக்கொண்டிருக்கிறார்கள். இந்தியாவின் விடுதலை உங்கள் வேலையிலேயே அடங்கியிருக்கிறது. இந்தியா இந்தியர்களுடையது. இந்தியர்களுக்காக ஆளப்படவேண்டும். இந்தியர்களால் ஆளப்படவேண்டும். ஆகையால் இந்தியா இந்தியர்களுக்காக இந்தியர்களால் ஆளப்படவேண்டும் என்பதை உணர்ந்து உறுதியுடன் உழையுங்கள். உலகம் உள்ளளவும் இந்தியா உள்ள

ளவும் யதீந்திரரது திருநாமம் பிரகாசித்துக்கொண்டேயிருக்கும். இந்தியாவின் விடுதலைச் சரித்திரம் எழுதப்படுங் காலத்தில், இவரது வரலாறு ஓர் அத்தியாயமாகவே அமையும். உலகத்தின் சுதந்திர சரித்திரத்தில் இவரது வாழ்வும் தியாகமும் உயரிய இடம்பெறும். யதீந்திரநாத் தாஸ் என்ற பெயருக்கு வீரம், தீரம், தியாகம் என்ற அருத்தங்கள் இனிமேல் அகராதிகளிலும், அபிதான சிந்தாமணிகளிலும் சமீபகாலத்தில் காணப்படும்.

தேசியம் தீவிரமாய்த் தோன்றிய காலமுதல், மஹாத்மாவால் அடிகோலப்பட்ட ஒத்துழையாமையில் இறங்கித் தனது சுயநலம் அனைத்தையும் விடுத்து, அல்லும் பகலும் தனது தாய் நாட்டின் நன்மைக்காகவே உழைத்து, தனக்காகவல்லாது பிறர்க்காகவே வாழ்ந்து கடைசியில் சுதந்திரத்திற்காகத் தனது இனிய அரிய உயிரையே சந்தோஷத்துடன் தியாகம் செய்த பாரத மணிக்குத் தேச மக்கள் என்ன செய்யப் போகிறார்களென்று தெரியவில்லை. அவர் உயிர் துறந்த செப்டம்பர் மீ 13உயை இந்திய தேசமெங்கும் இந்தியர்கள், உலகத்தின் எப்பாகங்களிலிருப்பினும் அப்பாகங்களிலெல்லாம் அவருடைய ஞாபகத் திருநாளாக—தேசியச் சின்னமாக—பெருநாளாகக் கொண்டாட வேண்டும். பல பிரதான பட்டினங்களிலுள்ள முக்கிய இடங்களில் இவரது உருவச்சிலைகள் நிறுவப்பட வேண்டும். நாடெங்கும் அவர் பெயரால் புஸ்தக சாலைகள் திறக்கப்பட வேண்டும். பல பொதுஸ்தாபனங்களுக்கு அவரது பெயரையே இட வேண்டும். பல நகரங்களில் உத்தியான வனங்கள், வீதிகள், பொதுக் கட்டிடங்கள் முதலியவைகளுக்கு அவரது பெயரையே நாட்ட வேண்டும். பல தேசிய ஸ்தாபனங்களுக்கு அவர் பெயர் என்றும் நிலவும் பொருட்டும், நமது பின்னோர்களுக்குத் தியாகத்தில் ஆவேசம் உண்டாகும் பொருட்டும் அவர் பெயரையே கொடுத்து வழங்கலாம். ஹிந்துஸ்தான் தொண்டர்படைக்கு அவர் பெயரைச் சூட்டலாமல்லவா? அவரது படங்கள் நகரசபை மண்டபங்களிலும், மற்றும் பல பொது ஸ்தாபனங்களிலும் வைக்கப்பட வேண்டும். அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியிலுமட்டுமல்ல ஒவ்வொரு மாகாணக் கமிட்டியிலும் அவருக்கு ஏதே



னும் தக்கபடி ஞாபகச் சின்னங்கள் உண்டாக்கி அவர் பெயரை—தியாகத்தை நாட்டில் மறவாதிருக்கும்படி செய்யலாம். இங்கு ஒவ்வொன்றாய்ச் சொல்லமுடியாத எத்தனையோ புதிய வகைகளில் அவர் திருநாமதேயத்தைப் பெருமைப்படுத்தி நாட்டில் தேச பக்தியை வளர்க்கலாம்.

ஆ! இந்தியாவின் அருந்தவப் புத்திரரே, நாட்டின் செல்வமே, இந்தியாவின் மாக்ஸ்வினியே, தியாக ரத்தினமே, சாத்வீக சாகரமே, வீரக் குன்றமே, கர்ம தீர திலகமே, சத்தியாக்கிரக சிரேஷ்டரே, தாங்கள் இங்கு ஸ்தூல உலகில் மறைந்துவிட்டாலும் சூக்கும உலகிலிருந்துகூடத் தேசத்துக்கு நன்மைகள் செய்துகொண்டிருப்பீர்களென்றே நம்புகிறோம்.

தன் நாட்டின் மீட்சிக்காக மகிழ்ச்சியுடன் தனது பிரிய உயிரையே கொடுத்த தியாகியை—உத்தம புத்திர சிகாமணியை ததீசி முனிவர் போன்ற யதீந்திர மகரிஷியைப் பெற்று அன்பாக வளர்த்து நாட்டின் பணிக்காகத் தத்தம் செய்த தாய் தந்தையர்களின் பாக்கியமே பெரும் பாக்கியம்; அவருடன் உடன் பிறந்தவர்களின் சிலாக்கியமே பெரும் சிலாக்கியம்; அவர் தோன்றிய குடும்பத்தின் பெருமையே பெருமை. யதீந்திரரது தந்தையார் ஸ்ரீமான் பங்கிம் பிஹாரி தாஸ், தனது மகனது சவம் மயானத்தில் தீ மூட்டப்படும் பொழுது, அவர் பரிதவித்து உருக்கத்துடன் தாரை தாரையாய்க் கண்ணீரைத் துளித்து அனுப்பிய செய்தி, தேசத் துரோகம் செய்த அயல் நாட்டாருக்கு நமது தாய் நாட்டைக் காட்டிக் கொடுத்த நமது முன்னோர்களுக்கு ஒரு பெரிய கண்டனமாகவும், நமக்கும் நமது பின்னோர்களுக்கும் ஹிந்து முஸ்லிம் ஒற்றுமையைப் பற்றி—அகில இந்தியாவின் ஒற்றுமையைப் பற்றி ஒரு நல்லுபதேசமாகவும் இருக்கிறது. நமது அனுதாபத்தை யதீந்திர நாத் தாஸரது குடும்பத்தாரனைவருக்கும் தெரிவித்துக்கொள்கிறோம்.

யதீந்திரரது தியாக உணர்ச்சி, ஆத்ம சக்தி உலகமுள்ளளவும் நிலைத்து நின்று பெருகி வளர்வதாக. அவருடைய ஆத்மாவுக்குச் சாந்தி உண்டாகமுழு முதலை முழு மனதுடன் பிரார்த்திக்கிறோம்.

## சாரதாவின் பால்ய விவாகத்தடை மசோதா.

வெள்ளைக்காரர், ஜாதி அகங்காரமும், ராணுவத் திமிரும், செல்வச் செருக்கும், நிற உயர்வும், ஏகாதிபத்திய இறுமாப்பும் கொண்டிருக்கிறது போல், இந்தியாவில் வைதீகர்கள், ஜாதி அகம்பாவமும் பிறப்பால் கர்வமும் வைதீகத் திமிரும் கொண்டிருக்கிறார்கள். இந்தியாவின் முன்னேற்றத்தை இத் தேசத்திலுள்ள வைதீகர்கள் பல வழிகளில் தடுத்துக் கொண்டிருக்கிறார்கள். தேசாபிவிருத்திக்கான காரியங்கள்—சமூக சீர்திருத்த சம்பந்தமான விஷயங்கள் ஏதேனும் எங்கேனும் ஆரம்பிக்கப்பட்டால், "ஜாதி போச்சுது, மதம் போச்சுது" என்று இவர்கள் வீண் கூக்குரல் போட்டு அசட்டுப் பிடிவாதம் செய்கிறார்கள். கவர்னர்ஜெனரல் லார்டு வில்லியம் பெண்டிங் சதி என்னும் உடன் கட்டை ஏறும் மஹா கொடிய வழக்கத்தை நிறுத்தியதற்கு, இந்தியர்கள் என்றும் சர்க்காருக்கு வந்தனம் செய்யக் கடமைப்பட்டிருக்கிறார்கள். அப்பொழுதும் வைதீகர்கள் போட்ட கூச்சல்கள் எல்லாம் விழலுக்கிறைத்த நீராயின.

ஸ்ரீமதி அம்மை முத்துலட்சுமியார் கொண்டுவந்த மசோதாவுக்கு, வைதீகர்கள் தங்களாலான மட்டும் விரோதமாய்ப் போராடியதுடன், கோவிலுக்குத் தாசிகள் அவசியம் வேண்டுமெனவும் வற்புறுத்தினார்கள். தாசிகள் வேண்டியது யாருக்கு? எதற்கு? ஏனோ? இதிலும் வைதீகர்களுக்கு அபஜெயமே கிடைத்தது. வைதீகர்களால் நாட்டுக்கு விளையும் கேடுகளில் எதைச் சொல்லுவது? எவ்வளவுதான் கூறுவது? சமத்துவத்தை நிலைநாட்டி, வைதீகக் கொடுமைகளை நாசப்படுத்தவே புத்தபிரான் முற்காலத்தில் அவதரித்தார் என்று சொல்லுவது குற்றமாகாது. ஏசுநாதர், வைதீகர் தந்திரங்களை வெறுத்து அவைகளுக்கு விரோதமாகப் பேசியதால், அவர் மீது துவேஷங்கொண்டு சங்கடப்படுத்திச் சிலுவையில் அவரை அறைந்து கொன்றவர்கள் அக்காலத்து வைதீகர்கள் என்பதை மறந்து போகாதீர்கள். சமூக உயர்வு தாழ்வு சச்சரவுகளுக்கும் வேற்றுமைகளுக்கும் மதச் சண்டைகளுக்கும் எப்பொழுதும் வைதீகர்களே காரணமென்று சொல்லுவதை எவர் மறுக்கப் போகிறார்கள்?



உலகம் அடிக்கடி அதி தீவிரமாய் மாறிக்கொண்டேயிருக்கிறது. நிலையே மரணம்! அசைவே அபிவிருத்தி!! மாற்றமே வளர்ச்சி!!! காலத்திற்குத் தக்கபடி, போக்கை மாற்றித் தற்கால உலகத்திற்குத் தகுந்தபடி நடக்கும் தேசங்களே முன்னேறிக்கொண்டிருக்கின்றன. கால இயலைக் கவனித்து அனுசரித்து நடப்பதே ஒவ்வொருவருக்கும் கடமையாகும். உலக சரித்திரமே இதற்கு இப்பொழுது சாட்சியாக நம்முன் நிற்கிறது.

எத்தனையோ கெட்ட வேண்டாப் பழக்க வழக்கங்களும் கூடா ஒழுக்கங்களும் ஹிந்து சமூகத்தையே நாசமாக்கிக்கொண்டு வருகின்றன. அவைகளில் முக்கியமாகப் பால்ய விவாகமும் ஒன்று. கலவியே இன்னதென்றறியா அதி இளம் பெண்களுக்கும், பள்ளிக்கூடத்துச் சிறார்களுக்கும், தாய் தந்தையர் மடிமீதிருந்து தவழ்ந்து விளையாடும் பாலர்களுக்கும், பால் மணம் அறாத பச்சைப் பசுங் குழந்தைகளுக்குங்கூட இப்பொழுது கல்யாணம் செய்துவைக்கிறார்கள்! உடல்வலி, மனோசக்தி பெறாத சின்னஞ் சிறுமிகளுக்கும் சிறு பையன்களுக்கும் விவாகம் செய்வித்து, குடும்பக் கவலைகளை இன்னதென்று அறியா அவர்கள்மீது குடும்ப பாரத்தை ஏற்றுவதால், பலவித தீமைகள் உண்டாகின்றன என்பதை அறிவுடை மக்கள் அனைவரும் ஒப்புக்கொள்ளுகின்றார்கள். நம் நாட்டில் பால்ய விவாகத்தால் விதவைகள் பெருகிக்கொண்டிருக்கிறார்கள். விபசாரம், சிசுவதை, கட்டாயச் சேர்க்கை முதலிய பெருங் கொடுங் கூடா ஒழுக்கக் கேடுகள் வளர்ந்துகொண்டே வருகின்றன. இத் துர்வழக்கம் பாரத நாட்டையே பாழ்படுத்திக் கொண்டிருக்கிறதை அறியாமல், ஜாதியின் பெயராலும், மதத்தின்—சாஸ்திரத்தின் பெயராலும், வழக்கத்தின் பெயராலும் பால்ய விவாகத்தைப் போற்றி அனுசரித்து வருவது என்ன கொடுமை! எவ்வளவு பேதமை.!!

இதைப்பற்றி நம் நாட்டில் பேசாத உண்மைப் பத்திரிகைகளே கிடையாது. இதைப்பற்றிப் பேசாத சீர்திருத்தக்காரர்

களே கிடையாது, எத்தனையோ மனிதர்கள் எவ்வளவோ எவ்விதமோ எண்ணுகிறார்கள், பேசுகிறார்கள், எழுதுகிறார்கள்? ஆனால் அவர்களுக்கு அவைகளைச் செய்ய ஆற்றல் வேண்டுமே? அஞ்சா நெஞ்சம் வேண்டுமே! இளமை மணக் கேடுகளை நன்கு ஆராய்ந்துணர்ந்து, தேச நன்மையைக் கருதி அதைத் தடுக்கும்பொருட்டு இந்தியச் சட்டசபையில் திரு. ராவ்பகதூர் ஹரிவிலாச சாரதா அவர்கள் ஒரு மசோதாக் கொண்டுவந்தார். உடனே வைதீகர்களும், வைதீக வெறி, ஜாதிப் பேய்பிடித்தவர்களும், குறுகிய நோக்கங்கொண்ட சில படிப்பாளிகளும் வழக்கம்போல் கூக்குரல் போட ஆரம்பித்து, எத்தனையோ இலட்சக்கணக்கான கையொப்பங்கள் போட்டுத் தடை மனுக்கள் அனுப்பியும், எத்தனையோ விதமாய் எதிர்ப் பிரச்சாரம் செய்தும், எவ்வளவோ தந்திரங்கள் செய்தும், எவ்வளவோ தப்பான அபிப்பிராயங்களை உண்டுபண்ணியும், மே. த. ராஜப்பிரதிநிதியினிடம் தூது சென்றும் இம்மசோதாவுக்கு எவ்வளவு தீமைகள் செய்யமுடியுமோ அவ்வளவையும் செய்தே தீர்த்தார்கள்.

இது இந்தியச் சட்டசபைக்கு விவாதத்திற்கு வந்தபொழுது, அதில் அங்கத்தினர்களாயிருந்த வைதீகர்கள், இம்மசோதாவைத் தோற்கடிக்கப் பெரும் பிரயாசை எடுத்துக்கொண்டார்கள். கடைசியாக திரு. சாரதாவுக்குச் சாதகமாகப் பரந்த நோக்கமும் போதிய சீர்திருத்த உணர்ச்சியும் பெற்றிருக்கும் 67 பேரும், பாதகமாக மனோவிசாலமற்ற குறுகிய நோக்கம் கொண்டிருக்கும் 14 பேரும் வாக்களித்தார்கள். இதை உற்று நோக்கினால் நாட்டில் இம்மசோதாவுக்கு உள்ள பேராதரவு நன்கு தெரிகிறது.

இச் சட்டத்தின்படி பையன்கள் 18 வயதிற்கு மேற்பட்டும், பெண்கள் 14 வயதிற்கு மேற்பட்டும் மணம் செய்துகொள்ளலாம். இந்தச் சட்டத்திற்கு மாறாக நடந்துகொள்பவர்களுக்கும், நடக்கும்படி செய்பவர்களுக்கும் ஒரு மாதம் சிறைவாசமோ ரூ. 1000 அபராதமோ அல்லது இரண்டும் சேர்ந்தோ தண்டனையாக விதிக்கப்படும். 1930-ம் ௵ ஏப்ரல் ௴ முதல் உ முதல் இது அமுலுக்குக் கொண்டுவரப்படும்.



இம்மசோதா எவ்வளவோ ஆதரவுடன் சட்டமாகி விட்டபடியால் பால்ய விவாகத்திற்குச் சாவுமணி அடிக்கப்பட்டது. இப்பொழுது சீர்திருத்தக்காரர்கள் வெற்றிச் சங்கெடுத்து ஊதிக்கொண்டிருக்கிறார்கள். பிற்போக்கில் பிரியம்கொள்ளும் வைதீகர்களோ முக்காடிட்டு மூலையில் படுத்துக்கொண்டிருக்கிறார்கள். சீர்திருத்தமே இன்னதென்றறியா வைதீகர்களுக்கு இது நல்ல பாடமாகட்டும். இனிமேலாவது இவர்கள் இம்மாதிரி விஷயங்களில் பிரவேசியாதிருப்பார்களாக. இதனால் எத்தனையோ பெண்கள் இரட்சிக்கப்படப் போகின்றார்கள். எத்தனையோ குடும்பங்கள் காக்கப்படப் போகின்றன. வரதட்சணைக் கொடுமை குறையப்போகிறது. விதவைகள் கொடுமை மறையப் போகின்றது. இந்திய சமூகத்திற்கே பெரும் நன்மை ஏற்படப்போகிறது. இந்நாட்டின் நிலை உயர்வதற்கு இன்னும் சமூகச் சீர்திருத்தச் சட்டங்கள் பல நிறைவேற்றப்படல் வேண்டும்.

இந்த மசோதா சம்பந்தமாக இந்தியச் சட்டசபையில் வாதிக்கப்பட்டபொழுது, சில படே படே தேசாபிமானிகள் ஜாதி மதவிஷயங்களில் எவ்வளவு அற்பமாய் நடந்துகொண்டார்கள்! தேசிய விஷயங்களில் சிங்கம்போற் கர்ஜிக்கும் பெரும் பெரும் பேர் பெற்ற சில தேசபக்தர்கள், சமய சமூக விஷயங்கள் வரும்பொழுதெல்லாம் பூனைமாதிரி ஓடிப் பதுங்கிக்கொள்கிறார்கள். "நான் வங்காளியல்ல, ஆனால் நான் இந்தியன்" என்ற யதீந்திரரது மணிவாசகத்தை இவர்கள் என்றுதான் கவனிப்பார்களோ? சமூக சீர்திருத்தங்களுக்கு எவ்வளவோ தீவிரமாய் வேலைசெய்துகொண்டிருக்க வேண்டிய தேசாபிமானிகள், இம்மசோதா விஷயத்தில் எவ்வளவோ பிற்போக்காய் நடந்துகொண்டார்கள். இப்படிப்பட்ட தேசபக்தர்களின் மனப்போக்கை அறிந்துகொள்ள முடியவில்லை.

இம்மசோதாவை ஆதரித்த இந்தியச் சட்டசபை மெம்பர்களையும், இதைச் சட்டமாக்க அனுமதித்த இந்திய சர்க்காரையும் மனதாரப் போற்றி, வாயார வாழ்த்தி அவர்களுக்கு வந்தனங்கள் செலுத்துகிறோம். சர்க்கார் மனப்பான்மை பலவிஷ

யங்களில் எப்படியோ இருந்தாலும், இம் மசோதா விஷயத்தில் தக்கவாறு நடந்துகொண்டதைப் பிரத்தியேகமாய்க் குறிப்பிடுகிறோம். பல பெரும் பெரும் எதிர்ப்புக்களையும் சென்ற ஒரு வருடமாகத் தைரியமாய் எதிர்த்துநின்று, ஒவ்வொன்றிற்கும் சரியான சமாதானம் கூறி, இடைவிடாது வெகுவாய் உழைத்து, உழைத்து, இம் மசோதாவை நிறைவேற்றிவைத்துத், தேசத்துக்குத் தக்க தருணத்தில் தக்கவாறு தொண்டு செய்திருக்கும் ஸ்ரீமாந் ராவ் பஹதூர் ஹரிவிலாஸ சாரதா அவர்களுக்கு இந்தியா என்றுமே மறவாத எவ்வளவோ கடமைகளுக் குட்பட்டிருக்கிறது. அவருக்கு எல்லாப் பாக்கியங்களும் உண்டாவதாக.

## துறவி ஊ விஜயாவின் வீரம்.

இன்னொரு சங்கதி! பர்மாவில் இதென்ன அநியாயம்! இந்தியாவின் அரசியற் கைதிகளுக்கெல்லாம் கஷ்டமா? யதீந்திர தாஸ், தியாகத்துடன் உயிர் நீத்ததைப்பற்றி எழுதிய மை, இனியும் உரைவில்லை; எழுதிய பேனாவை இனியும் கீழே வைக்கவில்லை; அவருக்காக அழுது வருந்திய மனம் இனியும் ஆறவில்லை; இப்பொழுது நாடெங்கும் யதீந்திர நாதர் பேச்சாயிருக்கிறது.

பொங்கி ஊ விஜயா என்னும் புத்த சந்நியாசி உண்ணா விரதமிருந்து உயிர் விட்டாரென்று கேட்டு அளப்பரிய துக்கமடைகிறோம். அவர் மேலான தேச பக்தர். ஜீவகாருண்ய மதமாம் புத்த மதத்தை அநுசரித்து, தாய் நாட்டின் விடுதலைக்காக உழைத்து வந்தார். இராஜாங்க நிந்தனைக் குற்றம் ஏற்பட்டு, 21 மாதங்கள் கடுங் காவல் தண்டனையை அநுபவித்துவிட்டுச் சென்ற பிப்ரவரி மாதந்தான் விடுதலை அடைந்தார். இராஜாங்கத் துவேஷப் பிரசங்கம் செய்ததாக மறுபடியும் அவரைக் கைது செய்து விசாரித்து, அவருக்கு 6 வருடம் தீவாந்தர சிட்சை விதித்தனர். அப்பால் 6 வருடங்களை 3 வருடங்களாகக் குறைத்தனர். அவர் ஒரு பொங்கி ஆனபடியால், விசேஷ நாட்களில் காவி உடை உடுக்கவும், மாதத்தில் 2 நாட்கள் விரதமிருக்கவும் அநுமதி வேண்டுமெனக்



கேட்டார். ஒரு துறவி கேட்ட இச் சிறு விஷயத்தைச் சர்க்கார் மறுத்து விடவே, ஏப்ரல்மீ 9உயிலிருந்து உண்ணா விரதத்தை அநுசரித்ததால், அவருக்கு வியாதி உண்டாகி விடவே அவர் சிறை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போகப்பட்டார் அப்பொழுது காவி உடை தரிப்பதற்கு அவருக்கு அநுமதி அளிக்கப்பட்டது. சிறிது பாலும் அருந்திக்கொண்டே வந்தார். ஆனால், இரங்கூன் சிறையின் வைத்திய சாலையில் இம் மாதம் 20உ யன்று ஆவி நீத்தார். சுதந்திரத்திற்காகவே இத் துறவி உயிர் துறந்தார். இதனால் பர்மியர்களது தேச பக்தி அதிகரிக்குமென்பதில் தடையே யில்லை. இந்திய சர்க்காரின் போக்கு என்று மாறுமோ? பொங்கி ஊ விஜயாவின் ஆவிக்குச் சாந்தி! சாந்தி.!!

## சிறையில் தேச பக்தர்களது வாட்டம்

அரசியற் கைதிகளைச் சரியாய் நடத்த வேண்டுமென்பதற்காக ஸ்ரீமாந் சதீன் சென் பட்டினி நோன்பு கொண்டிருக்கிறார். தன்னையும் தன்னுடனிருக்கும் மற்ற அரசியற் கைதிகளையும் சர்க்கார் நடத்தி வரும் குறையை மாற்றிக் கொள்ளும்வரை தனது உண்ணா விரதத்தை மாற்றவோ அல்லது தான் ஜாமீனில் விடுதலை பெறவோ முடியாதென்று கூறுகிறார். அவர் தேச மக்களுக்கு விடுத்திருக்கும் செய்தியாவது:—

> தேச மக்கள் என் மீது அன்பு கொண்டிருப்பார்களாயின், என்னைச் சிறைச் சாலையிலிருந்து விடுவிக்க விரும்புவார்களாயின், என்னை உயிருடன் விடுவிக்க வேண்டுமேயொழிய என்னுடைய பிரேதத்தை வெளியில் கொண்டுபோக வேண்டுமென்று விரும்பவில்லை. இவ்விதம் செய்ய வேண்டுமானால், தேச மக்கள் அனைவரும் தேச ஊழியத்தில் ஈடுபட வேண்டியதைத் தவிர்த்து வேறு வழியில்லை.

ஸ்ரீமாந் சதீன் சென் தன்னிடம் விடுத்த செய்தியை ஒட்டி ஸ்ரீமாந் ஜே எம். சென் குப்தா கூறுவதாவது:—

> வீணாகப் பொதுக் கூட்டங்களைக் கூட்டித் தனக்காகக் கண்ணீர் விட்டுக் கொண்டிருப்பதில் ஜதீன் சென்னுக்கு விருப்பமில்லை. இத்

*தேசத்திலுள்ள இளைஞர்களிடையே புத்துணர்ச்சி உண்டாகும்படி செய்வதோடு, இத் தேச இளைஞர்கள் தேசத்திற்காகத் தங்கள் உயிரையும் தியாகம் செய்யத் தயாரா யிருக்கிறார்கள் என்பதைச் சர்க்கார் அறியும்படி செய்ய வேண்டியது இளைஞர் கடமையாகு மென்பதேயாம்.*

இந்திய சர்க்காரின் சரியற்ற பிடிவாதத்தால் சதி வழக்கில் சம்பந்தப்படுத்தப்பட்ட யதீந்திரர் 63 நாட்கள் உண்ணாமற் கிடந்து உயிர் நீத்தார். ஸ்ரீமாந் சதீன் சென்னை பாரிசால் சிறையில் சாகக் கிடக்கிறார். ஸ்ரீமாந் மங்கல சிங்கும், தத்தரும் அப்படியே. அவர்கள் கேட்பது அற்ப சௌகரியங்களே. உண்ணச் சுத்தமான உணவும், உடுக்கச் சுத்தமான உடையும், படிக்கப் புஸ்தகங்களும், எழுத உபகரணங்களுமே அவர்கள் வேண்டுமென்கிறார்கள். இராஜத் துவேஷக் குற்றம் சாட்டப்பட்டிருக்கும் இவர்களைத், திருட்டு, கொள்ளை அல்லது கொலைக் குற்றம் செய்த கைதிகள் போன்று நடத்துவது சர்க்காருக்கு அழகுமல்ல, அடுத்ததுமல்ல. சதி வழக்குத் தொடர்புள்ள விசாரணையிலிருக்கும் கைதிகளுக்கு ஒரு வாரத்திற்குள் தங்கள் கோரிக்கைகளை முடிவு செய்து கொடுக்காவிட்டால், யதீந்திரரைப் பின் பற்றுவதாக முடிவு கட்டி விட்டார்கள். கவர்ண்மெண்டு இனிமேலும் பிடிவாதங் கொண்டு வேண்டுமென்றே செவிடாய் விட்டால், தேசமெங்கும் பல யதீந்திரர்கள் தோன்றக்கூடும். சர்க்கார் இதைக் கவனிப்பார்களா?

## ஸ்ரீமாந் பாலகுருவப்ப செட்டியாரவர்களின் மறைவு.

எமக்கு மிகவும் ஆதரவாயிருக்கும் சென்னை பச்சா குடும்பத்தைச் சேர்ந்த நமது நண்பர் ஸ்ரீமான் பாலகுருவப்ப செட்டியாரவர்கள் 10—8—1929-ல் காலங் கடந்து விட்டதற்காக மிகவும் துக்கப்படுகிறோம். இன்னவர் உத்தேசம் 35 வயதமைந்த யௌவன பருவத்தை அடைந்து விளங்கினர். இவர் சென்னையிலுள்ள சில விளையாட்டுச் சங்கங்களிற் சேர்ந்து தலைமை வகித்து விளையாட்டுக்களில் கியாதி பெற்றவர். இவரது பிரிவால் பச்சா குடும்பத்திற்கும் சென்னைத் தேவாங்க சமூகத்திற்கும், தோல் வியாபாரிகளுக்கும், தென்னிந்திய விளையாட்டுச் சங்கத்திற்கும் (S. I. A. A.) ஒரு பெரும் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. இவர் அடக்கமும் அன்பும் ஒழுக்கமும் சிரித்த முகமும் இனிய சொல்லும் வாய்க்கப்பெற்றவர். பலபேர் அடங்கிய ஒரு பெருங் குடும்பத்தையும் தனது சின்னஞ்சிறு குழந்தைகளையும் தவிக்கவிட்டுப் பிரிந்துவிட்டார். துக்கத்தில் மூழ்கி யிருக்கும் ஸ்ரீமான் பச்சா முனுஸ்வாமி செட்டியாரவர்களுக்கும் அவர்தம் சகோதர சகோதரிகளுக்கும் மற்றுமுள்ள குடும்பத்தாரனைவருக்கும் எமது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம். காலஞ் சென்றவருடைய ஆத்மா சாந்தி அடைவதாக!



## திரு ஆர். பி. சேதுப் பிள்ளையவர்களுக்கு ஆசிரிய பதவி

தனது பேச்சுக்களாலும், எழுத்துக்களாலும், நூற்களாலும் தமிழ் மொழிக்கு நற்றொண்டு செய்துகொண்டு வரும் திருநெல்வேலி ஸ்ரீமான் ஆர். பி. சேதுப் பிள்ளையவர்களைச் சிதம்பரம் அண்ணாமலைச் சர்வகலாசாலையில் தமிழ் உபந்நியாசகராக ஏற்படுத்தியிருக்கிறார்கள் என்பது தமிழருக்குச் சந்தோஷச் செய்தியேயாகும். தாய்ப் பாஷையின் மூலம் தாய்நாட்டுக்குப் பணி இனியும் அதிகமாக ஆற்றுவதற்குச் சரியான சந்தர்ப்பம் இவருக்குக் கிடைத்திருக்கிறது. நோயற்ற யாக்கையுடன் பன்னெடுங்காலம் வாழ்ந்திருந்து திரு. பிள்ளையவர்கள் தமிழ்த் தொண்டு செய்வாராக. அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் எப்பொழுதுதான் தமிழுக்குப் பேராசிரிய பீடம் அமைக்கப் போகிறார்களோ? எப்பொழுதுதான் தமிழுக்குத் தனிப் பெருங் கௌரவம் கொடுக்கப் போகிறார்களோ?

## "மாடென் ரெவியூ"ப் பத்திராதிபருக்கு அபராதம்.

இந்தியாவில் ஆங்கில பாஷையிலும் சுதேச பாஷையிலும் வெளிவரும் மாதப் பத்திரிகைகளில் கல்கத்தா "மாடேன் ரேவியூ"ப் பத்திரிகையே தலைசிறந்த தென்று ஆங்கிலப் பத்திரிகா உலகில் அனைவரும் அறிவர். தேசீய மணம் கமழ்ந்துகொண்டு இப் பத்திரிகை இந்தியாவுக்கு நல்ல வேலை செய்து வருகிறது. உலகத்தின் பல பாகங்களிலிருந்தும் அதற்கு அநேக கல்விமான்கள் கட்டுரைகள் எழுதிக்கொண் டிருக்கிறார்கள். அதற்கு ஆசிரியர் ஸ்ரீமாந் ராமானந்த சாட்டர்ஜீ யவர்களாவர். அவரது திறமையால்

த்திரிகையை நன்கு நடத்துகின்றமையை அறிந்து, ஜெனிவா சர்வ தேச சங்கத்தார் (League of Nations) அவரை அங்கு அழைத்து, சங்களது அவையின் நடபடிக்கைகளைக் கவனிக்குமாறு கௌரவப் படுத்தியதிலிருந்தே அவருடைய பெருமை விளங்குகிறது.

அமெரிக்காவிலிருக்கும் அறிஞர் சந்தர்லாண்டு அவர்கள், உண்மையை உள்ளபடி உரைப்பவர். தான் அறிந்ததை அஞ்சா நெஞ்சுடன் பத்திரிகைகளிலும் புஸ்தகங்களிலும் எழுதுபவர். அமெரிக்கர், ஜப்பானியர்கள் மீது வீண் துவேஷமும் விருதா வெறுப்பும் கொண்ட பொழுது, "**முன்னேறிக் கொண்டிருக்கும் ஜப்பான்**" (**Rising Japan**) என்ற பெயருடன் ஒரு புஸ்தகம் எழுதி வெளியிட்டு, அமெரிக்கர்களுக்கு சரியற்ற விதத்தில் உண்டான சந்தேகத்தை அகற்றி, ஜப்பானியர்களுக்கு உதவி செய்யாமல் செய்து இரு தேசங்களையும் பரஸ்பரப் படுத்தினர்.

அவர் இந்தியாவின் நண்பர். இந்தியாவின் அடிமை நிலையை அதிகமாய் அறிந்து அனுதாபங் கொண்டிருப்பவர். இந்தியாவிலிருந்து நாடு கடத்தப்பட்டு, நமது தலைவர் லாலாஜி அவர்கள், அமெரிக்காவில் **இந்தியாவின் விடுதலையை விரும்பும் நேசர்கள் சங்கம்** (**Society of Friends for Freedom of India**) என்பதை நிறுவிய பொழுது, அதற்கு மிகவும் உதவி-யளித்தவர் அவர். "**அடிமையில் இந்தியா**" (**India in Bondage**) என்ற புஸ்தகத்தை எழுதி, ஸ்ரீமான் ராமானந்த சாட்டர்ஜி அவர்கள் மூலம் கல்கத்தாவில் வெளியிட்டார். அதில் சில பாகங்கள் "மாடர்ன் ரிவியூ" மாசிகையில் ஏற்கனவே வெளிவந்திருக்கின்றன. இதை வெளியிட்டதற்காக ஸ்ரீமான்கள் ராமானந்த சாட்டர்ஜி அவர்கள் மீதும், சஜனிகாந்த தாஸ் அவர்கள் மீதும் ராஜத்துவேஷப் பிரசுரம் செய்ததாகச் சர்க்காரால் குற்றம் சாட்டி தலைக்கு ரூ 1000 அபராதம் விதிக்கப்பட்டது. இப்படி யிருந்தால் இந்தியாவில் சுதந்திர நூற்கள் எவ்வாறு புஷ்பிக்கப் போகின்றன. அவைகளை, அரும்பிலேயே கிள்ளி நசுக்கி எறிந்து விடுகிறதே அரசாங்கம்!

சுதந்திர அமெரிக்காவில் வசிக்கும் அந் நூலின் ஆசிரியர் அறிஞர் சந்தர்லாண்டு அவர்களிடமும், அந் நூலில் காணும் அநேக மேற்கோள்களைக் கூறிய, இப்பொழுது இங்கிலாந்தின் முதல் மந்திரி ராம்சே மாக்டொனல்டு அவர்களிடமும் கிட்ட நெருங்காது, இந்திய சர்க்கார் அடிமை இந்தியாவின் பத்திராதிபரின் மேற் பாய்ந்து அவருடைய ஆர்வத்தை அடக்கும் முறையை என்னென்று சொல்லுவது! மேற் கூறிய இருவரும் கொடுத்த இரண்டாரமும் இந்தியாவின் பணமென்பதையும், இந்திய தேசத்துக்காக உழைக்கும் இவ் விருவரையும் இம் முறையில் குற்றம் சாட்டப்பட்டது, இந்தியாவனைவரையுமே குற்றம் சாட்டப்பட்டது என்பதையும் எத்தனை தேச பக்தர்கள் இதுவரையில் உணருகிறார்கள்.

1985/6




# ஹமீதிய்யா ஜெனரல் ஸ்டோர்,
## கம்பம், (மதுரை ஜில்லா.)

**டீ பாக்டரி:-** திருவாங்கூர் மலைகளில் விளைவாகும் நல்ல மணமும் நிறமும் உருசியுமுள்ள பலவகையான உயர்ந்த தேயிலைகளும்,

**ஸ்டோர்:-** உயர்ந்த சோப்பு தினுசுகள், இங்கிலீஷ் மருந்துகள், கண்ணாடிச் சாமான்கள் காகிதம், பென்சில், பேனா, லெட்டர்ப் பேப்பர்கள், பவுண்டன் பேனா வகையறுக்கள், நாற்காலி, கட்டில் முதலிய ஆசனச் சாமான்கள், பூட்ஸ், சிலிப்பர்கள் முதலிய தோல் சாமான்கள், அநேகவித குல்லா தினுசுகள், இன்னும் தேவையான பல வகை ஷாப் சாமான்களும்,

**மோட்டாருக்கு வேண்டிய சாமான்கள்:-** மோட்டாருக்கு வேண்டிய பெட்ரோலியர், சிலிண்டர் ஆயில், மோபிலாயில், பலவகை டயர்கள், சைக்கில்கள், இவைகளுக்கு வேண்டிய எல்லாச் சாமான்களும் கிடைக்கும்.

**பவுன் விற்பனை:-** பவுன் வாங்கல் கொடுத்தல்

**ஹமீதிய்யா பாங்கு:-** உண்டியல்கள், செக்குகள் கொடுப்பதும் வாங்குவதும் நடைபெறுகிறது.

கம்பத்தில் நூதன முறையில் புதிதாக ஏற்பட்டிருக்கும் இந்தப் புதிய ஸ்டோரை நேரில் வந்து தயவு செய்து பாருங்கள். உங்களுக்கு வேண்டிய சாமான்களை ஒரு முறை இங்கு வாங்கிப் பரீட்சை செய்யுங்கள். சாமான்களின் உயர்வையும் விலை சகாயத்தையும் கண்டு சந்தோஷப்படுவீர்கள்.

வெளியூர் ஆர்டர்களை உடனுக்குடன் கவனிக்கப்படும்.

## ஜெர்மன் புது வயிரம்.

விலை சரசம்! விலை சரசம்!!

ஜோதியானது. ஒளி மங்காது.

நாங்கள் ஸ்பெஷலாக ஜெர்மனியிலிருந்தே தருவழைத்து சொற்ப லாபத்திற்கே விற்று வருகிறோம்.

காரட் 1-க்கு 4 ரூ. முதல் 6. ரூ வரையுள்ள தினுசுகளிருக்கிறது. மற்றும் எங்களிடம் இமிடேஷன் புஷ்பராகங்களும், பட்டைச் சிகப்பு தினுசுகளும் ஏராளமாய்க் கிடைக்கும். விலாசம்:

**அ. பொன்னுச்சாமி செட்டி**

சராப்புக்கடை,

பெரியகடைவீதி, திருச்சி.

## பைரவாஞ்சனம்.

அருமையாகத் தயாரிக்கப்பட்ட இவ்வாஞ்சனமானது தலைவலி, பல்வலி, இடுப்புவலி, முதுகுவலி, வாய்வுப்பிடிப்பு, கீல்பிடிப்பு, ஜலதோஷம், வெட்டுக்காயம் முதலியவைகளுக்கு உபயோகிக்கலாம். புட்டி 1-க்கு விலை அணா 0-5-0.

N. B:—எங்கள் கம்பெனியில் இன்னும் அநேக நூதன சாமான்கள் தயார்செய்து வைத்திருக்கிறோம்.

விருப்பமுள்ளவர்கள் எழுதினால் விலை ஜாப்தா அனுப்பப்படும்.

**பைரவர் கம்பெனி,**

ராஜாத்தெரு. பழனி., S. I. Ry.

## "கலா நிலயம்"

இது ஓர் இலக்கிய வாரப் பத்திரிகை.

கலையுணர்வும், கலா ஞானமும் பெறுவதற்கு இது ஒரு நல்ல கருவியென்றால் மிகையாகாது. இதில் இலக்கிய வளர்ச்சிக்குரிய கட்டுரைகளை மலிந்து வருகின்றன. கம்பராமாயணம், தமிழ்ப் பாடம், அகப்பொருள் வரலாறு, செந்தமிழ் காவல், ஆங்கிலப் புலவர்களாகிய கார்லைல், ரஸ்கின், எமர்ஸன் முதலியோரின் கட்டுரை மொழி பெயர்ப்புகள், மற்றும் பல விஷயங்கள் அவ்வப்போது வெளி வரும்.

**சந்தா விபரம்.**

சந்தா உள்நாட்டிற்கு ரூ. 7-8-0. வெளி நாட்டிற்கு ரூ. 9-0-0

தனிப்பிரதி அணா 3. ஸ்டாம்பு அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

விலாசம்:—**மானேஜர்,**

11, வெள்ளாளர்தெரு, புரசைபாக்கம், **சென்னை.**



## "லோகோபகாரி"

பழமையும் புதுமையும் வாய்ந்த வாரப் பத்திரிகையை நீங்கள் விரும்பினால் லோகோபகாரிக்குச் சந்தாதாரராய்ச் சேருங்கள். உலகத்துச் செய்திகளெல்லாம் லோகோபகாரியில் சுருக்கமும் விளக்கமுமாக வெளி வருகிறது. முப்பத்தைந்தாவதாண்டு நடக்கிறது.

பத்திராதிபர்: பரலி— சு. நெல்லையப்ப பிள்ளை.

லோகோபகாரி பத்திரிகாலயம்,

சிந்தாதிரிப் பேட்டை, சென்னை.

வருஷ சந்தா ரூபாய் நான்கு.

# TO LET.

புதிய மேஷின்கள்!        நேர்த்தியான வேலைகள்!!

உத்தமபாளையம்

# ஆனந்தா பிரஸ்.

விசிட்டிங் கார்டுகள்
விலாசங்கள்
விவாஹப் பத்திரிகைகள்
பில் பாரங்கள்
நோட்டீஸ்கள்
வால் போஸ்டர்கள்
ரசீதுப் புத்தகங்கள்
கணக்குப் புத்தகங்கள்
செக்ருல் புத்தகங்கள்
இதர புத்தகங்கள்
பத்திரிகைகள்
காலெண்டர்கள்

முதலிய எல்லாவித பிரிண்டிங், ரூலிங் & பைண்டிங் வேலைகளைப் பலவித வர்ணங்களில் நேரான பார்வையில் கைதேர்ந்த வேலைக்காரர்களால் அழகாகவும் நேர்த்தியாகவும் உயர்தரமாகவும் குறித்த காலத்தில் சகாயமாகவும் செய்து கொடுக்கப்படும்.

குறிப்பு:— எல்லாவித பேப்பர் தினுசுகளும் ஸ்டாக் செய்யப்பட்டிருக்கிறது.

மானேஜிங் புரோப்ரைட்டர்.

# "பாரதி"

## ஒரு தேசிய மாதப் பத்திரிகை.

சுதந்திரம் பொங்கி சமத்வம் ததும்பி சகோதரத்வம் ஜ்வலித்து
குறைந்த சந்தாவிலே நிறைந்த விஷயங்களால் உயர்ந்த
மாஸிகையாய் மத பேதமற்று ஜாதி பேதமற்றுக்
கட்சி பேதமற்று இந்தியரனைவரும் பாரத
மாதாவின் மக்களென்ற மேலான
கொள்கையுடன் தேசாபி
விருத்தியை முக்கிய
முதல்நோக்கமாகக்
கொண்டு

**தேச விடுதலைக்காக உழைக்கும்**
**தேசீய மணங் கமழும்**
**'பாரதி'க்கு**

உடனே சந்தாதார்களாய்ச் சேருங்கள். உங்கள்
நண்பர்களுக்கும் இதனைப்பற்றி அறிமுகம்
செய்து சந்தாதாரர்களாய்ச் சேர்த்து
உதவுங்கள்.

**சந்தா விபரம்.**

உள்நாடுகளுக்கு வருடத்திற்கு ரூ **2=0=0**
வெளி நாடுகளுக்கு ,, ரூ **2=8=0**
அல்லது **4** ஷிலிங்.

தனிப் (சாம்பிள் காப்பி) பிரதி விலை அணா 4. வேண்டுவோர்
ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

விலாசம் :—

பொறுப்பாளர்,
"பாரதி" ஆலயம்,
உத்தமபாளையம், மதுரை ஜில்லா.

Edited and Published by R. NARAYANASWAMI.
Printed at ANANDA PRESS, Uthamapalayam